விடுதலையின் விடிவெள்ளி

4152

73756

பப்ளிகேஷன்ஸ்
டிவிஷன்



நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சிங்கப்பூர் வானொலியில் இந்தியாவுக்கு உரை ஒன்றை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்.

விடுதலையின் விடிவெள்ளி

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்
தகவல் - ஒலிபரப்பு அமைச்சகம்
இந்திய சர்க்கார்

April 1970 (Vaisakha 1892)
வைசாக 1892 (ஏப்ரல் 1970)

HERALDS OF FREEDOM (Tamil)

Not For Sale
விற்பனைக்கு அல்ல

Published by the Director, Publications Division, Patiala House, New Delhi and Printed at Solar Works, Madras–1

பொருளடக்கம்

பாகம் 1: ஆசிச் செய்திகள்

ராஷ்டிரபதி

ராஷ்டிரபதி பவன்,
புது டில்லி—4
ஜுலை 19, 1968

நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் நிறுவிய ஆஜாத் ஹிந்த் தற்காலிக சர்க்காரின் 25-வது ஆண்டு விழாவின் நினைவாக ஒரு விசேஷ பிரசுரத்தைப் பப்ளிகேஷன்ஸ் டிவிஷன் வெளியிடுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

வெளிநாடுகளில் வாழ்ந்து வந்த பெருவாரியான இந்தியர்களைச் செயலில் இறங்கத் தூண்டிய ஆவேச அழைப்பாக அமைந்தது அந்த நிகழ்ச்சி. தங்கள் நாட்டுக்குள் நடந்து வந்த சுதந்திரப் போராட்டத்தை அவர்கள் உன்னிப்பாகக் கவனித்து வந்தனர்; அதிலும், இந்திய தேசிய காங்கிரஸ் பிரிட்டிஷ் காரர்களை 'இந்தியாவிலிருந்து வெளியேறுங்கள்' என்று கண்டிப்பாகக் கோரியபின் அவர்கள் அதிக உன்னிப்புடன் கவனித்து வந்தனர். இந்தியாவின் சுதந்திரத்தில் அக்கறை கொண்ட எல்லோரும் ஒன்று திரள்வதற்கு ஏற்ற ஒரு புதிய இலக்கை நேத்தாஜியின் இந்திய தேசிய ராணுவமும் தற்காலிக சர்க்காரும் ஏற்படுத்திக் கொடுத்தன. அதோடு நாட்டுக்குள் இருந்த சுதந்திரப் போர் வீரர்களுக்கு மிகுந்த ஊக்கத்தையும் உற்சாகத்தையும் இ. தே. ராவும் ஆஜாத் ஹிந்த் சர்க்காரும் அளித்தன.

அறிவுக் கூர்மையும், தீரச்செயல் புரியும் ஆர்வமும் ஒரு சேரப் பெற்றவர் சுபாஷ் சந்திர போஸ். இந்தியா

வில் அவர் புரிந்த செயல்களே அவருடைய நாமத்தை நாட்டின் வரலாற்றில் பிரதானமாகப் பொறிப்பதற் குப் போதுமானவை; அதோடு, ஆஜாத் ஹிந்த் சர்க் காரை அமைப்பதில் கொண்டுவிட்ட விறுவிறுப்பான நிகழ்ச்சிகள் அவருடைய பெயரை இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின் வரலாற்றில் மாத்திரமன்றி, ஐரோப் பிய - ஆசிய நாடுகளின் வரலாறுகளிலும் எடுப்பாகப் பதித்துள்ளன.

இந்திய பூமியான அந்தமானில் சுதந்திரக் கொடியை ஆஜாத் ஹிந்த் சர்க்கார் நாட்டிய செய லானது, பின்னர் 1947 ஆகஸ்ட் 15-ந் தேதி டில்லி செங்கோட்டையில் மூவர்ணக் கொடியை ஏற்றிய நிகழ்ச்சிக்கு முன்னோடிச் சின்னமாக விளங்கியது 'டில்லி சலோ!' இயக்கத்தில் நேத்தாஜியுடன் சேர்ந்தவர்கள், இன்று வாரீசுகளாக நாம் அனுபவிக்கும் சுதந்திரத்தை நமக்கு அருகாமையில் கொண்டு வந்தனர் ; அவர்கள் அனைவருக்கும் நாம் அஞ்சலியும் நன்றியும் செலுத்த வேண்டும்.

—ஜக்கீர் ஹுஸைன்

உப ராஷ்டிரபதி

உப ராஷ்டிரபதி
இந்தியா
புதுடில்லி
ஜூலை 17,1968

நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் சிங்கப்பூரில் நிறுவிய ஆஜாத் ஹிந்த் தற்காலிக சர்க்காரின் வெள்ளி விழாவின் நினைவாக ஒரு விசேஷப் பிரசுரத்தைப் பப்ளிகேஷன்ஸ் டிவிஷன் வெளியிடுவது குறித்து நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். சுபாஷ் சந்திரபோஸின் நெருங்கிய நட்பையும் சம்பந்தத்தையும் அனுபவிக்கும் பாக்கியம் பெற்றவன் நான். நவீன இந்தியாவை நிருமாணித்த சிற்பிகளின் வரிசையில்முதலிடம் பெற்றவர் அவர். நாட்டின் நலனுக்காக அவர் தம்மை அர்ப்பணித்துக்கொண்டு தியாகம் புரிந்தது. இந்திய வரலாற்றின் ஒளி மிகுந்த அத்தியாயங்களில் ஒன்ருக விளங்கும். சிங்கப்பூரில் ஆஜாத் ஹிந்த் ஃபௌஜையும் ஆஜாத் ஹிந்த் சர்க்காரையும் உருவாக்கிய மேதையாகிய நேத்தாஜி, இந்தியாவை அரசியல் அடிமைத்தனத்திலிருந்தும் பொருளாதார அடிமைதனத்திலிருந்தும் விடுதலை செய்வதற்காக அனவரதமும் அரும்பாடு பட்டார். "ஜெய் ஹிந்த்" என்ற மந்திர வாசகத்தை உருவாக்கிய நேத்தாஜியை நினைத்தவுடன், ஆஜாத் ஹிந்த் தற்காலிக சர்க்காரின் தலைமையில் செயல் புரிந்த இந்திய தேசிய ராணுவத்தின் மகோன்னத தியாகமும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சாகசங்களும் அடங்கிய வீரக்காவியம் நம் மனக்கண்முன் விரியும். ; அதன் தீரச் சாகசங்கள் நாகரிக மனித குலம் முழுவதன் வரலாற்றிலும் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. நாட்டின் ஐக்கியத்தைச்

சிதைக்கக்கூடிய வகுப்பு வாத, மொழிவாரிப் பிரிவினைகளையும் தடை மதில்களையும் தகர்த்தெறிந்து, நம்முடைய பொதுவான பொருளாதார, அரசியல், சமூக நலன்களையே முக்கியமாகக் கருதவேண்டும் என்ற தலையாய தேவையை நமக்கு இந்த வெள்ளி விழா நிகழ்ச்சி நினைவுறுத்த வேண்டும். இப்போதைய பெரும் பிரச்சினைகளை இவ்வாறு பகுத்தறிவுடனும் சமரச பாவத்துடனும் கவனித்தால்தான், நேத்தாஜியும் ஆஜாத் ஹிந்த் தற்காலிக சர்க்காரும் அருமையுடன் போற்றிய தேசிய புத்தெழுச்சி என்ற லட்சியக்கனவை நிறைவேற்ற வழிவகுக்க முடியும்.

—வி. வி. கிரி,

பிரதம மந்திரி

பிரதம மந்திரி இல்லம்
புதுடில்லி
ஜுலை 26, 1668

சுடர் விட்டுப் பிரகாசிக்கும் நாட்டுப்பற்று, உத்வேகம் ஆகியவற்றின் சின்னம் நேத்தாஜி சுபாஷ்சந்திர போஸ். அவருடைய வாழ்க்கையும் போதனையும் வருங்காலத் தலைமுறைகளுக்கெல்லாம் ஆதரிசமாக நிலைத்திருக்கும்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் அவர் ஆஜாத் ஹிந்த்சர்க்காரை அமைத்து அதற்குத் தலைமை தாங்கினார். நம்முடைய வரலாற்றிலே குறிப்பிடத் தக்க ஒரு நிகழ்ச்சி இது. இதன் நினைவாக, தாய்நாட்டின் எல்லைக்கு அப்பாலிருந்து நேத்தாஜி நிகழ்த்திய உரைகளின் தொகுப்பு ஒன்றைப் பப்ளிகேஷன்ஸ் டிவிஷன் வெளியிடுவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

—இந்திரா காந்தி

உள்துறை மந்திரி

உள்துறை மந்திரி
புதுடில்லி
ஜூலை *20, 1965*

சிங்கப்பூரில் நிறுவப்பட்ட ஆஜாத் ஹிந்த் தற்காலிக சர்க்காருடனும், ஆஜாத் ஹிந்த் ஃபௌஜ் என்ற உருவில் வெளிப்போந்த தீர தேசபக்திக் காவியம், தாய் நாட்டுக்கு அர்ப்பணிப்பு, வீரம் ஆகியவற்றுடனும் சம்பந்தப்பட்டவராக நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் நம் மனங்களில் சிரஞ்சீவியாக இருந்து வருவார். இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்து விட்டன ; நமது சுதந்திரப் போராட்டத்தின் அந்த அத்தியாயம்—நேத்தாஜியையும் அவருடைய ஆஜாத் ஹிந்த் ஃபௌஜையும் பற்றியது — இன்னமும் நமது கற்பனைக்குக் கனலூட்டுகிறது. நாட்டுப்பணி புரியும் நம் சங்கற்பத்தை வலுப்படுத்துகிறது. நேத்தாஜி நம்மிடையே இல்லை, ஆனால் இந்தியா உள்ளவரை அவருடைய நினைவு நிலைத்திருக்கும்.

ஒய். பி. சவான்

7

செய்தி - ஒலிபரப்பு மந்திரி

செய்தி–ஒலிபரப்பு மந்திரி
புது டில்லி
ஜூலை 25, 1968

நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸும் அவருடைய இந்திய தேசிய ராணுவமும், ஆஜாத் ஹிந்த் தற்காலிக சர்க்காரும் நிகழ்த்திய வீர காவியம் இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றிலே பெருமை மிகுந்த ஒரு அத்தியாயமாக விளங்குகிறது.

நேத்தாஜியின் அற்புத வாழ்க்கை வரலாறு, மலை போன்ற மன உறுதி, தணியாத சுதந்திர தாகம், இ. தே. ராவின் மறக்க முடியாத போர்கள் ஆகியவை வருங்காலத் தலைமுறைகளுக்கெல்லாம் ஆதரிச ஊற்றாக நிலைத்திருக்கும்.

நேத்தாஜியும் அவருடைய இ. தே. ராவும் இந்தியாவிலிருந்து அந்நிய ஆட்சியாளர்களைத் துரத்தியடிப்பதில் வெற்றி பெறாவிடினும், அவர்கள் இந்த உபகண்டத்திலிருந்து வெளியேறுவதைத் துரிதப்படுத்தும் சாத்னமாக (நேத்தாஜியும் இ. தே. ராவினரும், பெரிதும் பயன்பட்டனர். நேத்தாஜியும் அவருடைய இ.தே. ராவும் நடத்திய போராட்டமும் அனுபவித்த கஷ்டங்களும் வீண் போகவில்லை. அவர்களுடைய தீரச் சாகசங்கள் நாடெங்கிலும் தேசபக்தி வெள்ளம் பெருக்கெடுக்கச் செய்தன. சுதந்திரத்தின் விடிவெள்ளியாக அவர்கள் என்றென்றும் நம் நினைவில் நிலைத்திருப்பர்.

சிங்கப்பூரில் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் ஆஜாத் ஹிந்த் சர்க்காரை நிறுவியதன் வெள்ளி விழா நினைவு மலர் ஒன்றைப் பப்ளிகேஷன்ஸ் டிவிஷன் வெளியிடுவதை அறிந்து மகிழ்ச்சி கொள்கிறேன். ஆழ்ந்த தேசபக்தி வாய்ந்த இந்த வீரவரலாற்றிலிருந்து இளம் தலைமுறையினர் ஆதரிசம் பெறுவர் என்று நம்புகிறேன்.

—கே. கே. ஷா.

பாகம் - 2

நேத்தாஜி, இ. தே. ரா., ஆஜாத்ஹிந்த்

தற்காலிக சர்க்கார்

(ஏஸ். ஏ. ஐயர்)

நேத்தாஜி பிறவியிலேயே ஒரு கலகக்காரர், புரட்சிக்காரர் என்பதை நிகழ்ச்சிகள் நிரூபித்துக் காட்டிவிட்டன. ஆனுல் 1897 ஜனவரி 23-ந் தேதி, கட்டக் நகரில் தங்களுக்குப் பிறந்த ஆண் குழந்தை இந்திய வரலாற்றிலே ஒரு அழியாத முத்திரையைப் பதிப்பான் என்று ஜானகிநாத் போஸும் பிரபாவதி தேவியும் கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்கள். அது அவர்களுடைய ஒன்பதாவது குழந்தை, ஆருவது ஆண்குழந்தை. எனினும், இந்தப் பிள்ளை, சுபாஷ் சந்திரன், தன்னுடைய சகோதர சகோதரிகளேயும் தன் வயதுள்ள மற்றக் குழந்தைகளேயும் போலன்றி பெரிதும் வேறுபட்டவன் என்பதைப் பெற்றோர்கள் சீக்கிரமே தெரிந்து கொண்டனர்.

நேத்தாஜி குடும்பத்தின் வமிசாவளியில், சுமார் 27 தலைமுறைகள் முன்சென்ருல், தசரத போஸ் என்பவர், கல்கத்தாவுக்கு 14 மைல் தெற்கேயுள்ள மஹி நகரில் 'த்க்ஷி-ரார்ஹி' (தெற்கு வங்கம்) என்ற போஸ்களின் வமிசத்தை ஸ்தாபித்ததாகத் தெரியவருகிறது. நேத்தாஜ்யின் தந்தைவழி முன்னேர்களில் மஹிபதி என்பவர் அக்கால வங்க மன்னரின் நிதி-யுத்த மந்திரியாக இருந்தவர், கோபிநாத் என்பவர் பிற்கால வங்க அரசர் ஒருவரின் நிதி மந்திரியாகவும் கடற்படைத் தளபதியாகவும் இருந்தவர். நேத்தாஜியின் தந்தை

வழித் தாத்தா ஹரநாத்துக்கு நான்கு புதல்வர்கள் இருந்தனர்—ஜாதுநாத், கேதார்நாத், தேவேந்திரநாத், நேத்தாஜியின் தந்தையான ஜானகிநாத்.

கல்கத்தாவின் வடக்குப் பேட்டையாகிய ஹட்கோலாவைச் சேர்ந்த 'தத்' குடும்பத்தைச் சேர்ந்தவர் நேத்தாஜியின் தாயார் பிரபாவதி. தங்கள் செல்வம் காரணமாகவும், புதிய அரசியல் நிலைக்கு ஏற்பமாறிக் கொள்ளும்திறமை காரணமாகவும் தத் குடும்பத்தினர் பிரிட்டிஷ் ஆட்சியின் ஆரம்பக் கட்டத்தில் செல்வாக்குப் பெற்றனர். பிரபாவதியின் தந்தை கங்கா நாராயண் தத்தும், பாட்டனுரும் தங்கள் குடும்பத்துக் சூச்சரியான மாப்பிள்ளைகளைத் தெரிந்தெடுப்பதில் புகழ் பெற்றவர்கள்: கல்கத்தாவில் இருந்த பெரும் பணக்காரக் குடும்பங்களுடன் அவர்கள் திருமண உறவு ஏற்படுத்திக் கொண்டனர். கடுமையான பரீட்சைகள் மூலம் ஜானகிநாத்தின் புத்திசாலித்தனத்தைக் சோதித்துத் திருப்தி அடைந்த பின்னரே, அவருக்குத் தம் புதல்வி பிரபாவதியைக் திருமணம் செய்துவைக்க கங்கா நாராயன் சம்மதித்தார் என்று ஒரு கதைஉண்டு.

ஜானகிநாத் கல்கத்தாவில் பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்டு, கல்லூரிப் படிப்புக்காகக் கட்டக்கிற்குச் சென்றார். பின்னர் சட்டக் கல்விக்காகக் கல்கத்தா திரும்பினர்; 1835-ல் மறுபடியும் கட்டக்கிற்குச் சென்று வக்கீல் தொழிலைத் தொடங்கினர். கட்டக் நகரசபைத் தலைவர், அரசாங்க பிளீடர்-பிராசிகியூட்டர் என்ற பதவிகளை வகித்தார். 1912-ல் ஜானகிநாத் வங்காள சட்டசபைக் கவுன்சிலின் உறுப்பினரானர்; 'ராய்பகதூர்' பட்டத்தையும் பெற்றார். ஐந்தாண்டுகளுக்குப் பின், ஜில்லா மாஜிஸ்திரேட்டுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமைகள் காரணமாகஅரசாங்க பிளீடர்-பிராசிகியூட்டர்பதவியை அவர் ராஜினமாச் செய்தார்;

அதற்கு 13 ஆண்டுகள் கழித்து, 1930-ல், சர்க்காரின் அடக்குமுறைக்கொள்கையை ஆட்சேபிக்கும் வகையில் ராய்பகதூர் பட்டத்தையும் துறந்தார். கட்டக்கைச் சேர்ந்த கல்வி, சமூக நிறுவனங்களில் அவர் தீவிரப் பங்கு எடுத்துக்கொண்டார்; பல தரும காரியங்களுக்குப் பணம் கொடுத்தார்; இந்தத் தருமத்தில் கணிசமான பங்கு ஏழை மாணவர்களுக்குக் கிடைத்தது. இந்திய தேசியக் காங்கிரஸின் வருடாந்தரக் கூட்டங்களில் அவர் தவருமல் கலந்துகொண்டார், ஆனல் அரசியலில் தீவிர பங்கு பற்றவில்லே. 1921-ல், மஹாத்மா காந்தியின் தலேமையில், இந்தியா முழுவதிலும் ஒத்துழையாமை இயக்கம் பரவியபோது கதர், தேசியக் கல்வி போன்ற காங்கிரஸின் நிருமாண வேலேகளில் ஜானகிநாத்துக்குச் சிரத்தை ஏற்பட்டது ஆழ்ந்த மதப்பற்று வாய்ந்த அவர் எப்போதுமே ஏழை பாழைகளிடம் பரிவு கொண்டிருந்தார்; தாம் காலமாகுமுன் தம்முடைய பழைய வேலேக்காரர்களுக்கும் ஏழைப் பரிவாரத்தினருக்கும் பிரத்தியேகமாக நிதி ஒதுக்கிவைத்தார்.

வளரும் குழந்தை சுபாஷ் சந்திரருக்குக் கட்டக் நகரச் சூழ்நிலே முற்றிலும் பிடித்திருந்தது. இளமையில் வறுமையை அனுபவித்தவர்களுக்குச் சுயநலமும் பேராசையும் ஏற்படுவதுண்டு; ஆனல் அவர் வசதியுள்ள நடுத்தரக் குடும்பத்தில் வளர்ந்து வந்ததால் இந்த மோசமான குணங்கள் அவரைத் தீண்டவில்லே. இதே போல, ஆடம்பரமும் ஊதாரித்தனமும் நிறைந்த குடும்பங்களில் உள்ள அமிதமான செல்வம், அகம்பாவம் என்ற தீமைகளிலிருந்தும் அவர் தப்பினர். தங்களுடைய குழந்தைகளே எளிய முறையில் வளர்ப்பதில் நம்பிக்கை கொண்டவர்கள் அவருடைய பெறேர்கள்.

தமக்கு மேலே எட்டு அண்ண-அக்காள்களும், கீழே ஐந்துபேரும் இருந்தது இளம் சுபாஷின் மனேபாவத்

தைப் பாதித்தது. இத்தனை பெரிய குடும்பத்தில் அவர் இருந்த இடமே தெரியவில்லை; பெற்றோர்களைக் கண்டாலே அவருக்குச் சிம்ம சொப்பனம். எப்போதும் தனித்திருந்த அப்பாவிடமிருந்து குழந்தைகள் விலகியிருந்தனர். தாயாருடன் சற்று நெருங்கிப் பழகலாம் என்றாலும், அவரிடமும் பெரும்பாலான குழந்தைகளுக்குப் பயம்தான். மன உறுதியும் அனுபவ அறிவும் வாய்ந்த தாயார்தான் வீட்டில் ஆதிக்கம் செலுத்தினார்; கடுமையான உத்தியோக அலுவல்கள் காரணமாகத் தகப்பனார் இதில் தலையிடுவதில்லை.

பெற்றோர்களுடன் நெருங்கிப் பழகவேண்டும் என்று சுபாஷ் ஏங்கினார்; தங்கள் பெற்றோர்களின் இதயபூர்வமான நேசத்தைப் பெற்றிருந்த மற்றக் குழந்தைகளிடம் அவருக்குப் பொறாமை ஏற்படும். பல அண்ணாக்களும் அக்காள்களும் இருந்ததால் சுபாஷ் தம்மை ஒரு சுண்டக்காயாகவே கருதினார். அவர்களுக்குச் சமமாக உயர்வு பெறவேண்டும் என்ற அறைகூவல் அவரை நிரந்தரமாக வாட்டியது. இதனால் அவருக்கு அதீத நம்பிக்கையோ பிடிவாத புத்தியோ ஏற்படவில்லை; உழைப்பும் நன்னடத்தையுமே வெற்றிக்கு வழி என்பதை உணர்ந்தார். பெரிய குடும்பம் என்ற சூழ்நிலை அவருடைய மனத்தை விசாலப் படுத்தியபோதிலும், பிற்காலத்தில் வெகுஜனத் தலைவராக உயர்ந்தபோது கூட சங்கோசத்தை அவரால் விடமுடியவில்லை.

ஐந்தாவது வயதில் சுபாஷை கட்டக்கில் இருந்த ஆங்கிலப் பள்ளியில் சேர்த்தனர். அங்கு ஏழாண்டுக் காலம் நன்றாகக் கல்வி பயின்றார்; எனினும், அவருக்கு விசிராந்தி இல்லை. ஏனெனில், விளையாட்டுக்களிலும் தேகப் பயிற்சிகளிலும் அவர் கலந்து கொள்ளவில்லை; ஐரோப்பியப் பாணியில் அமைந்த அப்பள்ளியில் இவற்றுக்குக் கல்வியில் மிக முக்கியமான பங்கு இருந்தது.

தவிர, மாறுபட்ட இரு உலகங்களைச் சுபாஷ் கண்டார்– தம் குடும்பமும் சமூகமும் பிரதிபலித்த இந்தியா ஒரு உலகம் ; இங்கிலாந்தைப் போலிருந்த பள்ளிச் சூழ்நிலை மற்றொரு உலகம். அந்தப் பள்ளியைச் சேர்ந்த இந்திய மாணவர்கள் ஆண்டுப் பரீட்சைகளில் முதல்வர்களாக விளங்கினாலும், உபகாரச்சம்பளங்களுக்கான சில பரீட்சைகளில் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. தொண்டர் படையில் ஆங்கிலோ இந்தியப் பையன்கள் சேரலாம் இந்தியப் பையன்கள் சேரமுடியாது. ஒரே நிறுவனத்தில் சேர்ந்திருந்தாலும் இந்தியப் பையன்கள் ஒருதனி வர்க்கத்தினர் என்ற உண்மையை இவை போன்ற சிறு நிகழ்ச்சிகளின்வாயிலாகச் சுபாஷ் உணர ஆரம்பித்தார். பாடப் படிப்புக்குப் புறம்பான அலுவல்களில் சுபாஷ் கலந்து கொள்ளாமையால். அந்த அளவுக்கு அவருக்குச் சோர்வு உணர்வு எற்பட்டது. ஆனால், இந்திய வாழ்க்கை முறையையும் கலாசாரத்தையும் பிரதிபலித்த இந்தியப் பள்ளிக்கூடத்தில் அவர் சேர்ந்த அன்றே இந்த மனப்பான்மை விலகிவிட்டது. இந்தப் பள்ளியில்தான், தலைமை ஆசிரியர் வேணி மாதவ் தாஸின் உருவத்தில், அவருடைய வாழ்வை உருவாக்கிய முதலாவது முக்கிய சக்தி தோன்றியது. அவருடைய லட்சியவாதமும், கோட்பாடுகளும், பண்புகளும் சுபாஷின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தன. சுபாஷ் தூரத்தில் இருந்த வண்ணமே இவற்றையெல்லாம் கிரகித்துக் கொண்டார். விளையாட்டுக்களையும் தேகப்பயிற்சியையும் புறக்கணிப்பது அந்த இந்தியப் பள்ளியில் ஒரு களங்கமாகக் கருதப்படவில்லை ; இது சுபாஷுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவர் படிப்பிலேயே ஆழ்ந்துபோனார் ; தேகப்பயிற்சிகளை முன்னிலும் அதிகமாக உல்லங்கனம் செய்தார். அதனால், பிஞ்சிலே பழுத்தவராக, ஏகாந்த சிந்தனையாளராக அவர் துரிதமாக உருவானதில் வியப்பில்லை. தம்

முடைய லட்சிய மூர்த்தியாகிய தலைமையாசிரியர் வேணி மாதவ் தாஸ் அந்தப் பள்ளியிலிருந்து திடீரென மாற்றப்பட்டபோது சுபாஷ் வேதனையால் துடித்துப் போனார்.

ஏற்கனவே கடுமையான ஒரு மனப்போராட்டத்தைச் சுபாஷ் அனுபவித்துக் கொண்டிருந்தார்—அதாவது, தம்முடைய வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோளை வரித்துக் கொள்ள அவரால் முடியவில்லை. பெற்றோர்களுக்குக் கண்மூடித்தனமாகக் கீழ்ப்படியும் மனப்பான்மையில் பெரிய மாறுதல் ஏற்பட்டது. தாம் நினைத்ததைச் சாதிப்பதற்காக அவர்களை எதிர்க்கவும் துணிந்துவிட்டார். படிப்பில் அக்கறை குறையலாயிற்று ; நீண்ட தூரம் உலாத்துவதிலும், தம் வயதுப் பையன்களுடன் மணிக்கணக்காக விவாதிப்பதிலும் அதிக ஈடுபாடு ஏற்பட்டது.

இந்தக் கட்டத்தில்தான், அவருடைய வாழ்வை உருவாக்கிய இரண்டாவது பெருஞ்சக்தி எதிர்ப்பட்டது. விவேகானந்தரின் உரைகள், கட்டுரைகள் என்ற உருவில் அது வந்தது. அவ்வுரைகளை அவர் பேரார்வத்துடன் படித்தார். விவேகானந்தர் தம்முடைய வாழ்க்கையில் புகுந்தபோது சுபாஷுக்கு வயது பதினைந்துதான் ; இந்த அனுபவம் அவரிடம் ஒரு ஆன்மிகப் புரட்சியை ஏற்படுத்தியது ; அதன் விளைவாக எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. விவேகானந்தரிடமிருந்து அவருடைய குருநாதர் ராமகிருஷ்ண பரமஹறம்ஸரிடம் சுபாஷின் கவனம் திரும்பியது ; ராமகிருஷ்ணரின் சீடர்கள் பிரசுரித்த நூல்களிலும் நாட்குறிப்புகளிலும் உள்ள அவருடைய உபதேசங்களைப் படித்துக் கிரகித்துக் கொண்டார்.

சொந்த நாட்டுச் சேவை உட்பட மனித இனத்துக்குச் சேவை செய்வதுதான் மிக உன்னதமான

931

லட்சியம் என்ற போதனையை விவேகானந்தரிடம் சுபாஷ் கற்ருர். பெண்ணுசை, பொன்னுசையைத் துறப்பதுதான் ஒருவனின் ஆன்மிகப் பரிபக்குவத்துக்கு உரைகல் என்று ராமகிருஷ்ணர் வலியுறுத்தியிருந்தார்.

சுபாஷின் மனப் போராட்டம் முடிந்துவிட்டது. இப்போது அவருக்கு ஒரு புதிய லட்சியம் கிடைத்து விட்டது, அது அவருடைய ஆன்மாவுக்கு எழுச்சி ஊட்டியது—லோகாயத ஆசைகளையெல்லாம் துறப் பதன் மூலமும், அதீத பந்தங்களையெல்லாம் அறுத் தெறிவதன் மூலமும், தாம் கதிமோட்சம் பெறுவதுடன், மனித இனத்துக்கும் தொண்டாற்ற வேண்டும் என் பது தான் அந்த லட்சியம். அவரைக் கட்டுப்படுத்து வதற்குப் பெற்ரோர்கள் எவ்வளவு அதிகமாக முயன் றனரோ அதே அளவுக்கு அவரும் அடங்காப் பிடாரி யாக மாறினர்.

சுபாஷும் அவருடைய கோஷ்டியினரும் யோகாப் பியாசங்களில் இறங்கினர்; கட்டக்கிற்கு வந்த சாதுக் களைச் சந்தித்து அவர்களுடன் ஆன்மிகப் பிரச்சினைகள் பற்றி விவாதித்தனர்.

பதினறு வயதை எட்டுவதற்குமுன் ஒரு சிறிய அளவில் கிராமப் புனரமைப்பு வேலை புரியும் அனுபவ மும் சுபாஷுக்கு முதன் முதலாகக் கிட்டியது. ஆயினும் பள்ளிக்கூடத்தில் சுபாஷ் அரசியல் ரீதியில் முதிர்ச்சி பெறவில்லை. அவருடைய உள்ளார்ந்த ஆசைகள் வேறு துரையில் இருந்தது இதற்கு ஒரு காரணம், அரசியல் துறையில் ஒரிஸ்ஸா பின்தங்கியிருந்தது மற் ருெரு காரணம். அவ்வப்போது அண்ணன்மார்களிட மிருந்து இந்திய தேசிய காங்கிரஸ் பற்றிய தகவல்களை அவர் கேள்விப்பட்டார்; ஆனல், அவை அவ்வளவாக அவருடைய மனத்தைக் கவரவில்லை. அவருடைய வீட்டில் அரசியலுக்குத் தடை இருந்தது. அதனல்

அரசியல் நடவடிக்கை எதிலும் அவர் பங்கு பற்ற முடியவில்லை. எனினும் புரட்சிக்காரர்களின் உருவப் படங்களைக் கத்தரித்து அவற்றைத் தங்கள் படிப்பறைகளில் மாட்டி வைப்பதன் மூலம் அவரும் அவருடைய சகோதரர்களும் திருப்தி பெற்றனர்.

பதினைந்தாவது வயதில் சுபாஷுக்கு முதன் முதலாக அரசியல் விழிப்பு ஏற்பட்டது. அவர் மனப்பக்குவம் பெற்றிருந்த அத்தருணத்தில். கல்கத்தாவிலிருந்து அங்கு வந்த மாணவர் ஒருவர், கல்கத்தாவில் ஒரு கோஷ்டியினர் ஆன்மிக உயர்வையும், நிருமாணத் துறைகள் மூலம் தேச சேவையையும் லட்சியமாய்க் கொண்டு வேலை செய்து வருவதாகச் சுபாஷிடம் சொன்னார். அந்த மாணவர் தம்முடைய கல்கத்தாக் கோஷ்டியையும், நாட்டுக்குத் தாங்கள் செய்ய வேண்டிய கடமையையும் பற்றி சுபாஷிடமும், அவருடைய நண்பர்களிடமும் உணர்ச்சிவசமாகப் பேசினார். இது சுபாஷின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அப்போது முதல் அந்தக் கோஷ்டியுடன் அவர் நிலையான தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார். பள்ளி வாழ்க்கை முடிவுறும் சமயத்தில் அவருடைய மத ஆர்வம் முற்றிவிட்டது. படிப்பு தன்னுடைய முதல் ஸ்தானத்தை இழந்துவிட்டது.

மனம் விரிவடைவதற்கு ஏற்ற வீட்டுச் சூழ்நிலையில் வளரும் வாய்ப்புக் கிட்டியது சுபாஷின் அதிர்ஷ்டம் தான். முதலில் அவர் ஒரு ஆங்கிலப் பள்ளியிலும் பின்னர் இந்தியப் பள்ளியிலும் படித்ததும், பள்ளியில் இருக்கும்போதே வெளி மாகாணத் தொடர்புகளும் நட்புறவுகளும் ஏற்பட்டதும், அவருடைய திருஷ்டியை மேலும் விரிவுபடுத்தின. இளம் பருவத்திலேயே ஏற்பட்ட தொடர்புகள் பொதுவாக முஸ்லிம்கள் சம்பந்தமான அவருடைய மனப்பான்மையைப் பெரிதும் உரு

வாக்கின—முஸ்லிம் பேட்டையில் அவர் வசித்தது, தம் தந்தையை ஒரு பெரியவராக முஸ்லிம்கள் மதித்ததை அவர் கண்டது, முஸ்லிம் ஆசான்களையும் சகமாணவர்களையும் பெற்றிருந்தது, விசுவாசமுள்ள முஸ்லிம் வேலைக்காரர்கள் வீட்டில் இருந்தது ஆகியவையே இவை.

மதத்திலும் யோகத்திலும் சுபாஷ் தீவிர ஈடுபாடு கொண்டு தம் விருப்பம்போல் சஞ்சரிக்கவும் செயல் புரியவும் உரிமை கொண்டாடியபோது பெற்றோர்களின் கட்டளைகள் குறுக்கிட்டன. அவற்றை மீறுவதில் அவருக்குத் தயக்கம் ஏற்படவில்லை; ஏனெனில் தன்னிறைவு பெறுவதற்காக எதிர்த்து நிற்பது அவசியம் என்ற நம்பிக்கை அவருக்கு விவேகானந்தரின் ஆதரிசத்தினால் அப்போது ஏற்பட்டிருந்தது. படிப்பைப் புறக்கணித்துச் சாம்பாலாண்டிகள் பின்னால் ஓடும் உதவாக்கரைப் பையன், பித்துக்குளி, பிடிவாதக்காரர் என்று அவரை உபாத்தியாயர்களும் பெற்றோர்களும் கருதியிருக்கக்கூடும். அவருக்கோ தம்முடைய அகக் கனவுகளைத் தவிர வேறு எதிலும் அக்கறை இல்லை. கண்டிப்பு அதிகரிக்க அதிகரிக்க அவருடைய பிடிவாதமும் அதிகரித்தது. சூழ்நிலையை மாற்றினால் அவர் மாறக்கூடும் என்றும், கல்கத்தாவில் எதார்த்தவாதச் சூழ்நிலை அவருடைய பித்துக்குளித்தனத்தைப் போக்கி சகஜ வாழ்வில் அவரை ஈடுபடுத்தும் என்றும் பெற்றோர்கள் பின்னர் நினைத்தனர்.

1913-ல், பதினைந்து வயது பூர்த்தியான சமயத்தில் அவர் மெட்ரிக்குலேஷன் பரீட்சை எழுதினார். பல்கலைக் கழகத்திலேயே இரண்டாமவராக அதில் தேறினார். பெற்றோர்கள் மகிழ்ச்சியுடன் அவரைக் கல்கத்தாவுக்கு அனுப்பிவிட்டனர்.

பள்ளிப்படிப்பை முடிக்கும் தருணத்தில் அவர் தமக்கெனச் சில முடிவுகளை வகுத்திருந்தார். பழைய

தடத்திலேயே செல்லாமல், தம்முடைய ஆன்மிக நலனுக்கும் மனித இனத்தின் மேம்பாட்டுக்கும் உகந்த வாழ்க்கையை நடத்த அவர் தீர்மானித்திருந்தார். வாழ்வுக்கு ஒரு பொருளும், குறியும் உண்டு என்றும், அந்த குறிக்கோளை அடைவதற்காக உடலையும் உள்ளத்தையும் முறையாகப் பயன்படுத்துவது அவசியம் என்றும் கல்லூரி வாழ்க்கையின் ஆரம்பத்தில் சுபாஷ் உறுதியாக நம்பினர். பிந்தைய ஆண்டுகளில் சோதனைகளும் கஷ்டங்களும் எதிர்ப்பட்டபோது இந்தச் சுய கட்டுப்பாடு அவருக்குக் கைகொடுத்து உதவியது.

கட்டக்கில் பித்துக்குளிப் பள்ளி மாணவர்களின் சிறிய கோஷ்டியில்தான் சுபாஷ் சேர்ந்திருந்தார்; கல்கத்தாவிலோ அவர்களின் பெருங் கூட்டங்கள் காணப்பட்டன. இதைக் கண்டு அவருடைய பெற்றோர்கள் திகைத்தனர். ராஜதானிக் கல்லூரியில் சேர்வதற்குமுன்பே, கோடை விடுமுறையின்போதே, அவர் முந்திய ஆண்டில் கட்டக்கில் சந்தித்த மாணவத் தூதனின்கோஷ்டியுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டார். கல்லூரியில், தம்மைப் போன்ற மனப்பான்மை கொண்ட சகாக்களை அவர் தேட ஆரம்பித்தார். வகுப்பில் அவருடைய கோஷ்டியினர் எளிய நடையுடை பாவனைகளுடன் இருந்ததால் பிறருடைய கவனம் அவர்களிடம் திரும்பியது. ஆனால் அவர்கள் எதையும் பொருட்படுத்தவில்லை.

அவருடைய கல்லூரி ஒரு அரசாங்க ஸ்தாபனமாக இருந்தபோதிலும் மாணவர்களிடம் ராஜவிசுவாசம் சிறிதேனும் இல்லை. சிறந்த மாணவர்களே அங்கு அனுமதிக்கப்பட்டதால், அவர்கள் சுயேச்சையான சிந்தனையாளர்களாக இருந்தனர்; பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுடைய ரகசியப்போலீஸின் கவனத்தை அவர்கள் ஈர்த்தனர். ராஜத்துவேஷத்தின் வளர்ப்புப்

பண்ணையாகவும், புரட்சிக்காரர்கள் சந்திக்கும் இடமாக வும் கல்லூரியின் பிரதான ஹாஸ்டல் கருதப்பட்டது ; அங்கு போலிசார் அடிக்கடி சோதனை போட்டதில் ஆச்சரியம் இல்லை. 'புதிய விவேகானந்தர் கோஷ்டி' என்று தங்களை அழைத்துக்கொண்ட சுபாஷும் அவருடைய நண்பர்களும், மதத்தையும் தேசியத்தையும் இசைப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அப்போது கல்கத்தாவில் நிலவிய சூழ்நிலையில் தேசியத் துக்கு முதன்மை அளிப்பதைத் தவிர்க்க முடியவில்லை. தேசியப் புனரமைப்பின் மூலம், குறிப்பாகக் கல்வித் துறையைச் சீரமைப்பதன் மூலம், சமூகத்துக்குச்சேவை செய்யவேண்டும் என்று விவேகானந்தர் வலியுறுத்தி யிருக்கிறுர். சுபாஷின் கோஷ்டி ஒரு புதிய கல்வித் திட்டத்தை அமுல் நடத்த விரும்பியது; அதற்கு ஆயுத்தமாகப் பேராசிரியர்களாகப் பயிற்சி பெறத் தகுதி வாய்ந்த புத்திசாலி மாணவர்களைக் கோஷ்டியில் சேர்த்துக்கொள்வதில் விசேஷ கவனம் செலுத்தப்பட் டது. ஆன்மிக வெளிச்சமும் ஆதரிசமும் அளிக்கக் கூடிய பெரியவர்களைத் தேடிக்கொண்டு அவர்கள் தங்கள் வாராந்தர விடுமுறைகளையும் மற்ற ரஜா நாட்களையும் பெரும்பாலும் வெளியிடங்களிலேயே கழித்தனர்; அனுமதியில்லாமலே இவ்வாறு வெளியே போய்விடுவர்.

அரசியல் துறையில் பயங்கரவாதச் செயல்களையும் ரகசியச் சதியாலோசனைகளையும் அந்தக் கோஷ்டியினர் எதிர்த்தனர். அதனுல் வங்காளப் பயங்கரவாதப் புரட்சி இயக்கச் சூழ்நிலை நிலவிய அச்சமயத்தில் மாண வர்களின் அபிமானத்தை அக்கோஷ்டியினர் அவ்வள வாகப் பெறமுடியவில்லை. எனினும், கோஷ்டியினர் விறுவிறுப்புடன் செயல்புரிந்ததால் ரகசியப் போலீஸா ருக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

சுபாஷ் பட்டம் பெறுவதற்கு முந்திய கட்டத்தில், அரவிந்த கோஷ்தான் வங்காளத்தில் மிகப் பிரபலமான தலைவராக விளங்கினார்; 1909-முதல் அவர் தாமாகவே பிரெஞ்சுப் பகுதியான புதுச்சேரியில் ஒதுங்கி வாழ்ந்தும் அவருடைய பிராபல்யம் நீடித்திருந்தது. அரவிந்தரின் மாதச் சஞ்சிகையான 'ஆரியா'வை சுபாஷ் வழக்கமாகப் படித்து வந்தார்; அந்த யோகியின் ஆழ்ந்த தத்துவம் அவர் உள்ளத்தில் பதிந்தது—பல்வேறு யோகங்களைத் தகுந்த முறையில் ஒருவர் கையாண்டு படிப்படியாக மகோன்னதச் சத்தியத்தை எட்டிப் பிடிக்கலாம் என்பது அவருடைய போதனை. வங்க வீரர்களுள் ஒருவரும், இந்திய தேசிய காங்கிரஸின் சிற்பிகளுள் ஒருவருமான சுரேந்திரநாத் பானர்ஜி சுபாஷின் மனத்தைக் கவரவில்லை. பானர்ஜி ஒரு அலங்கார, வாசாலகப் பேச்சாளராக இருந்தும், அரவிந்தரின் பின்கண்ட எளிய வாசகத்தில் இருந்த ஆழ்ந்த உணர்ச்சி அவரிடம் இல்லை என்று சுபாஷ் கருதினார். ''உங்களில் சிலர் மகாபுருஷர்களாக உருவாவதைக்காண விரும்புகிறேன், உங்கள் நலனுக்காக அன்றி பாரதத்தை மகத்தான நாடாக்குவதற்காக நீங்கள் மகத்தானவர்களாக வேண்டும்; அப்போதுதான் இந்நாடு உலகின் சுதந்திர நாடுகளின் மத்தியில் தலைநிமிர்ந்து நிற்கமுடியும். உங்களுள் ஏழைகளாகவும் அனாமதேயங்களாகவும் உள்ளவர்களின் ஏழ்மையும் தாழ்மையும் தாய்த் திருநாட்டின் தொண்டுக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். பாரதமாதா சுபிட்சம் பெறுவதற்காக நீங்கள் உழையுங்கள், அவள் ஆனந்தம் அடைவதற்காக நீங்கள் கஷ்டப்படுங்கள்''—ஆதரிசம் ஊட்டும் இந்த அரவிந்த வாசகத்தைத் தம் அண்ணா அடிக்கடி ஆசையுடன் பாராயணம் செய்ததைச் சுபாஷ் கேட்டிருந்தார்.

இதுவரை அரசியலில் சிரத்தை கொள்ளாமல், மத போதகர்களைச் சந்திப்பதிலும், சமூக சேவைக்குத் தகுதி பெறுவதிலும் மாத்திரமே சுபாஷ் கவனம் செலுத்தி வந்தார். ஞாயிறுதோறும் வீடு வீடாகச் சென்று யாசித்து உணவும் பணமும் சேகரித்து ஏழைகளுக்கு உதவி புரிந்து வந்த ஒரு சங்கத்துக்கு அவர் ஆதரவு அளிக்கத் தொடங்கினார். யாசகத்துக்குச் சென்ற மாணவத் தொண்டர்களுடன் அவரும் சேர்ந்து கொண்டார். முதல் நாளன்று கையில் கோணியுடன் அரிசிப் பிச்சைக்காகச் சென்றது சுபாஷுக்கு ஒரு புதுமையான வேதனையான அனுபவமாக இருந்தது; பெருத்த அவமான உணர்ச்சியை அடக்குவதற்கு அவர் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. கல்லூரியில் பேராசிரியர்களும் அவர்களுடைய பேருரைகளும் சுபாஷுக்கு ரசிக்கவில்லை. அதனால் படிப்பை அவர் புறக்கணித்தார். எனினும், பிரபல ரசாயனவாதியும் தர்மிஷ்டருமான ஸர். பி. ஸி. ரே போன்ற பேராசிரியர்களிடம்வலிந்து சென்று பரிச்சயம் செய்து கொண்டார். விவாதங்களுக்கு ஏற்பாடு செய்வது, வெள்ள, பஞ்ச நிவாரணங்களுக்காக நிதி பிரிப்பது, கல்லூரி அதிகாரிகளிடம் மாணவர்கள் சார்பில் பேசுவது, சக மாணவர்களுடன் சுற்றுலாச் செல்வது போன்ற மாணவ சமூகத்தின் பல்வேறு நடவடிக்கைகளில் சுபாஷ் கலந்து கொண்டார். தன்னுள் முடங்கிக் கிடக்கும் மனப்பான்மையை அவர் விரைவிலேயே கைவிடத் தொடங்கினார்.

ஒரு சமயம், கல்லூரி விடுமுறையின்போது அவர் கட்டக்கில் பெற்றோர்களுடன் தங்கியிருக்கையில், சில மைல் தொலைவில் இருந்த ஒரு இடத்தில் காலரா நோய் பீடித்தன. அங்கு சிகிச்சை புரிவதற்காகச் சென்ற பழைய மாணவ சகாக்களின் கோஷ்டியில் அவரும் சேர்ந்து கொண்டார். அந்தப் பயங்கரத்

தொற்று நோய் தங்களைப் பிடிக்காதபடி தற்காப்பு எதையும் அக்கோஷ்டியினர் செய்து கொள்ளவில்லை; பாதிக்கப்பட்ட கிராமவாசிகளைக் காப்பாற்றுவதி லேயே ஒருமுகமான கவனம் செலுத்தினர். சுபாஷ் நீண்டகாலம் திரும்பி வராததைக்கண்டு பெற்றோர்கள் கவலைகொண்டனர்; அவர் என்ன காரியத்துக்காகப் போயிருந்தார் என்பதை அறிந்ததும் பீதி அடைந்து மீட்புக் கோஷ்டி ஒன்றை அவர்கள் அனுப்பினர்.

விடுமுறைக்குப் பின் கல்கத்தா திரும்பியதும், முன் போலவே சாதுக்களைத் தேடி அலைவதில் சுபாஷ் ஈடுபட் டார். கல்கத்தாவிலிருந்து சுமார் 60 மைல் தொலை வில் இருந்த ஒரு துறவியை அவர் எதேச்சையாகச் சந் தித்தார். ''வானமே கரை, புல்லே படுக்கை, எதேச் சையாகக் கிடைத்ததே உணவு'' என்ற லட்சியத்தைக், கொண்டவர் அந்தத் துறவி. இது சுபாஷின் உள்ளத் தில் ஆழமாகப் பதிந்தது. ஒரு குருவைத் தேடிப் பெற வேண்டும் என்ற அவருடைய ஆவல் பெருகிக் கொண்டே வந்தது; 1914 கோடை விடுமுறையின் போது, 17 வயதில், அவர் ஒரு நண்பருடன் சந்தடி யின்றி யாத்திரை கிளம்பி விட்டார், வீட்டில் யாரிட மும் சொல்லவில்லை. ரிஷிகேசம், ஹர்த்துவார், மதுரா, பிருந்தாவனம். வாரணசி, கயை ஆகிய பிரபல க்ஷேத் திரங்களுக்கு அவர் சென்றார்.

ஆனல் அவர் பெரிதும் விரும்பியபடி குரு எவரும் கிடைக்கவில்லை; ஏமாற்றத்துடன்தான் கல்கத்தா திரும்பினர். சில நாட்களுக்குப்பின் அவரை டைபா யிட் சுரம் பிடித்தது—தீர்த்த யாத்திரைக்கும் குரு வேட்டைக்கும் கிடைத்த பரிசு.

சுபாஷ் வியாதியுடன் படுத்திருக்கையில் முதலா வது உலக யுத்தம் மூண்டது.

கல்லூரி அல்லது ஹாஸ்டலில் பயங்கரவாதப் புரட்சி இயக்கத் தலைவர்களை சுபாஷ் அடிக்கடி சந்தித்ததுண்டு; ஆனால் அவர்களிடம் அவருக்கு ஈடுபாடு ஏற்படவில்லை. அஹிம்ஸையில் நம்பிக்கை இதற்குக் காரணம் அல்ல; அவர் சொந்த உலகம் ஒன்றை சிருஷ்டித்துக் கொண்டிருந்தார் என்பதும், தேசியப் புனரமைப்பே மக்களுக்குக் கதி மோட்சம் என்று அவர் நம்பியதுமே காரணம். இந்தியாவின் பாதுகாப்பை பிரிட்டிஷாரிடம் ஒப்படைத்துவிட்டு, சிவில் நிர்வாகத்தை மாத்திரம் இந்தியர்கள் வைத்துக்கொள்வது நடைமுறை சாத்தியமான ஏற்பாடாக இருக்காதா என்று அவருடைய கோஷ்டியினர் சில சமயங்களில் தீவிரமாக விவாதித்தனர். ஆனால், இரண்டு காரணங்களால் சுபாஷ் சீக்கிரமே அரசியல் பக்குவம் பெற்று, தமக்கென ஒரு தனிப்பாதையை வகுத்துக் கொண்டார். ஒன்று கல்கத்தாவில் இருந்த பிரிட்டிஷ்காரர்களின் நடத்தை; இன்னொன்று முதலாவது உலக யுத்தம்.

டிராம்கள், வீதிகள், ரயில்கள் ஆகியவற்றில் இந்தியர்களிடம் பிரிட்டிஷ்காரர்கள் அகம்பாவத்துடனும் தடித்தனமாகவும் நடந்து கொண்டது பற்றிய செய்திகளைச் சுபாஷ் அடிக்கடி படித்திருந்தார். இத்தகைய சம்பவங்களுக்கு அவரும் ஆளானதுண்டு. அவர் ரோஷம் மிகுந்தவர் என்பதுடன் குழந்தை முதல் வேறு மாதிரியான சூழ்நிலைக்குப் பழக்கப்பட்டவர். இத்தகைய இனச் சச்சரவுகளில் இந்தியர்களுக்குச் சட்டம் சாதகமாக இல்லை. ஆனால் இந்தியர்கள் சட்டத்தைப் பொருட்படுத்தாமல் செயலில் இறங்கியபோது கைமேல் பலன் கிடைத்தது. அதனால் அடியைத் தவிர வேறு எதற்கும் ஆங்கிலேயன் மசியமாட்டான் என்ற எண்ணம் பரவி விட்டது. வங்காளப் பயங்கரவாதப் புரட்சி இயக்கத்தின் மனோபாவ அடிப்படை இதுவே.

ரசமட்டமான இந்த அனுபவங்கள் சுபாஷின் அரசியல் உணர்வைத் தட்டியெழுப்பின. அதேசமயத் தில் ராணுவ வலிமையற்ற ஒரு நாடு தன்னுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது என்ற உண்மையை முதலாவது உலக யுத்தம் அவருக்கு உணர்த்தியது.

ஈராண்டுகளாகப் படிப்பை உல்லங்கனம் செய்த போதிலும், 1915–ல், இன்டர்மீடியட் பரீட்சையில் சுபாஷ் மதிப்புடன் தேறினர். பி.ஏ., பட்டப்படிப்பில் தத்துவ சாத்திரத்தை விசேஷ பாடமாகக் கொண்ட தன் மூலம் தம் நெடுநாள் ஆசையை அவர் பூர்த்தி செய்துகொண்டார்; கல்லூரி வாழ்க்கையிலேயே அப்போதுதான் படிப்பில் அவருக்கு அக்கறை ஏற்பட்டது. ஆனல், அடுத்த வருஷ ஆரம்பத்தில் கல்லூரியில் நிகழ்ந்த ஒரு திடீர்ச் சம்பவத்தினல் அவருடைய பள்ளி வாழ்க்கை கடும் அதிர்ச்சிக்கு உள்ளாயிற்று. இ. எஃப். ஓட்டென் என்ற பிரிட்டிஷ் பேராசிரியரின் பிரசங்க மண்டபத்தை அடுத்த வரந்தா வில் போய்க்கொண்டிருந்த சுபாஷின் வகுப்புத் தோழர்கள் மீது அந்தப் பேராசிரியர் கைநீட்டி விட்டார். வகுப்பின் பிரதிநிதி என்ற முறையில் சுபாஷ் இது குறித்துப் பிரின்ஸிபாலிடம் புகார் செய்தார்; ஆனல் திருப்திகரமான பதில் கிடைக்க வில்லே. எல்லா மாணவர்களும் பொது வேலே நிறுத்தம் செய்தனர்; வகுப்புக்கு வராத மாணவர்கள் அனேவருக்கும் பிரின்ஸிபால் அபராதம் விதித்தார். எனினும், இரண்டு நாட்களுக்குப் பின், ஸ்ரீ ஓட்டென் மாணவர் பிரதிநிதிகளுடன் சமரசம் செய்துகொள்ள வேண்டியதாயிற்று.

ஒரு மாதம் கழிந்தபின் இதேபோன்ற மற்ருெரு நிகழ்ச்சி காரணமாகச் சில மாணவர்கள் ஸ்ரீ ஓட்டெனே

அடித்துவிட்டனர். இதைச் சுபாஷ் நேரில் பார்த்தார், ஆனால் தாக்குதலில் அவர் கலந்துகொள்ளவில்லை. கல்லூரியை மூடும்படி சர்க்கார் உத்தரவிட்டனர். அந்த உத்தரவின் வாசகம் சம்பந்தமாகச் சர்க்காருடன் கருத்து வேறுபட்ட பிரின்ஸிபால் தம் வேலையைத் துறந்தார்; ஆனால் விலகுமுன் சுபாஷை அவர் அழைத்து, ''போஸ், இந்தக்கல்லூரியிலேயே பெரியவிஷமக்காரன் நீதான்; உன்னை 'சஸ்பெண்ட்' செய்திருக்கிறேன்'' என்றார். இந்த உத்தரவைக் கல்லூரியின் நிர்வாகக் குழு ஊர்ஜிதம் செய்தது; கல்லூரியிலிருந்து சுபாஷ் விலக்கப்பட்டார். படிப்பு முடிந்துவிட்டது; எதிர் காலம் இருள்மயமாக, நிச்சயமற்றதாக இருந்தது. ஆனால் அவர் வருந்தவில்லை; மாறாத ஒரு உன்னதத் திருப்தியே அவருக்கு ஏற்பட்டது: தலைமைப் பண்பை யும் அதில் உள்ள தியாகத்தையும் அவர் முதன் முத லாகச் சற்றே ருசிபார்த்து விட்டார். அவருடைய தனிப் பண்பு உருவாகிவிட்டது; வருங்காலத்தை உறுதியுடன் எதிர்நோக்கும் தகுதி வந்துவிட்டது இந்த மன நிலையில் சுபாஷ் கல்கத்தாவிலிருந்து. புறப்பட்டு கட்டக்கிற்கு, தம் பெற்றோர்களிடம் சென்றார்.

பெற்றோர்கள் அவருடைய நிலையைப் புரிந்து கொண்டு அனுதாபம் காட்டியதைக் கண்டு அவருக்கு ஆச்சரியமே ஏற்பட்டது. வேறு வேலை எதுவும் இல்லா மையால் சமூக சேவையில் சுபாஷ் மூழ்கினார்; குறிப் பாக, காலரா அல்லது வைசூரியால் பீடிக்கப்பட்ட ஏழைபாழைகளுக்குச் சிகிச்சை செய்வதிலும், இந் நோய்களால் இறந்தவர்களின் தகனத்திற்கு நிதி பிரித்து ஏற்பாடு செய்வதிலும் ஈடுபட்டார்.

கட்டக்கில் ஒரு வருஷத்தைக் கழித்தபின், கல்கத்தா பல்கலைக் கழகத்தில் தம் அதிர்ஷ்டத்தை

மறுபடியும் சோதித்துப் பார்ப்பதற்காக அவர் சென்ருர். அப்போது பல்கலைக் கழகம் ஸர். அஷு டோஷ் முகர்ஜியின் சர்வாதிகாரத்தில் இருந்தது, தம் விஷயத்தைப் பல்கலைக் கழகம் மறுபரிசீலனை செய்வதற்காகக் காத்திருந்து பொறுமையை இழந்த சுபாஷ், '49-வது வங்காளிப் பட்டாள'த்தில் சேர்வ தற்கு முயன்ருர். ஆனுல் கண் பார்வை சரியாயில்லை என்று அவரை நிராகரித்து விட்டார்கள். சர்வ கலாசாலை தனது முடிவை மாற்றிக்கொள்வதற்குள் மற்ருெரு வருஷம் கழிந்துவிட்டது. அவருடைய பழைய கல்லூரியான ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியின் அப்போதைய பிரின்ஸிபால் அவரைச் சேர்த்துக் கொள்வதற்கு ஆட்சேபனை எதுவும் சொல்லவில்லை. சுபாஷின் இரண்டாவது அண்ணு சரத் சந்திர போஸின் முயற்சியால் அவர் கல்லூரியில் மறுபடி சேர முடிந்தது. இப்போது சுபாஷ் மிகுந்த அக்கரையுடன் படிக்க ஆரம்பித்தார். 'இந்திய பாதுகாப்புப் படை'யின் (பிராந்திய சேனை) பல்கலைக் கழகப் பிரிவிலும் அவர் சேர்ந்துகொண்டார். வில்லியம் கோட்டை அருகே நடந்த பயிற்சி முகாமில் சுபாஷ் காக்கி உடுப்பு அணிந்து துப்பாக்கி சுடும் பயிற்சி பெற்ருர். காவி யுடை தரித்த துறவிகளின் காலடியில் முன்பு அமர்ந் திருந்த தாம், இப்போது தோளில் துப்பாக்கியுடன் நின்று ஒரு பிரிட்டிஷ் அதிகாரியின் கட்டளைப்படி நடப்பதை எண்ணி எண்ணி வியந்தார். சிப்பாய்ப் பயிற்சியில் அவருக்கு மிகுந்த மகிழ்ச்சிதான் ஏற்பட்டது ; வலிமை உணர்வுக்கும் தன்னம்பிக்கைக் கும் அது ஊக்கமளிப்பதாக அவர் கருதினுர். முதல் நாளன்று, துப்பாக்கி பெறுவதற்காக மற்றப் பயிற்சி யாளர்களுடன் வில்லியம் கோட்டைக்குள் அணிவகுத் துச் சென்றபோது அவருக்கு ஒரு விநோத உணர்ச்சி ஏற்பட்டது. இந்தியர் என்ற முறையில் வில்லியம்

கோட்டையில் அவர் நுழைய முடியாது,ஆனல் சிப்பாய் என்ற முறையில் அவரை வரவேற்க அதன் கதவுகள் திறந்துவிடப்பட்டன. நகர வீதிகளில் அணிவகுத்துச் சென்றபோது அவருக்குப் பெருமை தாங்க முடியவில்லை; தங்களைத் தொந்தரவு செய்து மிரட்டிக் கொண்டிருந்த போலீஸாரையும் மற்ற அரசாங்கச் சிப்பந்திகளையும் விடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று அவரும் அவருடைய சகாக்களும் நினைத்துக் கொண்டனர்.

1919–ல் நடந்த பி.ஏ. பரீட்சையில், தத்துவ சாத்திர ஆனர்ஸ் பிரிவில் சுபாஷுக்கு முதல் வகுப்பு கிடைத்தது; ஆனல் சிறப்பு ஜாபிதாவில் இரண்டாவது இடமே பெற்றார். இதில் அவருக்குச் சிறிது ஏமாற்றம் தான்.

எம். ஏ. வகுப்பில் பரீட்சார்த்த மனத்தத்துவப் பிரிவை அவர் எடுத்துக்கொண்டார். ஆனல் சில மாதங்களுக்குப் பின் திடீரென அவருடைய தந்தை கல்கத்தாவுக்கு வந்து, சரத் போஸுடன் கலந்து பேசியபின், இந்திய சிவில் சர்வீஸ் பரீட்சைக்குப் படிப்பதற்காக இங்கிலாந்துக்குப் போகச் சம்மதமா என்று சுபாஷிடம் கேட்டார்; ஐ. ஸி. எஸ். ஸில் சேர்வதுதான் அந்த நாளில் இந்திய இளைஞர்களின் மாபெரும் ஆசைக்கனவாக இருந்தது. சுபாஷ் 24 மணி நேரத்துக்குள் முடிவு கூறவேண்டியிருந்தது. முற்றிலும் எதிர்பாராத யோசனை இது. ஐ. ஸி. எஸ். ஸில் சேர்ந்து பிரிட்டிஷ்காரர்களின் கீழ் சேவகம் செய்வதா என்று மனச்சாட்சி உறுத்தியது. எனினும், புறப்படலாம் என்றே அவர் தீர்மானித்தார்—இங்கிலாந்து போய்ச் சேர்ந்தபின் இருக்கக்கூடிய எட்டு மாத அவகாசத்தில் தம்மால் அந்தப் பரீட்சையில் தேற முடியாது என்று தமக்குள் சொல்லிக்கொண்டார்.

தவிர, வயது வரம்பு காரணமாக அந்தப் பரீட்சையை எழுத அந்த ஒரே ஒரு வாய்ப்புத்தான் அவருக்கு இருந்தது. அப்படியே பரீட்சையில் தேறிவிட்டால், பின்னர் என்ன செய்வது என்பதைத் தீர்மானிக்க எவ்வளவோ அவகாசம் இருக்கும் என்றும் அவர் நினைத்தார்.

1919 செப்டம்பர் 15-ந் தேதி சுபாஷ் இங்கிலாந்துக்குக் கப்பலேறினர். ஐந்து வாரங்களுக்குப்பின் அங்கு போய்ச் சேர்ந்ததும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் இடம் கிடைத்தது; நவம்பர் மாதம் முதல் வாரத்தில் படிப்பை ஆரம்பித்தார். அவர் இங்கிலாந்துக்குப் புறப்படு முன்னரே ஜலியான்வாலாபாக் படுகொலை நிகழ்ந்துவிட்டது; பஞ்சாபில் ராணுவச் சட்டம் அமுலில் இருந்தது; கடுமையான தகவல் தணிக்கை காரணமாக, லாகூரிலும், அமிர்தசரஸிலும் ஏதோ பயங்கரச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என்று தெளிவற்ற வதந்திகள் மாத்திரமே வங்காளத்தை எட்டியிருந்தன. பஞ்சாபில் என்ன நடந்துகொண்டிருந்தது என்பது மொத்தத்தில் இந்திய மக்களுக்குத் தெரியாது; சுபாஷும் மெத்தன உணர்ச்சியுடன் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச்சென்றார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் அபரிமிதமான பேருரை வகுப்புகளுக்கு அவர் போகவேண்டியிருந்தது. சிவில் சர்வீஸ் பரீட்சைக்கான பாடங்கள் வருமாறு; ஆங்கில வியாசம், சம்ஸ்கிருதம், தத்துவ சாத்திரம், ஆங்கிலேயச் சட்டம், அரசியல் கலை, நவீன ஐரோப்பிய வரலாறு, இங்கிலாந்தின் வரலாறு, பொருளியல், பூகோளம்.

கேம்பிரிட்ஜில் மாணவர்களுக்குக் கணிசமான சுயேச்சை இருந்தது, மரியதையும் இருந்தது—இது

தான் சுபாஷின் மனதைப் பெரிதும் கவர்ந்தது. போலீஸ்காரர்களும், ஒவ்வொரு மாணவனும் புரட்சிக் காரனே என்ற சந்தேகமும் நிறைந்த கல்கத்தா நகரத் துக்கு முற்றிலும் மாறுபட்டதாக இது காணப்பட்டது.

கேம்பிரிட்ஜில் சேர்ந்து எட்டு மாதங்களுக்குப்பின் 1920 ஜூலை மாத ஆரம்பத்தில், லண்டனில் நடந்த சிவில் சர்வீஸ் பகிரங்கப் போட்டிப் பரீட்சையை சுபாஷ் எழுதினர். கடுமையாக உழைத்திருந்த போதி லும் அவருக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லை. ஆனல் பரீட்சையில் தாம் தேறியதுடன், நாலாவது ஸ்தானத் தையும் பெற்றுவிட்டதைக் கண்டு அவர் வியப்படைந் தார்.

அவருடைய வாழ்க்கையிலேயே அதுவரை ஏற்பட் டிராத மிக மிகக் கடினமான பிரச்சினை அப்போது எழுந்தது. தம்முடைய ஆசைக் கனவுகளுக்கும் அபிலா ஷைகளுக்கும் சீட்டுக் கொடுத்துவிட்டு வசதியான வாழ்க்கையில் அமர்வதா? அவர் இறுதியாக முடிவுக்கு வருவதற்குள் ஏழு மாதங்கள், வேதனை நிறைந்த மாதங்கள், கழிந்தன. அதற்கிடையே இரண்டாவது அண்ணு சரத்துடன் இது சம்பந்தமாகத் கடிதப் போக்குவரத்து நடத்தினர்.

சுபாஷின் உள்ளக் கிடக்கையை இக் கடி தங்கள் வெளிப்படுத்துகின்றன—தம்முடைய பெற் ருேர்களுக்கு மிகுந்த வேதனை அளிக்கக்கூடிய மாபெரும் முடிபு ஒன்றை அவர் வகுக்க வேண்டியிருந்தது. அந் தக் கடிதங்களிலிருந்து சில வாசகங்கள் வருமாறு :—

''சிவில் சர்வீஸ் ஒருவருக்குச் சகலவிதமான லோகாயத வசதிகளையும் அளிக்க முடியும். ஆனல் இந்த வசதிகள் எல்லாம் ஆன்மாவைப் புறக்

கணிப்பதால் கிடைப்பவை அல்லவா?......சிவில் சர்வீஸ் விதிகளுக்குப் பணிவது என்பதும், தேசிய, ஆன்மிக அபிலாஷைகளும் பரஸ்பரம் முரண்பட்டவை.

"பயன் தரும் காலத்தைக் கடந்து ஜீவித்திருக்கும் ஒரு அமைப்பின், மற்றும் பழைமைப் பித்து, சுயநல அதிகாரம், சிவப்பு நாடா ஆகியவற்றின் அரணாக உள்ள ஒரு அமைப்பின், ஒரு பாகமாக நான் இருப்பது என்ற கருத்தைக் கொள்கை பூர்வமாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது......

"நான் பிரிவு சாலையில் நிற்கிறேன், சமரச ஏற்பாடு எதுவும் சாத்யம் அல்ல. ஒன்று, இந்த அழுகிப்போன சர்வீஸை உதறிவிட்டு நாட்டின் நலனுக்காக என்னை முழு மனதுடன் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்; அல்லது என்னுடைய இலட்சியங்கள், அபிலாஷைகள் அனைத்துக்கும் விடைகொடுத்து அனுப்பிவிட்டு இந்தச் சர்வீஸில் சேரவேண்டும்.........

"சி. ஆர். தாஸ் இந்த வயோதிக தசையில் எல்லாவற்றையும் துறந்துவிட்டு நிச்சயமற்ற ஒரு வாழ்க்கையை ஏற்றுக்கொள்ள முடியும் என்றால், என்னைப் போன்ற லோகாயகப் பிடுங்கல்கள் இல்லாத ஒரு இளைஞன் அவ்வாறு செய்வதற்கு அவரைவிட மிக அதிகமான ஆற்றல் உண்டு......

"அரவிந்த கோஷின் ஆதரிச உதாரணம் என் மனக்கண்முன் விசுவருபம் எடுத்து நிற்கிறது. அந்த எடுத்துக்காட்டு என்னிடம் கோருகின்ற தியாகத்தைப் புரிவதற்கு நான் தயாராய் இருப்பதாக உணர்கிறேன்......

''நாம் உரிய விலை கொடுக்கத் தயாராய் இருந்தால், பத்தாண்டுகளுக்குள், அதற்கு முன்பே கூட, சுயாட்சி கிடைத்துவிடும் என்று நம்பு கிறேன். தியாகங்களும் கஷ்டமுமே அந்த விலை. தியாகம், கஷ்டம் என்ற அடித்தளத்தின் மீதுதான் நம்முடைய தேசியக் கட்டுக்கோப்பை எழுப்ப முடியும். நாம் எல்லோரும் நம்முடைய உத்தியோ கங்களில் ஒட்டிக்கொண்டு, நம்முடைய சொந்த நலன்களிலேயே கருத்தாக இருந்தால், ஐம்பது வருஷங்களில்கூட நமக்குச் சுயாட்சி கிடைக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை......

''நாம் ஒரு தேசிய சமுதாயத்தை உருவாக்க வேண்டியிருக்கிறது; ஹாம்ப்டன், கிராம்வெல்* ஆகியோருடையது போன்ற லட்சியப் பிடிப்பின் மூலமே ஒரு தேசிய சமுதாயத்தை உருவாக்க முடியும் ....

''பிரிட்டிஷ் சர்க்காருடன் சகல விதமான உறவுகளையும் நாம் அறுத்துவிட்டுத் தலைமுழுக வேண்டும் என்று இப்போது கருதுகிறேன்...........

''ஒரு சர்க்காரை ஒழிப்பதற்குச் சிறந்த வழி அதிலிருந்து விலகுவதுதான்.........சில நாட்களுக்கு முன் என் ராஜினாமாவை அனுப்பிவிட்டேன்......

''என்னுடைய கடிதம் ஒன்றுக்கு சி. ஆர். தாஸ் எழுதியுள்ள பதிலில், ஏற்கனவே நடந்து வருகின்ற பணியைப் பற்றிக் குறிப்பிட்டிருக் கிறார். தற்போது உண்மையான ஊழியர்களுக்குப்

* ஹாம்ப்டனும், கிராம்வெல்லும் பிரிட்டிஷ் வீரர்கள் முந்திய வர் எதேச்சாதிகார வரி விதிப்பை எதிர்த்தவர், பிந்தியவர் இங்கிலாந்தில் முடியாட்சியை ஒழித்துச் சிறிதுகாலம் குடி யாட்சியை ஸ்தாபித்தவர்.

பஞ்சம் ஏற்பட்டிருப்பதாக அவர் வருந்துகிறார். ஆகவே நான் நாடு திரும்பும்போது எனக்கு உகந்த பணி எவ்வளவோ கிடைக்கும்.........மாற்ற முடியாத சங்கற்பம் செய்துவிட்டேன், அதிலிருந்து நன்மையைத் தவிர வேறு எதுவும் விளையாது என்று உன்மையுடன் நம்புகிறேன்.''

'இன்றையக் குழந்தையே நாளைய மனிதனின் தந்தை' என்பது (ஆங்கிலப்) பழமொழி. சுபாஷின் குழந்தைப் பருவம், பாலியம், பல்கலைப்படிப்பு முடியும்வரை அவருடைய இளமைப்பருவம், ஆகியவற்றை நான் இதுவரை விஸ்தரித்ததற்குக் காரணம் உண்டு. அதாவது, வீட்டிலும், பள்ளியிலும், இந்தியா மற்றும் இங்கிலாந்தில் கல்லூரிகளிலும், அவர் உருவாகிய விதமும், சிறந்த உத்தியோக வாழ்வை அவர் வேண்டுமென்றே துறந்ததும், பின்னர் 25 வருஷ காலத்துக்கு இந்திய அரசியலின் மாபெரும் கலகக்காரராக அவர் கடைபிடிக்கவிருந்த மார்க்கத்தைச் சந்தேகத்துக்கு இடமின்றிச் சுட்டிக்காட்டின.

1921–ஜூலை 16–ந் தேதி, இந்திய மண்ணுக்கு, பம்பாய்க்கு, திரும்பியபோது, (23 வயதைச் சற்று முன் தாண்டியிருந்த சுபாஷ்) எத்தகைய எதிர்காலத்தையும் ஏற்றுக் கொள்வதற்குத் தம் உடலையும், உள்ளத்தையும், அறிவையும், ஆன்மாவையும் பக்குவப்படுத்தி வைத்திருந்தார். தாம் விதியில் நம்பிக்கை கொண்டவர் என்று பிற்காலத்தில் அவர் ஒப்புக் கொண்டபோதிலும், தாம் ஒரு மகத்தான சாதனை புரிய வேண்டியவர் என்ற உணர்வைப் பிறவியிலேயே பெற்றிருந்தார்; அந்த லட்சியத்தை நிறைவேற்றுவதற்காக ஓய்வு ஒழிவின்றிப் பாடுபட்டார். தாய் நாடு திரும்பிய அன்றே சுதந்திர இயக்கத்தில் அவர் தலைகுப்புறக் குதித்ததில் ஆச்சரியமில்லை; அன்று

முதல், 25 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு நாள், ஆஜாத் உறிந்த் (சுதந்திர இந்திய) தற்காலிக சர்க்காரின் அதிபர் என்ற ஹோதாவில் அவர் சைகோனிலிருந்து ஒருமுக்கிய காரியமாக விமானத்தில் புறப்பட்டுச் சென்றதுவரை, ஓய்வு என்றால் என்ன என்பதே அவருக்குத் தெரியாது.

சுபாஷ் பம்பாயில் இறங்கியதும், லாபர்னம் ரஸ்தாவில் மஹாத்மா காந்தி தங்கியிருந்த ஜாகைக்குச் சென்று அவரைப் பார்த்தார். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிராக, மேலும் மேலும் முற்றக்கூடிய ஒத்துழையாமை இயக்கத்தை நாடு முழுதிலும் தொடங்கியிருந்த அந்தத் தலைவருடன் அளவளாவிப் பேசினர். அவ்வியக்கத்தில் சுபாஷும் சேரவிருந்தார்; அதனால் மஹாத்மாவின் மனநிலையை அறிந்து செயல் திட்டத்தைத் தெளிவாகச் தெரிந்து கொள்ள விரும்பினர். சுபாஷின் கேள்விமாரிக்கு மஹாத்மா தமக்கே உரிய பொறுமையுடன் பதில் அளித்தார். மூன்று விஷயங்கள் பற்றிச் சுபாஷ் விளக்கம் கோரினர். காங்கிரஸ் நடத்திவந்த பல்வேறு நடவடிக்கைகளும் வளர்ந்து, இயக்கத்தின் கடைசிக் கட்டமாகிய வரி கொடாப் போராட்டத்தை எவ்வாறு எட்டிப் பிடிக்க முடியும்? வரி கொடாமையும், சட்ட மறுப்பும் மாத்திரம் எவ்வாறு சாக்காரைப் பின்வாங்கவைத்து இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கச் செய்ய முடியும்? ஓராண்டுக்குள் சுயராஜ்யம் பெற்றுத்தருவதாக இந்திய தேசிய காங்கிரஸின் முந்திய வருடாந்தர மகாநாட்டிலிருந்து அதுவரை மஹாத்மா வாக்களித்துக் கொண்டிருந்தார்; அது எவ்வாறு சாத்தியம்? முதல் கேள்விக்குக் கிடைத்த பதில் சுபாஷுக்குக் திருப்தி அளித்தது; மற்ற இரண்டு கேள்விகளுக்கும் கிடைத்த விடைகள் திருப்தி அளிக்கவில்லை எனினும், கல்கத்தா போய்ச் சேர்ந்ததும் தேசபந்து சித்தரஞ்சன் தாஸைச் சந்திக்

கும்படி மஹாத்மா கூறிய யோசனையை அவர் ஏற்றுக் கொண்டார்.

சுபாஷ் தம் வாழ்க்கையிலேயே முதன் முறையாக மஹாத்மா காந்தியைச் சந்தித்தது அப்போதுதான். பொதுவாழ்வின் வாயிலில் அடியெடுத்து வைக்கத் தயாராக நின்ற அந்த இளைஞருக்கு அது நிரந்தர முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பாக அமைந்தது; உடனடியான நோக்கம் சம்பந்தப்பட்டவரை அது தோல்வியே கண்டது. 1921 ஜூலை மாதம் பம்பாயில் மஹாத்மாவைச் சுபாஷ் முதன் முறையாகச் சந்தித்தது முதல், 1940 ஜூன் மாதம் வர்தாவில் கடைசியாகச் சந்தித்தது வரை, அவர்களுடைய அரசியல் உறவுமுறை பெரும்பாலும் ஒரே மாதிரியாகவே இருந்தது—அதாவது, அந்நிய ஆட்சியிலிருந்து இந்தியா விடுதலை பெற வேண்டும் என்ற இறுதிக் குறிக்கோள் பற்றி இருவரிடையேயும் உடன்பாடு காணப்பட்டது; ஆனால் அந்தக் குறிக்கோளை அடைவதற்கான வழிமுறை பற்றி அடிப்படைக் கருத்து வேற்றுமைகள் காணப்பட்டன. அஹிம்ஸையை நிரந்தரக் கோட்பாடாகக் கொண்டிருந்தார் மஹாத்மா; சுபாஷோ, இந்திய மண்ணிலிருந்து அந்நிய ஆட்சியாளனை விரட்டுவதற்காகப் பலாத்காரத்தை உபயோகிப்பது அவசியம் என்று உறுதியாக நம்பினர். இந்தியாவுக்குச் சுதந்திரம் பெறுவதற்கான சுபாஷின் முயற்சி வெற்றிபெற்றால், தம்முடைய பாராட்டுத் தந்திதான் அவருக்கு முதலில் கிடைக்கும் என்று, தங்களுடைய கடைசிச் சந்திப்பின் போது மஹாத்மா குறிப்பிட்டதாகச் சுபாஷே எழுதி வைத்திருக்கிறார்.

நிற்க, வரலாற்றைத் தொடர்வோம். சுபாஷ் கல்கத்தா போய்ச் சேர்ந்ததும் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் தேசபந்து தாஸைச் சந்

த்தார். அவர்கள் பேசி முடித்தபோது சுபாஷும் ஒரு திடமான முடிவுக்கு வந்துவிட்டார். தமக்கு ஒரு தலைவர் கிடைத்துவிட்டார், அவரைப் பின்பற்ற வேண்டும் என்று அவர் தீர்மானித்தார், அரசியல் காரணங்களுக்காக முன்பு பல்கலைக் கழகத்திலிருந்து தாம் விலக்கப்பட்ட பொழுது, உதவி நாடிச்சென்ற அதே ஸ்ரீ. தாஸ் அல்ல இப்போதைய தேசபந்து. ஒரு நாளில் பல்லாயிரம் சம்பாதித்து ஒரு மணியில் பல்லாயிரம் செல விட்டுக் கொண்டிருந்த அந்த ஸ்ரீ. தாஸ் அல்ல இவர். முந்தையது போன்ற அரண்மனை அல்ல அவருடைய இப்போதைய வீடு, ஆனால் எப்போதும் இளைஞர்களின் நண்பராக இருந்து, அவர்களுடைய அபிலாஷைகளைப் புரிந்துகொண்ட, அவர்களுடைய துயரங்களுக்கு அனுதாபம் காட்டிய அதே ஸ்ரீதாஸ்தான் இவரும். தம்முடைய நோக்கம் என்ன என்று அறிந்த மனிதர் அவர் என்பதை, இளமையை ஒரு குறைபாடாகக் கருதாமல் பெருமையாகக் கருதும் மனிதர் அவர் என்பதை சம்பாஷணையின்போது சுபாஷ் உணர ஆரம்பித்தார்.

சுபாஷ் சீக்கிரமே கல்கத்தாவில் குடியமர்ந்து நாட்டு நிலைமையை ஆராய ஆரம்பித்தார். நாடு முழுதிலும் முன்பின் கண்டறியாத உற்சாகம் காணப்பட்டதால், 'முப்பகிஷ்கார' இயக்கம்-விதேசித் துணியையும் சட்ட மன்றங்கள்—கோர்ட்டுகளையும், கல்வி நிலையங்களையும் பகிஷ்கரிப்பது–வெற்றி பெறுவதற்கு ஓரளவு நல்ல வாய்ப்பு இருந்தது. மிதவாதிகள் உட்பட, படித்த கூட்டத்தினர் சிலர், ஒத்துழையாமை இயக்கத்தை எதிர்த்த போதிலும், அஹிம்ஸைக் கோட்பாட்டைப் 'புரட்சிக் கட்சி' எதிர்த்த போதிலும் மஹாத்மாவுக்கு அபரிமிதமான வெகுஜன ஆதரவு இருந்தது. ஆனால், ஏறக்குறைய 1921 ஆம் வருஷ இறுதிவரையில், தேசவியாபகமாகச் சர்க்காருடன் மோதல் ஏற்படுவதற்கான அறிகுறியே தென்படவில்லை.

வாக்களிக்கப்பட்டப்படி 'ஓராண்டுக்குள் சுயராஜ்யம்' வருவதற்கான அடையாளமும் இல்லை, இவ்வாறு காங்கிரஸ் தாழ்ந்திருந்த சமயத்தில், வேல்ஸ் இள வரசர் இந்தியாவுக்கு வருகை புரியப் போவதாக, நவம் பர் மாதம் பம்பாயில் வந்து இறங்கப் போவதாக சர்க்கார் அறிவித்தனர். அந்த விஜயத்தைப் பகிஷ் கரிக்கவேண்டும் என்று காங்கிரஸ் தலைமையினர் உட னடியாகத் தீர்மானித்தனர். கல்கத்தாவில் பகிஷ் காரம் முழு அளவில் வெற்றி பெற்றதால், காங்கிரஸ் தொண்டர் படையைச் சட்டவிரோதமாக்க வேண்டும் என்று வங்காள சர்க்காரைப் பிரிட்டிஷாருக்குச் சொந் தமான பத்திரிகைகள் தூண்டிவிட்டன. ஆயிரக்கணக் கான மாணவர்களும் ஆலைத் தொழிலாளர்களும் தொண்டர் படையில் சேர்ந்திருந்தனர்; நகரின் இரு பெருஞ் சிறைச்சாலைகளையும் அரசியல் கைதிகள் நிரப் பினர். இதற்கு முன்பே காங்கிரஸ் உறுப்பினராகச் சுபாஷ் சேர்ந்திருந்தார்; இந்தப் பகிஷ்கார இயக்கம் அவர் பொறுப்பில் விடப்பட்டது. பொங்கிவந்த எதிர்ப்பு அலையை அடக்குவதற்காகச் சர்க்கார் தீவிர நடவடிக்கையில் இறங்கினர்; தேசபந்து தாஸையும், சுபாஷ் சந்திர போஸ் உட்பட அவருடைய நெருங்கிய சகாக்களையும், கைது செய்ய உத்தரவிடப்பட்டது; 1921 டிசம்பர் 10-ந் தேதி மாலைவாக்கில் அவர்கள் சிறையில் அடைக்கப் பட்டனர். தம்முடைய அரசியல் வாழ்க்கையிலேயே சுபாஷ் பிரிட்டிஷ்காரர்களால் கைது செய்யப்பட்டது இதுதான் முதல் தடவை; 1941-ல் அவர் தம்முடைய ஜாகையிலிருந்து மறைந்ததுவரை, அதாவது 20 வருஷ காலத்திற்குள், அவரை பிரிட்டிஷ் காரர்கள் பதினோரு முறை அரசியல் கைதியாகச் சிறை வைத்தனர். 1921 டிசம்பரில் சுபாஷ் கைது செய்யப் பட்டதால், வங்காள தேசியக் கல்லூரியின் பிரின்ஸிபா லாகவும், வங்க மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் பிர

சார அதிகாரியாகவும், தேசியக் தொண்டர் படைத் தளபதியாகவும் அவர் பார்த்து வந்த அலுவல்கள் திடீ ரென நின்றுபோய்விட்டன.

அந்த ஆண்டு முடிவதற்குள், மஹாத்மா காந்தி நீங் கலாக மற்ற முன்னணித் தலைவர்கள் எல்லாரும்—பண் டித மோதிலால் நேரு, லாலா லஜ்பத்ராய், தேசபந்து தாஸ் உட்பட–சிறையில் இருந்தனர். அரசியல் உடன் பாடு காண்பதற்காக வைசிராய் ரீடிங் பிரபு தெரிவித்த யோசனை சம்பந்தமாக மஹாத்மாவுக்கும் மற்றத் தலை வர்களுக்கும் இடையே கருத்து வேற்றுமைகள் எழுந் தன. சிறையிலிருந்த தேசபந்து தாஸ் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளும்படி மஹாத்மாவை வலி யுறுத்தினர். அனல் காலம்கடந்த பின்னரே மஹாத்மா சம்மதம் தெரிவித்தார், அதற்குள் வைசிராயின் மனம் மாறிவிட்டது. ஆயுளில் ஒரே முறை கிடைக்கக்கூடிய வாய்ப்பு தவறிவிட்டதாகத் தேசபந்துவும் வேறு பல ரும் கருதினர்.

1922–ல் ஒத்துழையாமை இயக்கம் இறங்குமுகமாகி விட்டது; ஐக்கிய மாகாணத்தினைச் சேர்ந்த (இப்போ தைய உத்தரப் பிரதேசம்) சௌரி சௌரா என்ற இடத்தில் போலீஸார் மீது ஜனங்கள் வன்முறையைப் பிரயோகித்ததை ஆட்சேபித்து வரி கொடா இயக் கத்தை மஹாத்மா காந்தி நிறுத்தி வைத்தார். அதற்கு ஒரு மாதம் கழித்து, 1922 மார்ச்சில், மஹாத்மா அஹமதாபாத்தில் கைதானர்; அவருக்கு ஆறுவருஷ வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அதே ஆண் டில், சிறையிலிருந்த தேசபந்து தாஸும் அவருடைய சகாக்களும் ஒரு திட்டம் தயாரித்தனர் – சட்டசபை களில் பிரவேசித்து நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்வ தற்கான திட்டம் அது. மஹாத்மாவின் அத்தியந்த சீடர்கள் இந்தச் சட்டசபைப் பிரவேசத் திட்டத்தை

எதிர்த்தனர்; ('மாறுதல் வேண்டாதோர்' என்று அவர்கள் அழைக்கப்பட்டனர்) அவ்வருஷ இறுதியில் கயாவில் தேசபந்துவின் தலைமையில் காங்கிரஸ் மகாநாடு நடந்தபோது 'சுயராஜ்யக் கட்சி' என்ற புதுக் கட்சியைத் தாங்கள் அமைத்திருப்பதாகப் பண்டித மோதிலால் நேரு அறிவித்தார். காங்கிரஸின் அதிகார பூர்வமான கொள்கைக்கு எதிராகத் தாம் செயல்புரிவதற்கு வசதியாகக் காங்கிரஸ் அக்கிராஸனர் பதவியை தேசபந்து தாஸ் ராஜினமாச் செய்தார்.

அவ்வருஷ ஆரம்பத்தில் விடுதலை செய்யப்பட்ட சுபாஷ் சந்திரபோஸ், ஸர் புரபுல்ல சந்திர ரேயின் தலைமையில் வெள்ள நிவாரண வேலையில் ஈடுபட்டார்; 'வங்காளர் கதா' என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் அவர் பொறுப்பு ஏற்றுர். மாகாண மத்தியச் சட்ட மன்றங்களுக்கான தேர்தல்களில் போட்டியிடுவது என்ற சுயராஜ்யக் கட்சியின் வேலைக்கிரமத்துக்கு நாட்டின் பல பாகங்களில் பொதுஜன ஆதரவு அதிகரித்து வந்தது. சுயராஜ்யக் கட்சியின் புதிய தினசரிப் பத்திரிகையான 'ஃபாவர்டி'ன் நிர்வாகப் பொறுப்பைச் சுபாஷ் போஸ் ஏற்றுக்கொண்டார்; அத்துடன் வங்க மகாணக் காங்கிரஸ் கமிட்டியின் செயளாளர் பதவியையும் வகித்தார்.

சட்டசபைப் பிரவேசத் திட்டத்தை 1924 மார்ச் மாதத்தில் கையாண்டுபார்த்தபோது சுயராஜ்யக் கட்சிக்கு அமோகமான வெற்றி கிடைத்தது. தேசபந்து தாஸ் கல்கத்தாவின் மேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்; 27-வயதுச் சுபாஷ் போஸ் பிரதம நிர்வாக அதிகாரியாக நியமனம் பெற்றுர். மேயரும் தம்முடைய குருநாதருமான தாஸின் ஆதரிசத் தலைமையின் கீழ் கல்கத்தா கார்ப்பரேஷனின் நிர்வாகத் தலைவர் பதவியை வகித்த சுபாஷ், கார்ப்பரேஷனுக்

கும் கல்கத்தா மக்களுக்கும் இடையே நிலவிய உறவு முறையைப் புரட்சிகரமாக மாற்றினர்; நகரத்தில் இருந்த பிரிட்டிஷ் சுயநலமிகள் தங்கள் முக்கியத் துவத்தைத் திடீரெனப் பறிகொடுக்க நேர்ந்தது. நகரசபை அதிகாரிகளும் மற்றச் சிப்பந்திகளும் பொது ஜன ஊழியர்களே தவிர எஜமானர்கள் அல்ல என்பதை மக்கள் முதன் முதலாக உணர ஆரம்பித்த னர். பிரதம நிர்வாக அதிகாரிக்கு மாதம் ரூ. 3,000 சம்பளம் உண்டு என்றபோதிலும், சுபாஷ் போஸ் 1,500 ரூபாயே போதும் என்று சொல்லிவிட்டார். அந்தப் பதவியின் பெறும் பொறுப்புகள் அவருடைய நேரம் முழுவதையும், கவனம் முழுவதையும் கவர்ந்தன. ஆனால் அக்டோபர் மாதத்தில் அவரையும் வேறு பல காங்கிரஸ்காரர்களையும் சர்க்கார் கைது செய்துவிட்டனர். ஒரு புரட்சிச் சதியை ஒடுக்கு வதற்கே இக்கைதுகள் என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர் கள் கூறியபோதிலும், நாடெங்கிலும் ஓங்கிவந்த சுய ராஜ்யக் கட்சியின் செல்வாக்கை எப்படியாவது ஒடுக்கு வதற்கான முயற்சியே அது. கார்ப்பரேஷனில் சுயராஜ்யக் கட்சியின் நிர்வாகத்தை ஒழிப்பதே சர்க்காரின் உண்மையான நோக்கம் என்று பொது ஜனங்கள் கருதியதால், சுபாஷ் போஸ் கைது செய்யப் பட்டதைக் கண்டித்து அவர்கள் கடுமையாகக் கிளர்ச்சி செய்தனர். சர்க்கார் அவரை முதலில் வங்காளச் சிறைச்சாலைகளில் வைத்திருந்தனர்; பின்னர் பர்மா வில் உள்ள மாண்டலேச் சிறைக்கு மாற்றினர். (அப்போது பர்மாவும் இந்தியாவும் ஒரே நிர்வாகத்தில் இருந்தன) இதே சிறைச் சாலையில்தான் லோகமானிய பாலகங்காதர திலகர் ஆறுண்டுகளும், லாலா லஜ்பத் ராய் ஓராண்டுக் காலமும் அடைக்கப்பட்டிருந் தனர் அந்த மாபெரும் இந்தியத் தேசபக்தர்களின் நினைவுடன் மாண்டலே சிறைக்கு இருந்த தொடர்பு சுபாஷுக்கு

ஓரளவு ஆறுதல் அளித்தது. ஏறத்தாழ இரண்டரை வருஷ காலம் அவர் மாண்டலேயில் இருந்தார்; பிறகு தேக அசௌக்கியம் காரணமாக 1927 மே மாதத்தில் அவரை வங்காளத்துக்குத் திரும்பக் கொண்டுவந்து விடுதலை செய்தனர். மாண்டலே சிறையில் இருந்தபொழுது, துர்க்கை பூஜை போன்ற மதப் பண்டிகைகளைக் கொண்டாடுவதற்கு பிரிட்டிஷ் அதிகாரிகள் அனுமதியளிக்காததை ஆட்சேபித்து அவர் ஆறுவார காலம் உண்ணுவிரதம் இருந்தார். வங்காளி களுக்கு மிக முக்கியமான பண்டிகை துர்க்கை பூஜை

மாண்டலே சிறையிலிருந்து கல்கத்தாவுக்குக் கொண்டுவரப்பட்டு விடுதலையாவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, சுபாஷுக்கு மிகமிகச் கடுமை யான துக்கம் தரும் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது— அவருடைய தலைவர், தேசபந்து தாஸ் காலமாகி விட்டார், அரசியல் அரங்கிலிருந்து தேசபந்துவின் பேருருவம் மறைந்தது இந்தியாவுக்கே மாபெரும் துரதிருஷ்டம்; சுயராஜ்யக் கட்சியோ முடமாகி விட்டது.

இவ்வாறு, தாய்நாட்டிலிருந்து இரண்டரை வருஷ காலம் அரசியல் காரணத்துக்காகப் பிரஷ்டம் செய்யப் பட்டிருந்து, பின்னர் சுபாஷ் சந்திரபோஸ் நாடு திரும்பியபோது, தேசபந்து விண்ணுலகம் சென்றிருந் தார். மஹாத்மா காந்தி பொது வாழ்விலிருந்து நடைமுறையில் ஒதுங்கியிருந்தார்; தம்முடைய மருமகளின் வியாதி காரணமாகப் பண்டித மோதிலால் நேரு வெளிநாட்டுக்குப் போயிருந்தார். தேசபந்து தாஸினிடம் போதிய அரசியல் பயிற்சி பெற்றிருந் தாலும், சிறைச் சாலையில் சிந்திப்பதற்குப் போதிய அவகாசம் கிடைத்ததாலும், பிரிட்டிஷ் ஆதிக்கத்தை ஒழிப்பதற்காக வருங்காலத்தில் நாடு கடைப்பிடிக்க

வேண்டிய போர்முறை பற்றிய ஒரு பொதுப் படையான திட்டத்தைச் சுபாஷ் போஸ் தம் மனத்துக்குள் உருவாக்கி வைத்திருந்தார்.

விடுதலை செய்யப்பட்டவுடன் அவர் வங்க மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக முதன் முதலாக தேர்ந்தெடுக்கப்பட்டார். மூன்றுண்டுகளுக்கு மேலான பிரிவுக்குப் பின்னர் அவர் மறுபடியும் தீவிர அரசியலில் குதித்தார்.

அப்போது, முற்றிலும் வெள்ளையரையே கொண்ட சைமன் கமிஷனைப் பகிஷ்கரிக்கும் இயக்கம் வங்காளத்திலும் இந்தியாவின் மற்றப் பகுதிகளிலும் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. (இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து, அடுத்த அரசியல் சீர்திருத்தம் பெறுவதற்கு இந்தியர்களுக்கு உள்ள தகுதியை ஆராய்ந்தறிந்து பார்லிமெண்டுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக அந்தக் கமிஷனை பிரிட்டனின் கன்ஸர்வேட்டிவ் கட்சி சர்க்கார் நியமித்திருந்தனர்) வங்காளத்தில் அந்தப் பகிஷ்கார இயக்கத்தைச் சுபாஷ் போஸ் முன்னின்று நடத்தினர். பின்னர், அகில வங்காள மாணவர் சங்கம், அகில வங்காள இளைஞர் சங்கம் ஆகியவற்றினை அமைப்பதில் அவர் ஈடுபட்டார். அதே ஆண்டில் (1928) பண்டித ஜவாஹர்லால் நேரு, எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார் முதலியோருடன் அவர் சேர்ந்து 'இந்திய சுதந்திர லீக்' என்ற ஸ்தாபனத்தை அமைத்தார். அவ்வருஷ இறுதியில் சென்னையில் நடந்த காங்கிரஸ் மகாநாட் ஒரு முக்கிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது; சுயராஜ்யமே இந்திய மக்களின் குறிக்கோள் என்று முதன் முதலாக அறிவித்த தீர்மானம் அது. மற்றும், காங்கிரஸ் தலைமைக் குழுவில் (காரியக் கமிட்டியில்) இடதுசாரிகள் நியமிக்கப்பட்டதும், பண்டித ஜவஹர்லால்

நேரு, ஷுயைப், குரேஷி, சுபாஷ் போஸ் ஆகியோர் பொதுக் காரியதரிசிகளாக நியமிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கவை.

1928 டிசம்பரில் நடந்த கல்கத்தா காங்கிரஸில் தான் இடதுசாரிகளும் வலதுசாரிகளும் முதன் முதலாகப் பெரிய பலப் பரீட்சையில் இறங்கினர். பிரதானத் தீர்மானத்தை மஹாத்மா காந்தி பிரேரேபித்தார்; 1929 டிசம்பர் வாக்கில் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து அரசியலமைப்பை பிரிட்டிஷ் சர்க்கார் வழங்காவிட்டால் சாத்துவிக ஒத்துழையாமை இயக்கத்தைக் காங்கிரஸ் நடத்தும் என்று அது குறிப்பிட்டது. சுயராஜ்யத்துக்குக் குறைவானது எதுவும் காங்கிரஸுக்குத்திருப்தி அளிக்காது என்று கூறும் திருத்தத்தை சுபாஷ் போஷ் கொணர்ந்தார்; பிரிட்டிஷ் தொடர்பை அறுத்துக் கொள்ளவேண்டும் என்பது அதன் உள்ளடக்கம். 1,350 வோட்டுகள் எதிராகவும், 973 வோட்டுகள் சாதகமாகவும் பெற்று அத் திருத்தம் தோற்றது. அது சுயேச்சையான வோட்டுப் பதிவு அல்ல என்று சுபாஷ் கருதினர். ஏனெனில் மஹாத்மாவின் சீடர்கள் அதை ஒரு நம்பிக்கைப் பிரச்சினையாக்கி, தாம் தோற்ருல் காங்கிரஸிலிருந்து மஹாத்மா விலகிவிடுவார் என்று அறிவித்திருந்தனர். ''ஆகவே, மஹாத்மாவின் தீர்மானத்துக்குச் சாதகமாக வோட்டளித்தவர்களில் பலரும் நம்பிக்கை காரணமாக அவ்வாறு செய்யவில்லை; அவர் காங்கிரஸை விட்டு விலகுவதற்குத் தாங்கள் காரணஸ்தர்களாவதற்கு விரும்பாமையே அதற்குக் காரணம். எனினும், இடதுசாரிகளுக்கு வலிமையும் செல்வாக்கும் இருந்ததை அந்த வோட்டளிப்பு எடுத்துக் காட்டியது. பண்டித ஜவாஹர்லால் நேரு தலைமையில் லாகூரில் நடந்த சரித்திரப் பிரசித்தி வாய்ந்த காங்கிரஸ் மகா

4

நாடு சுயராஜ்யம் கோரும் தீர்மானத்தை உற்சாக ஆரவாரத்துடன் நிறைவேற்றியது. கல்கத்தா காங்கிரஸின்போது 50,000 தொழிலாளர்கள் ஊர்வலமாக காங்கிரஸ் பந்தலுக்கு வந்து சுதந்திரப் போராட்டத்துக்குத் தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர். அந்த காங்கிரஸில் வங்காளத் தொண்டர் படையின் சேனாதிபதியாக சுபாஷ் போஸ் பொறுப்பு வகித்தார்? அவரே ராணுவ ரீதியில் திரட்டி, தனியுடுப்பும் பயிற்சியும் அளித்து வைத்திருந்த படை அது.

அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸின் தலைவராகவும் சுபாஷ் போஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தப் பொறுப்பை 1931 வரை அவர் வகித்துவந்தார்.

இந்த சட்டத்திலிருந்து சுபாஷ் சந்திரபோஸ் சுதந்திரப்போராட்டத்தின் முன்னணியில் வீரநடை போடலானார். நாடு முழுவதிலும் இளைஞர்களையும் மாணவர்களையும் ஸ்தாபன ரீதியாக ஒன்று திரட்டி அவர்களுக்கு விறுவிறுப்புடன் வழிகாட்டினார்; உறுதியான அடிப்படையில் தொழிற்சங்கம் அமைத்து ஆலைத் தொழிலாளர்களின் ஆதரவைத் திரட்டினார்; மற்றும், நாட்டிலிருந்த இடதுசாரிகளின் ஈட்டிமுனையாக அவர் விளங்கினார். அந்நிய ஆட்சியாளருடன் போட்டுப் பகிரவேண்டும் என்று இடதுசாரிகள் துடிதுடித்துக் கொண்டிருந்தனர்,

எழுச்சிதரும் அவருடைய அரசியல் வாழ்க்கையின் முக்கியமான வேறு சில நிகழ்ச்சிகள் வருமாறு; பல முறை சிறைவாழ்க்கை; 1930-ல் கல்கத்தா மேயர் பதவி; ஹிஜ்லி காவல் முகாமில் போலீஸார் வேண்டுமென்றே சுட்டதைக் கண்டித்து வங்க மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் பதவியைத் துறந்தது (1931); அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின்

பொருளாளராகத் தேர்வு (1931–32) சுவாசப்பை யிலும் குடலிலும் பீடித்த க்ஷயரோகத்துக்குச் சிகிச்சை பெறுவதற்காக ஐரோப்பாவுக்கு வெளியேற்றப்பட்டதும், வியென்னுவில் விட்டல்பாய் பட்டேலுடன் நேரடித் தொடர்பு கொண்டதும் (1932); சர்க்காரின் அனுமதியின்றி ஐரோப்பாவிலிருந்து கல்கத்தா திரும்பியதும் அதன் விளைவாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டதும் (1934); ஒரு பெரிய அறுவைச் சிகிச்சைக்காக மறுபடி ஐரோப்பா சென்றது; ஐரோப்பாவின் இந்தியர் மத்திய சங்கம் வியென்னுவில் நடத்திய மகாநாட்டில் கலந்து கொண்டது; ரோமாபுரியில் முஸோலினி ஆரம்பித்து வைத்த ஆசிய மாணவர்கள் மகாநாட்டில் உரை நிகழ்த்தியது (1935); அயர்லாந்துக்கு விஜயம், பம்பாய் திரும்பியதும் கப்பலில் வைத்தே கைதானது (1936); நிபந்தனையின்றி விடுதலையும் ஐரோப்பாவிற்குப் பயணமும் (1937).

1938 ஜனவரியில், வெளிநாட்டில்இருக்கும்போதே 41 வயதிலேயே, எந்த ஒரு இந்தியருக்கும் நாடு வழங்கக் கூடிய மகோன்னத கௌரவத்தை சுபாஷ் சந்திர போஸ் பெற்றார். குஜராத்தில், ஹரிபுராவில் நடக்கவிருந்த இந்திய தேசிய காங்கிரஸின் 51–வது மகாநாட்டின் அக்கிராசனராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார், அதே மாதத்தில் அயர்லாந்தில், அதன் தலைவர் டிவேலராவைச் சந்தித்துவிட்டு, பிப்ரவரியில் சுபாஷ் சந்திர போஸ் இந்தியாவுக்குத் திரும்பி நாட்டின் பிரதான அரசியல் ஸ்தாபனத்தின் மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

1938–ல் இந்திய தேசிய காங்கிரஸ் தலைமையை அவர் ஏற்றுக்கொண்டது இந்நாட்டின் வாழ்க்கையிலும், ஓரளவுக்குச் சுதந்திரப் போராட்டத்தின் வர

லாற்றிலும், ஒரு திரும்பு முனையாக அமைந்தது என்று சொன்னால் மிகையல்ல. பண்டித ஜவாஹர்லால் நேருவைத் தலைவராகவும், தம்மைக் கன்வீராகவும் கொண்ட தேசியத் திட்டக் கமிட்டி' ஒன்றை அவர் அமைத்தார். காங்கிரஸ் அக்கிராசனர் என்ற முறையில் அவர் இந்தியாவுக்குச் செய்த மிக முக்கியமான தொண்டுகளுள் ஒன்று இது.

தம்முடைய பல வேலைக்கிரமங்களை அமல் நடத்துவதற்கு ஒரே ஒரு வருஷம் காங்கிரஸ் அக்கிராசனராக இருந்தால் பொதாது என்று சுபாஷ் போஸ் கருதினார். அதனால் இரண்டாவது முறையும் அந்தப் பொறுப்பை நாடுவது என்று அவர் தீர்மானித்தார்; அதுவரை இருந்து வந்த சம்பிராதயத்துக்கு முரணான விருப்பம் இது. அவருடைய முடிவை மஹாத்மா காந்தி அங்கீகரிக்கவில்லை. சுபாஷுக்கு எதிராக, காந்திஜியின் ஆசியுடன், டாக்டர் பட்டாபி சீதாராமையா போட்டியிட்டார். எனினும் சுபாஷே தேர்தலில் வெற்றி பெற்றார். இதைத் தம்முடைய சொந்தத் தோல்வி என்று காந்திஜி வர்ணித்தார். வலதுசாரி—இடதுசாரிப் பிளவு இப்போது பகிரங்கமாக வெளிப்பட்டது; காந்திஜிக்கும் சுபாஷ் போஸுக்கும் இடையே இருந்த கருத்து வேற்றுமை அநேகமாய்ப் பூரணமாகிவிட்டது. காரியக் கமிட்டி உறுப்பினர்களுள் மிகப் பெரும்பாலோர் ராஜினாமாச் செய்துவிட்டனர். மத்திய மாகாணத்தில் (இப்போது மத்தியப் பிரதேசம்) உள்ள திரிபுரியில் 1939 மார்ச் மாதம் இந்திய தேசிய காங்கிரஸின் வருடாந்தர மகாநாடு தொடங்கியபோது சுபாஷ் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்ததால், அக்கிராஸனப் பொறுப்பை முழு அளவுக்கு நிறைவேற்ற அவரால் முடியவில்லை. எனினும், அங்கு ஒரு தெளிவான பிரேரணையை அவர் வெளியிட்டார் ஆறு மாதங்களில் இந்தி

யாவுக்குச் சுதந்திரம் கொடுக்குமாறு பிரிட்டிஷ் சர்க்காருக்குக் காங்கிரஸ் இறுதி எச்சரிக்கை அனுப்பவேண்டும் என்றும், தேசியப் போராட்டத்துக்கு உடனடியாக ஆயத்தம் செய்யவேண்டும் என்றும் அது கூறியது. காந்திஜியிடம் அனுதாபம் கொண்ட வலதுசாரிகளும், பண்டித ஜவாஹர்லால் நேருவும் அப்பிரேரணையை எதிர்த்தனர்; அது நிராகரிக்கப்பட்டது. ஆறு மாதங்களில் ஐரோப்பாவில் யுத்தம் மூளும் என்று சுபாஷ் போஸ் ஜோசியம் சொன்னார். அதனால்தான் பிரிட்டனுக்கு ஆறுமாதக் கெடுவைக்க வேண்டும் என்று யோசனை கூறினார். ஆறு மாதங்களுக்குள் இந்தியாவுக்கு பிரிட்டன் சுதந்திரம் வழங்காவிட்டால், ஐரோப்பிய யுத்தத்தை இந்தியா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அந்த யுத்தத்தில் பிரிட்டனுக்குப் பகையாக இருக்கக் கூடிய நாடுகளில் ராணுவ உதவியை இந்தியா நாடவேண்டும் என்று அவர் வாதாடினார். காந்திஜியைக் கலந்தாலோசித்தே தம்முடைய 'மந்திரி சபை'யை (காங்கிரஸ் காரியக் கமிட்டியை) அமைக்க வேண்டும் என்று சுபாஷ் போஸை நிர்ப்பந்திப்பதற்காக வலது சாரிகள் காங்கிரஸின் பகிரங்கக் கூட்டத்தில் பெரிதும் போராடினர். தம்முடைய மந்திரிசபைச் சகாக்களைத் தேர்ந்தெடுக்க அக்கிராசனருக்கு இருந்த சுயேச்சையை வில்லங்கப்படுத்த காந்திஜியின் ஆதரவாளர்கள் இவ்வாறு முயன்றதுபற்றி கடுமையான சர்ச்சை எழுந்தது.

அடுத்த மாதம் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கல்கத்தாவில் கூடியபோது, சுபாஷ் போஸுக்கும் வலதுசாரிகளுக்கும் இடையே கருத்து வேற்றுமைகளை நீக்குவதற்கு செய்யப்பட்ட முயற்சிகள் எல்லாம் தோற்றுவிட்டன. பரபரப்பான நிலைமையின் மத்தியில்

காங்கிரஸ் அக்கிராஸனர் பதவியை ராஜினாமாச் செய்வதாக சுபாஷ் போஸ் அறிவித்தார்.

பின்னர் அவர் காங்கிரஸுக்கு உள்ளயே பார்வர்டு பிளாக்கை (முன்னனிக் கட்சியை) 1939 மே மாதத்தில் அமைத்தார். இரு நோக்கங்களுடன் இந் நடவடிக்கையை அவர் மேற்கொண்டார். முதலாவதாக, வருங்காலத்தில் வலதுசாரிகளுடன் தகராறு, ஏற்பட்டால் தாம் அதிக வலிமையுடன் போராட முடியும் என்றும், காங்கிரஸ் முழுதையுமே தம் பக்கம் இழுப்பது சாத்தியமாகலாம் என்றும் அவர் எண்ணினர் இரண்டாவதாக காங்கிரஸ் முழுதையும் தம் கருத்துக்கு இழுப்பது அசாத்தியமானுலும் கூட, பெரிய நெருக்கடி எழும்போது வலதுசாரிகள் காலைவாரினுலும் தாம் சொந்த ஹோதாவில் செயல் புரிய முடியும் என்று அவர் எதிர்பார்த்தார். வலதுசாரிகளுக்கும் ஃபார்வர்டு பிளாக்குக்கும் இடையே பிளவு விரிந்து கொண்டே போயிற்று; பின்னர் சுபாஷ் போஸுக்குக் காங்கிரஸ் தடை விதித்தபோது அது உச்ச நிலையை எட்டியது. இருமுறை காங்கிரஸின் அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுபாஷ், தேர்வுக் காங்கிரஸ் கமிட்டி எதிலும் மூன்று ஆண்டுக் காலத்துக்கு எந்தப் பதவியையும் வகிக்கக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டது. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றிய இரு தீர்மானங்களை ஆட்சேபிக்கும்படி காங்கிரஸ்காரர்களுக்குச் சுபாஷ் யோசனை கூறியதற்காக அவர் மீது இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது. இத்தீர்மானங்களுள் ஒன்று, மந்திரிகளுக்கும் மாகாண காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் இடையே நிலவ வேண்டிய உறவு முறையை நிர்ணயித்தது; இன்னொன்று, சாத்துவிக எதிர்ப்பு எதையும் தொடங்குவதற்கு மாகாண காங்கிரஸ் கமிட்டிகளின் அனுமதியைப் பெறவேண்டும் என்று

கட்டளையிட்டது. இதற்கிடையே நாட்டின் பல பாகங்களில் ஃபார்வர்டு பிளாக்கின் செல்வாக்கு அதிகரித்து வந்தது.

ஆறு மாதங்களுக்கு முன் சுபாஷ் போஸ் சொன்ன ஜோசியப்படியே 1939 செப்டம்பரில் ஐரோப்பாவில் யுத்தம் மூண்டது. பிரிட்டிஷாருக்கு எதிராகவும், யுத்தத்துக்கு எதிராகவும் ஒரு இயக்கத்தை நாடெங்கிலும் ஃபார்வர்டு பிளாக் தொடங்கியது. தங்களுடைய யுத்த முயற்சிகளுக்கு ஃபார்வர்டு பிளாக் நிஜமான ஆபத்தாக வளர்வதைக் கண்ட பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள், 1940 ஜூலையில் சுபாஷையும் நூற்றுக்கணக்கான அவருடைய சக ஊழியர்களையும் சிறையில் தள்ளி ஃபார்வர்டு பிளாக் மீது தாக்குதல் தொடுத்தனர். சுபாஷை விசாரணைக்குக்கொண்டு வரும் எண்ணமே பிரிட்டிஷாருக்கு இல்லை. யுத்தத்தில் பிரிட்டனுக்கு எதிராக இந்தியா செயலாற்றி, பிரிட்டனின் பகை நாடுகளுடன் ஒத்துழைத்தால், சுதந்திரம் பெற முடியும் என்று சுபாஷ் போஸ் முன்னையும்விட உறுதியாக இப்போது கருதினர். இப்போது சர்வதேச அரசியல் அரங்கில் இந்தியா பிரவேசித்துத் தீவிரமாகச் செயல் புரிய வேண்டும் என்று அவர் முடிவு செய்தார்.

சுபாஷ் போஸ் ஏற்கனவே பதினேரு முறை பிரிட்டிஷ் கட்டுக்காவலில் இருந்ததுண்டு; இன்னமும் சிறையில் கிடந்து வாடுவது மிகப் பெரிய அரசியல் தவறு என்று இப்போது அவருக்குத் தோன்றியது. ஆகவே, 1940 நவம்பர் இறுதியில் அவர் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு ஒரு இறுதி, எச்சரிக்கை கொடுத்தார்; தம்மைக் காவலில் வைத்திருப்பதற்குத் தார்மிக ரீதியாகவோ சட்ட பூர்வமாகவோ நியாயம் இல்லை என்றும், உடனடியாகத் தம்மை விடுதலை செய்யாவிடில்

உண்ணுவிரதம் இருக்கப்போவதாகவும் தெரிவித்தார். முதலில் அவரைப் பொருட்படுத்தாததுபோல் பிரிட்டிஷ் காரர்கள் பாசாங்கு செய்தனர்; ஆனால் அவர் 'சாகும்வரை உண்ணுவிரதம்' தொடங்கிச் சில நாட்கள் ஆனதும் அவர்களுக்கு உதறல் ஏற்பட்டு விட்டது. தங்கள் பொறுப்பில் இருக்கும்போது அவர் இறந்துவிடக்கூடாது என்று எண்ணிய அவர்கள் அவரைச் சந்தடியின்றி விடுதலை செய்துவிட்டு, அவருடைய நடமாட்டங்களை உன்னிப்புடன் கண் காணிக்கத் தொடங்கினர். நாற்பது நாட்கள்வரை சுபாஷ் போஸ் தம் வீட்டிலிருந்து, படுக்கையறையி லிருந்துகூட, வெளியே வரவில்லை. பிறகு, 1941 ஜனவரி மூன்ருவது வாரத்தில் ஒரு நாள் காலையில் வெளியான தகவலைக் கேட்டு இந்தியா முழுவதுமே கிளு கிளுத்தது—சுபாஷ் போஸ் பிரிட்டிஷ் கண்காணிப் பிலிருந்து தப்பி, தம்முடைய கல்கத்தா ஜாகையிலிருந்து மறைந்துவிட்டார் என்பதே அச்செய்தி. அடுத்தாற் போல் சுபாஷப்பற்றி இந்தியாவும் உலகமும் கேள்வி யுற்றது அவரே 1941 நவம்பரில் ஜெர்மனியிலிருந்து வானொலியில் பேசியபோதுதான்; இந்தியாவிலிருந்து மறைந்து ஒன்பது மாதங்களுக்குப்பின் இவ்வாறு அவர் பேசினர்.

அகால இரவில் கல்கத்தா ஜாகையிலிருந்து ஒரு முஸ்லிம் மௌல்வியின் வேடத்தில் சுபாஷ் வெளி யேறியது முதல்; அவருடைய துணிகரமான திட்டங் களும், அவருக்கு ஏற்பட்ட கஷ்டங்களும் ஆபத்துக் களும், பெஷாவர்வரை அவர் மாறு வேடத்தில் ரயிலில் சென்றதும் பின்னர் சாலை வழியே காபூல் போய்ச் சேர்ந்ததும், அங்கிருந்து மாஸ்கோ வழியாகப் பெர்லினுக்கு அவரை அனுப்ப இத்தாலியத் தூதரகம் ஏற்பாடு செய்யும்வரை இருந்துவந்த பதட்ட நிலையும்,

ஒரு விறுவிறுப்பான நாடகத்தின் அங்கங்களாகும். காபூலில் அவரை விருந்தோம்பிய உத்தம் சந்த், தாம் எழுதிய 'ஜியாவுத்தீனுகப் போஸ் இருந்தபோது' என்ற சிறு நூலில் இவற்றையெல்லாம் தத்ரூபமாக வர்ணித்திருக்கிறார். இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ்காரர்களை வெளியேற்றுவதற்காக அந்நிய ஆயுத உதவியை நாடி சுபாஷ் போஸ் ஜெர்மனிக்குப் போய்ச் சேர்ந்தபோது, ஹிட்லரின் ஆதிக்கம் உச்சத்தில் இருந்தது. இந்திய மக்களின் ஒரு உயர்தரப் பிரதிநிதியாகத் தம்மை நடத்துவதற்கும் இந்திய சுதந்திரத்துக்குப் போராடுவதற்காக ஒரு ராணுவத்தைத் திரட்ட வசதி அளிப்பதற்கும் ஜெர்மனியைச் சம்மதிக்கச் செய்வது சுபாஷ் போஸுக்கு இலேசான காரியமாக இருக்கவில்லை. இறுதியில், தம் திட உறுதியை ஹிட்லரின் சர்க்கார் போற்றிக் கொண்டாடுமாறு செய்வதில் அவர் வெற்றிபெற்ருர். பிரிட்டனின் பகைவர்களிடமிருந்து நிபந்தனையற்ற உதவி பெற்று, தம் நாட்டைப் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்ற அவருடைய சங்கற்பத்தை அவர்கள் கௌரவித்தனர். ஜெர்மானிய மண்ணில் முதலாவது ஆஜாத்'ஹிந்த் ஃபௌஜை (சுதந்திர இந்திய ராணுவத்தை) உருவாக்குவதற்குள் அவர் மலைபோன்ற தடைகளைத் தாண்ட வேண்டியிருந்தது. ஐரோப்பாவையும் மத்திய கிழக்குப் பிரதேசத்தையும் சேர்ந்த பல்வேறு போர் முனைகளிலிருந்து ஜெர்மனிக்குக் கொண்டு வரப்பட்ட இந்திய யுத்தக் கைதிகளைக்கொண்டு இந்த ராணுவத்தை அவர் அமைத்தார். பிரிட்டிஷாருக்கு எதிராக ஆயுதந்தாங்கிய போராட்டம் நடத்தி இந்தியாவை விடுதலை செய்ய வேண்டும் என்ற அவருடைய கனவு இவ்வாறு நனவாகத் தொடங்கியது. வாள் வலியால் இந்தியாவை அடிமையாகஅடக்கி வைத்திருந்த பிரிட்டிஷாருக்கு

எதிராக வாளே உருவினர் சுபாஷ் போஸ். அவருடைய இந்தத் தீர முயற்சியைப்பற்றி, 'ஜெர்மனியில் நேத்தாஜி —அதிகமாய் வெளிப்படாத ஒரு அத்தியாயம்' என்ற நூலில் என். ஜி. காண்புலே ரசமாக, விவரமாக எழுதியிருந்தார். யுத்தத்தின் மத்தியில்கூட, இங்கிலாந்துடன் சமரஸம் செய்து கொள்வதுபற்றி ஹிட்லர் பேசிக்கொண்டிருந்தார். ஆகவே, தன்னுடைய சொந்த விடுதலைக்காக இங்கிலாந்தை எதிர்த்துப் போராடிக்கொண்டிருந்த இந்தியாவுக்குச் சாதகமாக ஹிட்லரின் மனத்தை மாற்றுவதில் சுபாஷுக்கு இரட்டிப்புக் கஷ்டம் ஏற்பட்டது. ஆயினும், மத்திய ஐரோப்பாவில் இன்னமும் வாழ்ந்துகொண்டிருந்த இந்தியர்களின் உற்சாகமான, தந்நலமற்ற தொண்டுகளாலும், ஹிட்லர் சர்க்காருடன் மேலும் மேலும் ஒத்துழைப்பு வளர்ந்து வந்ததன் விளைவாகவும் சுபாஷ் போஸின் சில முயற்சிகள் வெற்றி பெற்றன.—ஜெர்மன் வானொலி நிலையங்களிலிருந்து இந்தியாவுக்கு முறையாக, தணிக்கை இல்லாமல், நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப முடிந்தது; சுதந்திர இந்திய கேந்திரம் ஒன்று நிறுவப்பட்டது. இவ்வாறு முதலாவது சுதந்திர இந்திய ஸ்தாபனம் 1941-ல் ஜெர்மனியில் பிறந்தது. சுபாஷ் சந்திர போஸின் கொடியின் கீழ், தங்கள் நாட்டின் விடுதலைக்காக ஒன்று திரண்ட இந்திய சிவிலியன்களும் ஜவான்களும், தாங்களாகவே அவரைத் தங்கள் 'நேத்தா' (தலைவர்) என்று போற்றினர்; அது முதல் 'நேத்தாஜி' என்றே அவரை அழைக்கலாயினர்.

யுத்த காலத்தில் ஜெர்மனியில் 'சுதந்திர இந்திய ராணுவத்தை அமைத்தது சரிதான்; ஆனால் இந்தியாவில் வேரூன்றியிருந்த பிரிட்டிஷ்காரர்களுடன் போராடுவதற்காக ஐரோப்பாவைக் கடந்து இந்தியாவின் வடமேற்கு வாயிலுக்குப் போய்ச் சேர்வது என்பது

முற்றிலும் வேறுமாதிரியான காரியம், அசாத்தியமான காரியம் என்றுகூடச் சொல்லலாம்.

1941 டிசம்பரில் பஸிபிக் பிராந்தியத்துக்கு உலக யுத்தம் பரவி, பிரிட்டனுக்கு எதிராக ஜப்பானும் போரில் இறங்கியபோது அவர் விரும்பிய பொன்னுன வாய்ப்புக் கிடைத்துவிட்டது. கிழக்கு ஆசியாவுக்குப் போய்ச் சேர்வதற்கும், மலேயா, சிங்கப்பூர், பர்மா முதலிய பகுதிகளில் பெருவாரியாக இருந்த இந்தியர் களைக்கொண்டு 'சுதந்திர இந்திய ராணுவம்' ஒன்றை அமைப்பதற்கும் திட்டங்கள் தீட்டுவதில் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் உடனடியாக முனைந்தார். ஜப்பானியர், பர்மியர், கிழக்கு ஆசியாவில் இருந்த மற்ற யுத்தகால சர்க்கார்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு மாத்திரம் கிடைத்துவிட்டால், பர்மா எல்லையில் 'சுதந்திர இந்திய ராணுவத்தினரைக் குவித்து, இந்திய எல்லையில் இருந்த பிரிட்டிஷ் படைகளைத் தாக்கி அவற்றை வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் பின் வாங்கச் செய்வது (வ. மே. எல்லையில் தாக்குவதை விட) மிக எளிதாக இருக்கும் என்று அவர் நினைத்தார். வங்காள, அஸ்ஸாம் எல்லைகளில் இந்திய விடுதலைப் படை இத்தகைய பிரமாதமான சாதனையைப் புரிந்தால் நாடு முழுவதிலும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகக் கலகம் கிளம்பும் என்று அவர் கணக்குப் போட்டார்.

பஸிபிக் பிராந்தியத்தில் போர் தொடங்கிய சில மணி நேரத்திற்குள்ளாக, வானொலியில் பேசிய ராஷ்பிஹாரி போஸ், கிழக்கு ஆசியாவெங்கிலும் இருந்த இந்தியர்களிடம் 'இந்திய விடுதலைச் சங்கங்களை அமைக்குமாறு கேட்டுக்கொண்டார். பிரிட்டிஷ் ஆதிக் க்கத்திலிருந்து தாய் நாட்டை விடுதலை செய்வதுதான்

இவற்றின் ஒரே நோக்கமாக இருக்க வேண்டும் என்றார் அவர். பழம் பெரும் இந்தியப் புரட்சியாளரான அவர், அரசியல் அகதியாக ஜப்பானில் வாழ்ந்துகொண்டிருந்தார்.

1942 பிப்ரவரியில் ஜப்பானியப் படைகள் சிங்கப்பூரைக் கைப்பற்றின. தங்கள் மலேயா, சிங்கப்பூர் காலனிகளைப் பாதுகாப்பதற்காக பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவிலிருந்து கொண்டுபோயிருந்த இந்திய ஜவான்களையெல்லாம் அவர்கள் நிர்க்கதியாக விட்டுவிட்டனர். தாங்கள் ஏற்றுக்கொண்ட சரணாகதி நிபந்தனைகளின் பிரகாரம் சுமார் 20,000 இந்திய ஜவான்களையும் ராணுவ அதிகாரிகளையும் ஜப்பானியர்களிடம் யுத்தக் கைதிகளாக அவர்கள் ஒப்படைத்தனர். ''தலைமைத் தளபதியாக காப்டன் மோஹன் சிங்கினிடம் உங்களை ஒப்படைக்கிறோம்; உங்களை உயிரோடு வைத்திருப்பதா, கொல்வதா என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் அவருக்கே உண்டு'' என்று இந்திய யுத்தக் கைதிகளிடம் ஜப்பானியர் தெரிவித்தனர். 'இந்திய தேசிய ராணுவம்' பிறந்த கதை இதுதான். பின்னர், கிழக்கு ஆசியாவில் இருந்த ஆயிரக்கணக்கான சிவிலியன் இளைஞர்கள் அதில் சேர்ந்தனர்; பின்னர் 30,000-க்கு மேற்பட்ட ஆயுத வீரர்களைக்கொண்ட மூன்று களப்போர் டிவிஷன்களை நேத்தாஜி உருவாக்கினார்.

கிழக்கு ஆசியா முழுதிலுமிருந்த இந்தியர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சரித்திரப் பிரசித்தி வாய்ந்த கூட்டம் 1942 ஜூன் மாதம், பாங்காக்கில் ராஷ் பிஹாரி போஸ் தலைமையில் நடைபெற்றது. ஜெர்மனியிலிருந்து கிழக்கு ஆசியாவுக்கு வந்து இந்திய விடுதலை இயக்கத்துக்குத் தலைமை தாங்குமாறு நேத்தாஜி

சுபாஷ் சந்திர போஸுக்கு அக்கூட்டம் அழைப்பு அனுப்பியது.

மாற்ற முடியாத முடிவு செய்தாகிவிட்டது. சொந்த நாட்டாரின் அவசர அழைப்புக்கு இணங்க கிழக்கு ஆசியா போய்ச் சேர்வதற்காக தம் உயிர் உட்பட எல்லாவற்றையும் பணயம் வைக்க நேத்தாஜி தீர்மானித்தார். அவர் ஜெர்மனியிலிருந்து புறப்பட்டு, எதிரிகள் நிறைந்த கடல் வழியாக பிரிட்டிஷ் தீவுகளைச் சுற்றியும், ஆப்பிரிக்காவைச் சுற்றியும், இந்து மகா சமுத்திரத்தைக் கடந்தும், சுமத்ராவை அடைந்து, பின்னர் பினங்கு சென்று, அங்கிருந்து விமானத்தில் ஜப்பானுக்குப் போய், இறுதியில் சிங்கப்பூர் சேர்ந்தார், நீர்மூழ்கிக் கப்பலில், பேராபத்துக்களின் மத்தியில். அவர் இவ்வாறு செய்த 90 நாள் பிரயாணம் இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றிலே மற்றொரு மகத்தான அத்தியாயம் ஆகும். 1943 ஜூன் மாதத்தில் ஜப்பான் போய்ச் சேர்ந்ததும், காலம் தாழ்த்தாமல், தம் தாய் நாட்டின் விடுதலைக்காகத் தீர்க்காலோசனை யுடன் தாம் தீட்டியிருந்த திட்டங்களுக்கு ஆதரவு பெறுவதற்காக, ஜம்பானியப் பிரதமர் ஜெனரல் டோஜோ, அவருடைய உயர்தர ராணுவ ஆலோசகர் கள் ஆகியோருடன் சம்பாஷனைகளை நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் தொடங்கினர். இந்திய சுதந்திர இயக்கத்துக்குத் தாராளமாக ஆயுதங்களும் தளவாடங் களும் கொடுத்து உதவுவதாக அவர்கள் புனித வாக் குறுதி அளித்த பின்னர், ஜப்பானில் இருப்பதை வெளிப்படுத்தி கிழக்கு ஆசியாவிலும் இந்தியாவிலும் இருந்த இந்தியர்களுக்கு டோக்கியோ வானொலி நிலை யத்திலிருந்து நேத்தாஜி உரை நிகழ்த்தினர்.

அஞ்சா நெஞ்சம் படைத்த அந்தப் போர் வீரர் சிங்கப்பூரில் இந்திய விடுதலை இயக்கத்துக்குத் தலைமை

தாங்குவார், இந்தியாவில் பிரிட்டிஷ் அரசைத் தாக்கு வதற்காக பர்மா வழியாக இந்திய தேசிய ராணுவத் துக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்வார் என்பதை அறிந்தவுடன் கிழக்கு ஆசியாவில் இருந்த இந்தியர்கள் ஆனந்தக் கூத்தாடினர்.

ஜப்பானிலிருந்து நேத்தாஜி போஸ் விமானத்தில் புறப்பட்டு, 1943 ஜுலை 2-ந்தேதி சிங்கப்பூர் போய்ச் சேர்ந்தார். இரண்டு நாட்கள் கழித்து, கிழக்கு ஆசியா முழுவதையும் சேர்ந்த இந்திய விடுதலைச் சங்கப் பிரதி நிதிகளின் முன்னிலையில், இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை இளைய போஸினிடம் ராஷ்பீஹாரி போஸ் ஒப்படைத்து, மறக்கமுடியாத பேருரை ஒன்றை நிகழ்த் தினர். இந்தப் பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு பேசிய நேத்தாஜி, சீக்கிரமே சுதந்திர இந்திய தற்காலிக சர்க்கார் ஒன்றை நிறுவப் போவதாகவும், அதன் தலைமையில் இந்திய விடுதலைச் சேனை தனது தாய் நாட்டிலிருந்து அந்நிய ஆட்சியாளருக்கு எதிராக அணிவகுத்துச் செல்லும் என்றும் சூசகமாக அறிவித் தார்.

அதற்கு மறுநாளே, இந்திய தேசிய ராணுவத்தின் பிரதம சேனபதிக்குரிய காக்கி உடுப்பணிந்த நேத்தாஜி, சிங்கப்பூர் நகரசபை மண்டபத்துக்கு எதிரே உள்ள விரிவான மைதானத்தில் அணியணியாகச் செறிந்து நின்ற படையினரைப் பார்வையிட்டார். இந்த விடுதலைப் படைக்கு முதன் முதலாக ‘சலோ டில்லி’ (டில்லிக்குச் செல்லுங்கள்) என்ற யுத்த கோஷத்தை அவர் வழங்கினர்; திரண்டிருந்த சிவிலியன்களுக்கு ‘முழு ஆயத்தம்’ என்ற கோஷத்தை வழங்கினர். இந்திய சுதந்திரத்துக்கான கடைசிப் போராட்டத்தில் தங்கள் உயிர் உட்பட எல்லாவற்றையும் தியாகம்

செய்ய முன்வருமாறு இந்தியர்களை அழைப்பதற்காக மலேயா, தாய்லாந்து, பர்மா, பிரெஞ்சு இந்தோ-சீனு ஆகிய நாடுகளில் அவர் சூருவளிச் சுற்றுப் பிரயாணம் செய்தார். அவர் சென்ற இடங்களில் எல்லாம் இந்தியர்கள் அமோக ஆதரவு அளித்தனர். சுருங்கச் சொன்னுல், கிழக்கு ஆசியாவில் இருந்த இந்தியர் களுக்குச் சுதந்திர வெறி பிடித்துவிட்டது.

அதன்பின், இந்திய சுதந்திரச் சங்கத்தின் தலைமை அலுவலகத்தை நேத்தாஜி சீரமைத்து, அதன் அலுவல்களை விரிவுபடுத்தினுர். தலைமை அலுவலகத்தில் ஏற்கனவே இருந்த இலாக்காக்கள் வருமாறு: பொது, நிதி, விளம்பரம், வேவு, படைக்கு ஆள் திரட்டிப் பயிற்சி அளிக்கும் இலாகா. நேத்தாஜி இந்த இலாக்காக்களை வலுப்படுத்தியதுடன் பின்கண்ட புதிய இலாக்காக் களையும் சேர்த்தார் : (1) சுகாதாரம், சமூக க்ஷேமநலம்; (2) பெண்கள் துறை; (3) தேசியக் கல்வி-கலாசாரம்; (4) புனரமைப்பு; (5) சப்ளை; (6) வெளிநாட்டு விவகாரம்; (7) ஜாகை, போக்குவரத்து. பெண்கள் இலாகாவின் பொறுப்பு டாக்டர் லக்ஷ்மி சுவாமி நாதனிடம் ஒப்படைக்கப்பட்டது; இவர் பின்னர் ஜான்ஸி ராணி பட்டாளத்தின் தளபதியாகவும், இ. தே. ரா.வில் ஒரு கர்னலாகவும் பதவியேற்ருர். மேற்கண்ட பிரிவுகளுடன் கிழக்கு ஆசியா முழுதிலும் விடுதலைச் சங்கக் கிளைகளை வலுப்படுத்துமாறு தாக்கீதுகள் பிறப்பிக்கப்பட்டன.

சங்கத் தலைமை அலுவலகம், இ. தே. ரா. தலைமை அலுவலகம் என்ற இரண்டிலும் சமநேரம் நேத்தாஜி பணி புரிந்து வந்தார்.

இ. தே. ரா. முழுமையாக உருவாகிவிட்டது என்பதையும், ''முழு ஆயத்த'' கோரிக்கைக்குக் கிழக்கு ஆசிய இந்தியர்கள் பிரமாத ஆதரவு அளிக்கிருர்கள்

என்பதையும் கண்டபின்னர், முறையான அடுத்த நடவடிக்கையாக, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 1943 அக்டோபர் 21-ந் தேதி, இந்தியாவுக்கு வெளியே, சிங்கப்பூரில், ''சுதந்திர இந்தியத் தற்காலிக சர்க்காரை'' அவர் அமைத்தார். கிழக்கு ஆசியாவில் இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்ற நான்கு மாதங்களுக்குள்ளாக இதை அவர் சாதித்தார்.

அதன் பின் சம்பவங்கள் சண்டமாருத வேகத்தில் நடக்கலாயின. அதற்கு மறுநாள், சிங்கப்பூரில் ஜான்ஸி ராணி பட்டாள முகாமை அவர் திறந்து வைத்தார். வீட்டுக்குள் பத்திரமாக வாழ்ந்துவந்த நூற்றுக்கணக்கான இந்திய மாதர்களும் யுவதிகளும் சுதந்திரப் போர்வீரர்களின் அணிகளில் சேர்வதற்காக அந்த முகாமுக்குத் திரண்டு வந்தனர். ரைபிள் சுடுதல், பயனட் (துப்பாக்கிச் சனியனுல்) தாக்குதல் உட்பட மிகத் தீவிரமான ராணுவப் பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

மறுநாள் இரவு, ஆஜாத் ஹிந்த் தற்காலிக சர்க்கார் பிரிட்டன்மீதும் அமெரிக்காமீதும் போர் தொடுப்பதாகப் பிரகடனம் செய்தது. அதற்குச் சிலமணிநேரம் கழித்து, இந்திய சிவிலியன்களும் ஜவான்களும் அடங்கிய பிரம்மாண்டமான கூட்டத்தில் நேத்தாஜி பேசினுர்; இந்திய விடுதலைப் போராட்டத்தில் சகல தியாகங்களும் புரிவதாக அவர்களிடமிருந்து புனிதச் சபதம் பெற்ருர்.

சில நாட்களுக்குள், ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி, குரோஷியா, பர்மா, தாய்லாந்து, தேசிய சீன, பிலிப்பீன்ஸ், மஞ்சூரியா என்ற ஒன்பது நாடுகள் ஆஜாத் ஹிந்த் தற்காலிக சர்க்காருக்கு அங்கீகாரம் அளித்தன.

தற்காலிக சர்க்காரை அமைத்து ஒரு வாரம் கழித்து நேத்தாஜி டோக்கியோவுக்கு விமானத்தில் சென்றார். அங்கு நவம்பர் முதல் வாரத்தில் நடந்த 'விசுவ கிழக்கு ஆசிய மகா நாட்டில் அவர் கலந்து கொண்டார். சுதந்திர இந்தியத் தற்காலிக சர்க்காரின் அதிபராக, ஒரு அரசின் தலைவருக்கு உரிய சகல மரியாதைகளுடன் அவரை ஜப்பானியச் சக்கரவர்த்தி வரவேற்றார்.

அந்தமான், நிக்கோபார் தீவுகளைத் தற்காலிக சர்க்காரிடம் ஒப்படைக்க ஜப்பான் தீர்மானித்து விட்டதாக, நவம்பர் 6-ந்தேதி, விசுவ கிழக்கு ஆசிய மகாநாட்டில் ஜப்பானியப் பிரதமர் டோஜோ அறிவித்தார். இவ்வாறு, தற்காலிக சர்க்காருக்கு முதன் முதலாகச் சுதந்திர இந்தியப் பிரதேசம் ஒன்று கிடைத்தது.

டிசம்பர் இறுதியில் நேத்தாஜி சிங்கப்பூர் திரும்பினார். சுதந்திர இந்திய பூமியான அந்தமானில் 1943 டிசம்பர் 31-ந்தேதி அவர் அடியெடுத்து வைத்தார். அதற்கிடையே, அந்தமானுக்கு 'ஷாஹீத்' (தியாகிகள்) தீவு என்றும், நிக்கோபாருக்கு 'சுராஜ்' தீவு என்றும் புதுப் பெயர்களைத் தற்காலிக சர்க்கார் சூட்டினர்.

மொழி, உடை, உணவு, முகமன் கூறுதல், தேசியச் சின்னம், சடங்குகள் நடத்துதல் ஆகியவை சம்பந்தமாக தேசிய ஒருமைப்பாடு ஏற்படுத்துவதற்கு யோசனைகள் கூறுவதற்காக ஒரு கமிட்டியை, தாம் அந்தமானுக்குப், போகுமுன், நேத்தாஜி நியமித்தார். இந்திய தேசிய சமூகத்தில் நிரந்தர ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கத்துடன், நிருமாண வேலையின் இந்த அமிசத்தை மிகமிக முக்கியமானதாகஅவர் கருதினார்.

5

அந்தமானிலிருந்து பாங்காக் வழியாக பர்மாவுக்கு விமானத்தில் சென்று, ரங்கூனில் தற்காலிக சர்க்காரின் தலைமை அலுவலகத்தையும், இ. தே. ரா. தலைமை அலுவலகத்தையும் நேத்தாஜி நிறுவினர். இப்போது இரண்டு தலைமை அலுவலகங்கள் ஏற்பட்டுவிட்டன. ஒன்று ரங்கூனிலும் பின்னணித் தலைமை அலுவலகம் சிங்கப்பூரிலும் இருந்தன.

இந்தியாவுடன் பொது எல்லையைக் கொண்டது பர்மா. இந்திய மண்ணில் பிரிட்டிஷாருடன் போரிட்டு அங்கிருந்து அவர்களை வெளியேற்றுவதற்காக எப்பாடு பட்டாவது அந்த எல்லையைத் தாண்டுவதற்கு இ. தே. ரா சபதம் பூண்டிருந்தது. ஆகவே, புதிய தலைமை அலுவலகத்தை ஒரு படைத்தளமாக மாற்று வதற்காக நேத்தாஜி தீவிர முயற்சி செய்தார். இந்தியாவில் இருந்த பகைவனின் குரல்வளையைத் தாவிப் பிடிப்பதற்கு ஏற்ற உந்து மேடையாக பர்மாத் தளத்தை உருவாக்கும்வரை அவருக்கு ஓய்வு பிடிக்க வில்லை.

1944 பிப்ரவரி 4-ந்தேதி ஒரு பரபரப்பான அறிவிப்பு வந்தது. இ. தே. ரா. இரண்டாவது இந்தியச் சுதந்திர யுத்தத்தின் முதல் வேட்டைக் கிளப்பியது; அரக்கான் முனையில் அது தாக்குவதைத் தொடங்கி ஒரு கைகலப்பில் வெற்றியும் பெற்றது.

இ. தே. ரா. வின் வரலாற்றில் 1944 மார்ச் 18-ந் தேதி என்றென்றும் ஒரு பொன்னாளாக மிளிரும்; சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த நாளில்தான், இ, தே. ரா. பர்மா எல்லையை முதன் முறையாகத் தாண்டி, இந்தியப் புண்ணிய பூமிமீது நின்றது. 1944 மார்ச் 21-ந் தேதி நேத்தாஜி வெளியிட்ட ஒரு

பிரகடனம் இந்தப் பிரமாதமான தகவலேக் கிழக்கு ஆசியாவுக்கும், இந்தியாவுக்கும், உலகத்துக்கும் பறைசாற்றியது.

ஒவ்வொரு மாதமும் 21-ந் தேதியைப் புனித நாளாகக் கிழக்காசிய இந்தியர்கள் கொண்டாட லாயினர். ஏனெனில் 1943 அக்டோபர் மாதம் அதே தேதியில்தான் சுதந்திர இந்தியாவின் தற்காலிக சர்க்கார் சிங்கப்பூரில் அமைக்கப்பட்டது.

இவ்வாறு சிங்கப்பூருக்கு நேத்தாஜி வந்து சேர்ந்த ஒன்பது மாதங்களுக்குள் இ. தே. ராவைத் திருத்தி அமைத்து, மலேயாவிலிருந்து தாய்லாந்து, பர்மா ஆகிய நாடுகள் வழியாக இந்தியாவின் எல்லேவரை அழைத்துச்சென்று, பின்னர் எல்லேயைத் தாண்டி இந்திய மண்ணிலேயே அதைக்கொண்டு நிறுத்தினர்— நேத்தாஜிக்கேகூட இது ஒரு அரும் பெரும் சாதனேதான்.

தம்முடைய தலேமை ஸ்தலத்தை அவர் ரங்கூனுக்கு மாற்றியதற்கும், பர்மா-இந்தியா எல்லேயை இ.தே.ரா. தாண்டிய சரித்திரப் பிரசித்தமான நிகழ்ச்சிக்கும் இடையே, இந்திய விடுதலேச் சங்கத்தை மிகப் பெரிய அளவில் அவர் விஸ்தரித்தார்; அத்துடன் சப்ளே, ஆள்பலம், வருமானம் என்ற இலாகாக்களே ஏற் படுத்தித் தற்காலிக சர்க்காரையும் விஸ்தரித்தார்.

பணம், பண்டங்கள், ஆள்பலம், ஆகியவற்றைத் திரட்டி 'முழு ஆயத்தம்' செய்ய வேண்டும் என்ற தற்காலிக சர்க்காரின் திட்டத்தை நிறைவேற்று வதற்காக விடுதலேச் சங்கம் மேலும் மேலும் அதிகமான பணிகளே மேற்கொள்ள வேண்டியிருந்தது; இதற்காகச் சங்கத்தின் தலேமை அலுவலகத்தில் பன்னிரண்டு புதிய இலாக்காக்கள் ஏற்படுத்தப்பட்டன.

ரங்கூனில் 'ஜான்ஸி ராணி பட்டாள' முகாம் ஒன்று நிறுவப்பட்டது. மற்றும், இந்தியச் சிவிலியன் இளைஞர்களுக்கு விரைவாகத் தீவிர ராணுவப் பயிற்சி அளிப்பதற்காகக் கிழக்கு ஆசியா எங்கிலும் முகாம்கள் திறக்கப்பட்டன. இந்த முகாம்களில் ஆயிரக்கணக்கான ஜவன்களுக்குத் தீவிர ராணுவப் பயிற்சி அளிக்கப் பட்டது.

1944 ஏப்ரல் 5-ந் தேதி, முதலாவது ஆஜாத் ஹிந்த் தேசிய பாங்கியை ரங்கூனில் நேத்தாஜி நிறுவினார்; அன்றே போர் முனைக்கும் அவர் புறப்பட்டுச் சென்றார்; தம்முடைய தலைமைக் காரியாலயத்தையும் போர்க்களத்தின் அருகே மாற்றினார். முழுப் பயிற்சியும் ஆயுதங்களும் பெற்ற 'ஜான்ஸி ராணிகளின்' படைப்பிரிவு ஒன்றையும் இம்முறை அவர் தம்முடன் அழைத்துச் சென்றார்.

இதற்கிடையே, பர்மா-இந்தியா எல்லையிலும், இம்பால் சமவெளியிலும், கொஹிமாவின் சுற்றுவட்டா ரத்திலும் எட்டு இலக்குகளில் சுதந்திரப் போரை இ.தே.ரா. நடத்திக் கொண்டிருந்தது. இம்பாலை இந்திய விடுதலைப்படை கைப்பற்றிவிட்டதாகச் சிலமணி நேரத்தில் செய்தி வரும் என்று எதிர்பார்க்கப் பட்டது; அது இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துக்குச் சாவுமணி அடித்திருக்கும்.

ஆனால் விதி சதி செய்துவிட்டது; இம்பாலுக்கு மூன்று மைல் தூரத்தில் விடுதலைப் படைகள் தடுத்து நிறுத்தப்பட்டன. அவர்களுக்கு விமான உதவி இல்லை; விரக்தியுற்ற எதிரியோ கடைசி முயற்சியாக, ஆகாய மார்க்கமாய், இம்பாலில் உதவிப்படைகளைக் கொண்டு குவித்துக் கொண்டிருந்தான். எவ்வளவு சேதங்கள் ஏற்பட்டாலும் இம்பாலைக் காப்பாற்ற வேண்டும் என்று

மவுண்ட்பாட்டன் பிரபு உத்தரவிட்டிருந்தார் பர்மாவில் பெய்த மழை காரணமாக இ.தே.ரா.வின் சப்ளைப் பாதைகள் வெள்ளத்தில் அமிழ்ந்துவிட்டன.

பின்வாங்கி. இம்பால்மீது அடுத்த தாக்குதலுக்கு ஆயத்தம் செய்யுமாறு இ.தே,ரா.வுக்கு உத்தரவிடப் பட்டது.

1944 ஜூன்-ஜூலையில் இந்தத் தோல்வி ஏற் பட்டது. காயமடைந்தவர்களும், இறக்கும் நிலையில் இருந்த வீரர்களும், கடுமையான மலேரியாவிலும் சீதபேதியிலும் பீடிக்கப்பட்டவர்கள் மிகப் பலரும், கந்தல் உடை அணிந்தவர்கள் பலரும், தள்ளாடித் தள்ளாடித் மாண்டலேக்கும் ரங்கூனுக்கும் திரும்பி வர ஆரம்பித்தனர்.

இம்பால்மீது அடுத்த தாக்குதலுக்கு ஆயத்தங்கள் செய்வதில் இ.தே.ரா.வும் சிவிலியன்களும் முழு மூச்சுடன் முனைந்தனர். சிவிலியன்கள் புது உற்சாகத் துடன் யுத்த முயற்சியைப் பன்மடங்கு அதிகரிப்பதற்கு முன் வந்தனர்.

ஆனால் சூழ்நிலையோ இ.தே.ரா.வுக்கு பாதகமாக மேலும் மேலும் மாறிக் கொண்டிருந்தது. விமானபலம், இயந்திர சாதனங்கள் ஆகியவை தன்னிடம் அதிகமாக இருந்ததை எதிரி பயன்படுத்திக்கொண்டு, எதிரில் உள்ள எல்லாவற்றையும் துவம்சம் செய்து முன்னேற லாஹுன்—மெய்க்திலா, பையின்மனு என்ற இலக்குகளை நோக்கியும், இறுதியில் ரங்கூனை நோக்கியும் முன் னேறிக் கொண்டிருந்தான்.

ரங்கூனில் நேத்தாஜி நீடித்திருப்பது ஆபத்தானது என்று தோன்றவே, வேறு இடத்துக்குச் சென்று போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு

அவரை ஆஜாத் ஹிந்த் தற்காலிக சர்க்காரின் மந்திரிகள் சம்மதிக்கச் செய்தனர்.

மறக்க முடியாத இந்தப் பின்வாங்கல் 1945 ஏப்ரல் 24-ந்தேதி ஆரம்பமாயிற்று. சில மந்திரிகள், இ.தே.ரா. தளபதிகள், 'ஜான்ஸி ராணிகள்' ஆகியோரை ஏற்றிக்கொண்டு லாரிகளின் கோஷ்டி ஒன்று, பட்டு நிலா வீசும் இரவில் ரங்கூனிலிருந்து புறப்பட்டது; நேத்தாஜி தம்முடைய காரில் முன்னல் சென்ருர். நேத்தாஜியும் அவருடைய கோஷ்டியினரும் பாங்காக் போய்ச் சேர மூன்று வாரங்கள் ஆயின. தளர்ச்சியிலும் நிர்ப்பந்தப் பயணம், புண்ணுகி வெடித்த பாதங்கள், பசி, தாகம், எதிர்ப்போர் விமானங்களிடமிருந்தும், குண்டு வீச்சு விமானங்களிட மிருந்தும் மயிரிழையில் உயிர் தப்புதல், அபாயகரமான மாபெரும் ஆறுகளைத் தாண்டுதல் ஆகியவை நிறைந்த மூன்று வாரங்கள் அவை.

'நேச நாடு'களின் படைகளிடம் ஜெர்மனி சரணுகதி செய்து ஒரு வாரத்திற்குப் பின்னர், 1945 மே மாதம் மத்தியில், நேத்தாஜி கோஷ்டியினர் ஒருமட்டுக்குப் பாங்காக் போய்ச் சேர்ந்தனர்.

ஜப்பான் தொடர்ந்து போராடிக் கொண்டிருந்தது.

பிரிட்டிஷ்காரர்களுக்கு எதிராக இ.தே.ரா நீடித்துப் போராட்டம் நடத்துவதற்கான திட்டங்களை வகுப்பதற்காக நேத்தாஜி தம்முடைய மந்திரிகளுடன் நீண்டநேர ஆலோசனைகள் நடத்தினுர்,

இந்தக் கட்டத்தில், 1945 ஜுனில், ஒரு செய்தி வந்தது—வைசிராயின் நிர்வாகக் கவுன்ஸிலில் அதிகப் படி இந்தியர்களைச் சேர்த்துக் கொள்வதாகவும்,

மஹாத்மா காந்தியும் காங்கிரஸும் எதிர்ப்பைக் கைவிட்டு பிரிட்டிஷ் யுத்த முயற்சியில் ஒத்துழைக்க வேண்டும் என்றும் வைசிராய் வேவல் பிரபு சமரசம் பேசுவதாக வந்த செய்தி அது.

அந்நிய சர்க்காருக்கும், இந்திய மக்களின் பிரதிநிதியான காங்கிரஸுக்கும் இடையே இருந்த விரோதத்தை மாற்றுவதற்கான எல்லா வழிகளையும் ஆராய்வதற்கு மஹாத்மா காந்தி, தமக்கே உரிய வெள்ளை உள்ளத்துடன், விரும்பினார். பின்னர் இந்த முயற்சியிலிருந்து மஹாத்மா காந்தி விலகிக்கொண்டு, 1945 ஜுன்–ஜுலையில் நடந்த சிம்லா மகாநாட்டில் காங்கிரஸ் சார்பில் அதன் அக்கிராசனர் மௌலானா ஆஜாத்தையே பேசுமாறு விட்டுவிடடார்; ஆஜாத்தின் ஆலோசகர்களாகச் சர்தார் வல்லபாய் பட்டேலும் பண்டித ஜவஹர்லால் நேருவும் கலந்துகொண்டனர்.

வேவல் திட்டத்தைப்பற்றிக் கேள்விப்பட்டதும், ஜுன் 18-ந் தேதியன்று நேத்தாஜி பாங்காக்கிலிருந்து சிங்கப்பூருக்குப் பறந்துசென்று அன்று முதல் சுமார் ஒரு மாத காலம்வரை ஒவ்வொரு இரவும் வானொலி மூலம் காங்கிரஸ் தலைவர்களுக்கு உரை நிகழ்த்தினார். வேவல் திட்டத்தை ஏற்க வேண்டாம் என்று அவர்களை அந்தரங்க சுத்தியுடன் மன்றாடிக் கேட்டுக்கொண்டார். இந்தியப் பிரச்சினையை பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சொந்த விவகாரமாகவே வைத்திருப்பது பிரிட்டிஷ்காரர்களின் வாலாயமான தந்திரம் என்பதை முக்கிய வாதமாகக் குறிப்பிட்டு வேவல் திட்டத்தை நிராகரிக்குமாறு காங்கிரஸ் தலைவர்களை அவர் வேண்டினார். தவிர, பிரிட்டனில் அடுத்த பொதுத் தேர்தலில் ஒரு வேளை தொழிற்கட்சி பதவிக்கு வரக்கூடும் என்பதால் தங்கள் பதவிக்காலத்திலேயே இந்தியப் பிரச்சினையை ஒருவித

மாகப் பைசல் செய்யக் கன்சர் வேட்டிவ் கட்சி சர்க்கார் விரும்பினர். தொழிற்கட்சி சர்க்காரின்மூலம் இந்தியாவுக்கு அதிகச் சாதகமான பைசல் கிடைக்கலாம் என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் பயந்தனர். வேவல் திட்டத்தைக் காங்கிரஸ் நிராகரித்தால், இந்தியப் போராட்டம் ஒரு சர்வதேசப் பிரச்சினையாகத் தொடர்ந்து இருந்து வரமுடியும். அப்படியே பிரிட்டனுடன் சமரசம் செய்துகொள்ள காங்கிரஸ் விரும்பினுலும் அடுத்த பிரிட்டிஷ் பொதுத் தேர்தல்வரை பொறுத்திருப்பது நலம் என்று நேத்தாஜி கருதினுர்.

வேவல் திட்டத்தைக் காங்கிரஸ் இறுதியாக நிராகரித்துவிட்டது என்றும், சிம்லா மகாநாடு முறிந்துவிட்டது என்றும் கேள்வியுற்றதும் நேத்தாஜி பெருமகிழ்ச்சி அடைந்தார்.

பின்னர் அவர் மலேயாவில் சுற்றுப் பிரயாணம் செய்யத் தொடங்கினுர். ஸெராம்பனில் அவர் தங்கியிருந்தபோது, ஜப்பான்மீது ரஷியா யுத்தப் பிரகடனம் செய்திருப்பதாகத் தகவல் கிடைத்தது. சிறிது காலத்துக்குள், விடுதலைச்சங்க அதிகாரிகள் சிலர் ஒருநாள் நள்ளிரவில் சிங்கப்பூரிலிருந்து நேத்தாஜியின் முகாமுக்குச் சென்று, ஆகஸ்ட் 11-ந் தேதி ஜப்பான் சரணுகதி செய்துவிட்டது என்ற செய்தியைத் தெரிவித்தனர்.

இ.தே.ரா.வின் வரலாற்றிலேயே இருள் நிறைந்த வேளை அது; ஏனெனில், இ.தே.ரா. தனியாக யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவது பயனற்ற காரியமாகிவிட்டது. கிழக்கு ஆசியா எங்கிலும் ஜப்பானியர்கள் ஆயுதங்களைக் கைவிட்டுச் சரணடைவது

என்ருல், போரை இ.தே.ரா- தொடர்ந்து நடத்துவது தற்கொலே செய்து கொள்வதையும்விட மோசமான தாக இருந்திருக்கும்.

இ. தே. ரா. சரணடையாது, சரணடையும் அவசியமும் இல்லே; ஆனுல் போரை அது தொடர்ந்து நடத்த முடியாது; போர் செய்வதை நிறுத்த வேண்டியதுதான்.

ஆகவே ராணுவ ரீதியில்—ராணுவ ரீதியில் மாத்திரமே—இ.தே.ரா. தோற்றுவிட்டது. மற்றப்படி, அது போரிட்ட இடங்களில் எல்லாம் அழியாப் புகழை ஏற்கனவே பெற்றுவிட்டது. இந்தியாவின் விடுதலேக்காக நேத்தாஜியும் இ.தே.ரா.வும் அனுபவித்த ஈடற்ற கஷ்டங்களும் புரிந்த தியாகங்களும் ஜப்பானியர், சீனர், பர்மியர், தாய்லாந்தினர், மலாய்க்காரர்கள், பிலிப்பைன்மக்கள், இந்தோனேசியர், வியட்ஞமியர் ஆகியோர் அனேவருடைய மரியாதையையும் பாராட்டுதலேயும் பெற்றுவிட்டன. பஸிபிக் யுத்தம் தொடங்கிய சமயத்தில் காலனி ஆட்சிக்கு உட்பட்டிருந்தவர்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மக்கள், பின்னர் ஜப்பானியப் படைகள் முன்னேறி வந்தபோது காலனி ஆட்சியாளர்கள் ஓட்டம் பிடித்ததை அவர்கள் கண்டனர்; அதன்பின் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸின் விறுவிறுப்பான தலேமையில் இந்திய விடுதலே இயக்கமும் தேசாபிமானமுள்ள இந்திய தேசிய ராணுவமும் எழுந்ததைக் கண்டு அவர்கள் உள்ளக் கிளர்ச்சி அடைந்தனர். பர்மியர், மலாய்க்காரர்கள், இந்தோனேசியர், வியட்ஞமியர் ஆகியோர் தாங்கள் எக்காலமும் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்றும், யுத்தத்திற்குப் பின் முந்தைய ஆட்சியாளர்கள் தங்கள் நாடுகளுக்குத் திரும்புவதை அனுமதிக்கக்கூடாது என்றும் புனிதப் பிரதிக்கினே எடுத்தனர்.

நேத்தாஜி உடனே சிங்கப்பூருக்குப் பாய்ந்து சென்றார். தற்காலிக சர்க்காரின் சிவிலியன் பிரிவுக்கும் ராணுவப் பிரிவுக்கும் அவற்றின் வருங்காலம்பற்றி மிக விரிவான தாக்கீதுகளை அவர் பிறப்பித்தார். அவருடைய மந்திரிகள் திரும்பத் திரும்ப வற்புறுத்தியதன் பேரில், கடைசி நிமிஷத்தில், சிங்கப்பூரைவிட்டு இன்னும் கிழக்கு நோக்கிச் செல்வதற்கு அவர் சம்மதித்தார். மற்றச் சகாக்களுடன் சிங்கப்பூரில் தங்கி, வெற்றி வீரர்களாக அங்கு திரும்பக்கூடிய பிரிட்டிஷ்காரர்களிடம் கைதாவதற்கு அவர் அனுமதிக்கப்படவில்லை; ஆயினும் மஞ்சூரியாவில் ரஷ்யர்களுடன் தொடர்பு கொண்டு மாஸ்கோவுக்குப் போக அவர் உறுதி கொண்டிருந்தார்; இந்திய விடுதலைப்போரை மறுபடியும் என்றாவது நடத்த தமக்கு வசதி கிடைக்கலாம் என்பதே இதன் நோக்கம்.

சிங்கப்பூரைவிட்டு பாங்காக்குக்கு விமானத்தில் செல்ல இறுதியாகச் சம்மதித்தபோதுதான், தமக்கு விதியில் நம்பிக்கை உண்டு என்று அவர் குறிப்பிட்டார். முன்பே கணிக்கப்பட்ட விதியின்படியே சம்பவங்கள் நிகழும் என்ற பொருளில் அவர் இவ்வாறு சொன்னார். பாங்காக் போய்ச் சேர்ந்தபின் என்னென்ன செய்ய வேண்டியிருக்கும் என்பது அச் சமயத்தில் அவருக்குத் தெரியாது.

ஜப்பான் சரணாகதி செய்துவிட்டதாக ஆகஸ்ட் 15-ந் தேதி அதிகாரபூர்வமாய் அறிவிக்கப்பட்டது.

நம்பிக்கையான சகாக்களின் சிறு கோஷ்டியுடன் நேத்தாஜி ஆகஸ்ட் 16-ந் தேதி சிங்கப்பூரிலிருந்து பாங்காக்குக்கு விமானத்தில் சென்றார் ; மறுநாள் காலை அங்கிருந்து சைகோனுக்குப் போனார். எதிர்காலம் பற்றிச் சில திட்டங்களை வகுத்துக்கொண்டு, அன்று மாலையே விமானத்தில் புறப்பட்டார்; பிறர் அறிந்

தவரை அவருடைய கடைசி விமானப் பயணம் அதுதான். 1945 ஆகஸ்ட் 15-ந் தேதி, சைகோனி லிருந்து அவருடன் சென்ற ஒரே இந்தியர் இ.தே.ரா. தலைமை அலுவலக டெபுடித் தலைவர் கர்னல் ஹபீபுர் ரஹ்மான்தான்; நேத்தாஜி சென்ற நடுத்தரக் குண்டுவீச்சு விமானத்தில் போதிய இடமில்லாமையால் அவருடைய கோஷ்டியைச் சேர்ந்த மற்றவர்கள் சைகோனிலேயே தங்க நேர்ந்தது.

1945 ஆகஸ்ட் 18-ந் தேதி, ஜப்பானுக்குச் செல்லும் வழியில், பார்மோஸாவில் நேர்ந்த ஒரு விமான விபத்தில் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் மரணமடைந்ததாக, ஐந்து நாட்களுக்குப்பின், அதாவது 1945 ஆகஸ்ட் 22-ந் தேதி, டோக்கியோ ரேடியோ அறிவித்தது.

நேத்தாஜி டேய்ரனை நோக்கிச் செல்வதாகவும், அங்கிருந்து எல்லையைத் தாண்டி ரஷியர்களுடன் தொடர்பு கொள்ளுவார் என்றும், சைகோனில் விடப்பட்ட நானும் மற்றச் சகாக்களும் எண்ணி யிருந்தோம்.

இ:தே.ரா. நாடகத்தின் கடைசிக் காட்சிகள் இந்தியாவில் நடத்தப்பட்டன—அங்கு, டில்லிச் செங் கோட்டையில் மேஜர்—ஜெனரல் ஷாநவாஸ், கர்னல் பி.கே. ஸைகல், கர்னல் ஜி.எஸ். தில்லன் ஆகியோர்மீது நடந்த விசாரணை பிரசித்தமானது. பிரிட்டிஷ் மன்னருக்கு எதிராகப் போர் தொடுத்ததாக அவர்கள் குற்றஞ்சாற்றப்பட்டனர். இந்த வழக்கு நாடு முழுதிலும் ஆவேச எழுச்சியை ஏற்படுத்தியது, பிரிட்டிஷ் எதிர்ப்புக் கலவரங்களையும் கடற்படைக் கலகம் ஒன்றையும் அது கிளப்பியது. அதன்பின், அதிகக் காலதாமதமின்றி, 1947 ஆகஸ்ட் 15-ந் தேதி இந்தியா சுதந்திரம் பெற்றது.

பாகம் 3: நேத்தாஜி பேருரைகள்

இ.தே.ரா. வின் பிரதிக்கினை

தீரமிக்க ஜவான்களே! தேசிய மூவர்ணக் கொடியின் கீழ் நின்று, உங்கள் கடைசி மூச்சுவரை பகைவனை எதிர்த்துப் போராடப் போவதாக இன்று நீங்கள் பிரதிக்கினை எடுத்திருக்கிறீர்கள். இன்று முதல் நீங்கள் சுதந்திர இந்தியாவின் 'இந்திய தேசிய ராணு'வத்தின் ஜவான்கள். நாற்பது கோடி இந்தியர் களின் பொறுப்பைத் தோள் கொடுத்துத் தாங்குவதற்கு நீங்களாகவே முன் வந்துள்ளீர்கள். இன்று முதல் உங்கள் மனமும், பலமும், பணமும் பாரத சமுதாயத் துக்குச் சொந்தமானவை.


நண்பர்களே, 'ஆஜாத் ஹிந்த் ஃபௌஜி'ன் முன்னோடி ஜவான்களாகும் கௌரவம் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. சுதந்திர இந்தியாவின் வர லாற்றிலே உங்கள் பெயர்கள் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்படும். இந்தப் புனித யுத்தத்தில் உயிர்த் தியாகம் புரியும் ஒவ்வொரு ஜவானுக்கும் சுதந்திர இந்தியாவில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்பெறும். அந்த நினைவுச் சின்னங்கள்மீது வருங்காலத் தலை முறையினர் மலர்மாரி பெய்வர். உங்கள் தாய் நாட்டுக்குத் தொண்டாற்றுவதற்கு இந்த அருமையான வாய்ப்பு கிடைத்திருப்பது உங்கள் பெரும்பேறு ஆகும். இந்தச் சடங்கை ஒரு அந்நிய நாட்டில் நாம் நடத்துகிறோம் என்றாலும் நம் மனங்களும் இதயங்களும் நம் நாட்டில்தான் உள்ளன. உங்கள் ராணுவப் பொறுப்புகளும் அரசியல் பொறுப்புகளும் அன்றாடம் பெருகி வருகின்றன என்பதை நீங்கள் நினைவில்

1942 ஜூன் மாதம், ஐரோப்பாவில் இருந்த இந்திய தேசிய ராணுவத்துக்கு வானொலியில் நிகழ்த்திய உரை.



ஐரோப்பாவில் இந்திய தேசிய
இராணுவத்தினரிடையே
உரை நிகழ்த்துகிறார்


ஐரோப்பாவிலிருந்து கிழக்காசியாவுக்கு நீர்மூழ்கிக்கப்பல் ஒன்றில் பயணம்
மேற்கொண்ட பொழுது கப்பல் தளத்தில் எடுக்கப்பட்ட படம்






சிங்கப்பூரில் இந்திய தேசிய இராணுவத்தினரின் முதலாவது படை அணிவகுப்பை பார்வை யிடுகிருர்


இ. தே. ராவின் ஜான்ஸி ராணி படைப்பிரிவின் அணி ஒன்றைப் பார்வையிடுகிருர்





ஆஜாத் ஹிந்த் தற்காலிக சர்க்காரின் பிரகடனத்தை வாசிக்கிறார். சிங்கப்பூரில் 1943, அக்டோபர் 21-ந் தேதி யன்று இந்தியர்கள் கூட்ட மொன்றில் இப்பிரகடனம் வாசிக்கப்பட்டது.

அஜாத் ஹிந்த் தற்காலிக சர்க்காரின் மந்திரி சபையினருடன் நேதாஜி





அந்தமான் தீவுகளில் பாதாள சிறைச்சாலையைப் பார்வை யிட்டுக் கொண்டிருக்கிறார்



ஸ்ரீ செய்கோன் விமான நிலையத்தில் நேதாஜி. (1945 ஆகஸ்ட் 17.) இதுவே கடைசியாகக் கிடைத்த நேதாஜியின் படமாகும்

கொள்ள வேண்டும். அவற்றைச் சரிவர ஏற்பதற்கு நீங்கள் சித்தமாக இருக்க வேண்டும்; இந்திய விடுதலைப் பேரிகை முழங்கிவிட்டது. வரப்போகும் போராட்டத்துக்கு நாம் ஆயத்தமாக வேண்டும். நாம் ஏற்றுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காகக் கூடிய சீக்கிரத்தில் ஆயத்தமாக வேண்டும். உங்களிடம் உள்ள ராணுவத் திறனைப் பிரயோகிக்க வேண்டியகாலம் தொலைவில் இல்லை என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன்.

இன்று தேசியக் கொடியின் கீழே நாம் சுதந்திர சபதம் எடுக்கிறோம். செங்கோட்டையிலே இந்தக் கொடிக்கு நீங்கள் வணக்கம் செலுத்தப்போகும் காலமும் வரும். ஆனால் சுதந்திரத்துக்கு உரிய விலையை நீங்கள் கொடுத்தாக வேண்டும் என்பதை நினைவில் வையுங்கள். பிச்சை கேட்பதன்மூலம் சுதந்திரம் ஒருக்காலும் கிடைக்காது. அதை பலாத்காரமாகப் பெற வேண்டும். இரத்தமே அதன் விலை. எந்த அந்நிய நாட்டினிடமும் நாம் சுதந்திரத்தை யாசிக்க மாட்டோம். உரிய விலை கொடுத்தே சுதந்திரத்தைப் பெறுவோம். அதற்கு எவ்வளவு விலை கொடுக்க வேண்டியிருந்தாலும் பரவாயில்லை. நாம் ஒன்று சேர்ந்து இந்தியாவுக்கு அணி வகுத்துச் செல்லும்போது ராணுவத்துக்கு நான் தலைமை தாங்குவேன் என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன். இங்கு நாம் நடத்துகின்ற இந்தச் சடங்கு பற்றிய செய்தி இந்தியாவுக்கு எட்டிவிட்டது. பிரிட்டிஷ்காரர்களுக்கு எதிராக வெறுங் கையுடன் நம் நாட்டில் போராடிக் கொண்டிருக்கும் தேசபக்தர்களுக்கு இது ஊக்கம் அளிக்கும். பகைவனிடமிருந்து சுதந்திரத்தைக் கைப்பற்றக்கூடிய ஒரு ராணுவத்தை உருவாக்க வேண்டும் என்பது வாழ்நாள் முழுவதும் என் ஆசையாக இருந்தது. இத்தகைய

ராணுவம் ஏற்பட்டிருப்பதன் பெருமை உங்களைச் சார்ந்தது, அதற்காக உங்களைப் பாராட்டுகிறேன். இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன், இன்று நீங்கள் தம்மிச்சையாக எடுத்துள்ள பிரதிக்கினையை நிறைவேற்றும் வலிமையை ஆண்டவன் உங்களுடனிருந்து உங்களுக்கு அருளட்டும். இன்க்விலாப் ஜிந்தாபாத்! (புரட்சி ஓங்குக!)

வாளேந்திய பகைவனை

வாள் கொண்டு எதிர்ப்போம்

இந்தியாவை விடுதலை செய்வது நம்முடைய பணி; அதை நாம்தான் நிறைவேற்ற வேண்டும். அந்தப் பொறுப்பை வேறு எவர்மீதும் நாம் சுமத்தக்கூடாது; ஏனெனில் அவ்வாறு சுமத்துவது நம்முடைய தேசிய கௌரவத்தைப் பாதிக்கும்......

ஆனால் பகைவனே கொடியவனாக, விரக்தியுள்ள வனாக, சர்வ ஆயுதபாணியாக நிற்கிறான். இத்தகைய விரோதிக்கு எதிராக எத்துணைச் சட்டமறுப்பு அல்லது நாச வேலை அல்லது புரட்சிப் பயங்கரவாதமும் எள்ளள வேனும் பயன்தராது. ஆகவே பிரிட்டிஷ் ஆதிக்கத்தை இந்தியாவிலிருந்து துரத்த வேண்டுமானால், பகைவ னுடன் அவனுடைய ஆயுதங்களைக்கொண்டே போராட வேண்டும். எதிரி ஏற்கனவே வாளை உருவிவிட்டான்; ஆகையால் அவனுடன் வாள்கொண்டே போராட வேண்டும்,

கிழக்கு ஆசியாவில் உள்ள என்னுடைய நாட் டினரின் உதவியால் பிரம்மாண்டமான ஒரு படையை என்னால் திரட்ட முடியும் என்றும், இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆதிக்கத்தைத் துடைத்தெறிய அப் படை யினால் முடியும் என்றும் உறுதியாக நம்புகிறேன்.... தக்க தருணம் வந்துவிட்டது; ஒவ்வொரு இந்தியனும் போர்க்களத்தை நோக்கி முன்னேற வேண்டும். சுதந்திரப் பிரியர்களான இந்தியர்களின் இரத்தம் பெருகியோடத் தொடங்கும்போது இந்தியா சுதந்திரம் பெறும்.

1943, ஜூன் 29-ந் தேதி, மலேயாவில் இருந்த இந்திய தேசிய ராணுவத்துக்கு விடுத்த செய்தியிலிருந்து சில பகுதிகள்;

சலோ டில்லி!

இந்திய விடுதலைப்படை ஜவான்களே! இன்றைய தினம்தான் என் வாழ்க்கையிலேயே பெருமிதம் மிகுந்த நாள். இந்தியாவின் விடுதலைப் படை தோன்றிவிட்டது என்பதை உலகம் முழுவதற்கும் பறைசாற்றும் தனிப் பெரும் பெருமையை இன்று ஆண்டவன் எனக்கு அருளியிருக்கிறார். ஒரு காலத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அரணாக இருந்த சிங்கப்பூரிலே, அதன் ரணகளத்திலே, இந்தப் படை இப்போது ராணுவ வியூகம் வகுத்து நிற்கிறது. இந்தியாவை பிரிட்டிஷ் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்யப்போகும் ராணுவம் மாத்திரம் அல்ல இது; சுதந்திர இந்தியாவின் வருங்காலத் தேசிய சேனையை உருவாக்கப்போகும் ராணுவமும் இதுதான். இந்த ராணுவம், இந்தியரின் சொந்த ராணுவம்; அது முற்றிலும் இந்தியத் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது; சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்தச் சமயம் வரும்போது அது, இந்தியத் தலைமையின் கீழ் போர்க்களத்துக்குச் செல்லும்—இது குறித்து ஒவ்வொரு இந்தியரும் பெருமிதம் கொள்ள வேண்டும்.

சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை சிரஞ்சீவி சாம்ராஜ்யம் என்று ஒருகாலத்தில் நினைத்த மனிதர்களும் இருக்கிறார்கள். ஆனால் இத்தகைய எண்ணம் என்னை எச்சமயத்திலும் தொந்தரவு செய்ததில்லை. ஒவ்வொரு சாம்ராஜ்யத்துக்கும் நசிவும் உண்டு நாசமும் உண்டு என்ற வரலாற்றுப் படிப்பினையை நான் அறிந்திருந்தேன். தவிர, ஒரு காலத்தில் வல்லரண்களாக இருந்த நகரங்களும் கோட்டைகளும் காலஞ்சென்ற சாம்ராஜ்யங்களின்

1943 ஜுலை 5-ந் தேதி இந்திய தேசிய ராணுவ அணிவகுப்பைப் பார்வையிட்டபோது நிகழ்த்திய உரை.

கல்லறைகளாக மாறியதை நானே கண்கூடாகப் பார்த்திருந்தேன். இன்று, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கல்லறைமீது நிற்கும்போது, சர்வவல்லமை படைத்த அந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் எப்போதோ காலமாகி விட்டது என்பதை ஒரு குழந்தைகூட உணர்கிறது.

1939-ல் ஜெர்மனிமீது பிரான்ஸ் யுத்தம் தொடுத்து கைகலப்புத் தொடங்கியபோது, ஜெர்மானிய ஜவான்கள் அனைவரும் ஒரு குரலாய் எழுப்பிய கோஷம், ''பாரிஸ் செல்வோம், பாரிஸ் செல்வோம்'' என்பதுதான். 1941 டிசம்பரில் ஜப்பானின் தீர ஜவான்கள் முன்னேறத் தொடங்கியபோது ஒரு குரலாய் எழுப்பிய கோஷம் ''சிங்கப்பூர் செல்வோம், சிங்கப்பூர் செல்வோம்'' என்பதுதான். தோழர்களே ஜவான்களே! ''சலோ டில்லி, சலோ டில்லி'' என்பதே உங்கள் யுத்த கோஷமாக இருக்கட்டும். இந்தச் சுதந்திர யுத்தத்திலே நம்முள் எத்தனைபேர் உயிருடன் எஞ்சியிருப்பர் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மாத்திரம் எனக்குத் தெரியும்—அதாவது, இறுதியில் நாமே வெல்வோம்; நம்முள் எஞ்சிய வீரர்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மற்றொரு கல்லறையான 'லால் கிலா' என்ற செங்கோட்டையின் மீது வெற்றி அணிவகுப்பு நடத்தும்வரை நம்முடைய பணி முடியப்போவதில்லை.

சுதந்திரம் பெறுவதற்கு இந்தியா எல்லாத் தகுதிகளையும் பெற்றுள்ளபோதிலும், விடுதலைப் படை இல்லாததுதான் அதன் ஒரே ஒருகுறை என்று என்னுடைய பொது வாழ்வுக்காலம் முழுதிலும் நான் கருதி வந்திருக்கிறேன். அமெரிக்காவின் ஜார்ஜ் வாஷிங்டன் போர் செய்து சுதந்திரம் பெற முடிந்தது, ஏனெனில் அவரிடம் ஒரு ராணுவம் இருந்தது. இத்தாலியை கரிபால்டி

விடுதலை செய்ய முடிந்தது; ஏனெனில் ஆயுதமேந்திய தொண்டர்கள் அவர் பின்னுல் நின்றனர். முதன் முதலாக நீங்கள் முன் வந்து இந்திய தேசிய ராணுவத்தை அமைத்திருப்பது உங்களுக்குத் தனிப் பெருமை தருகிறது. நீங்கள் இவ்வாறு செயதிருப்பதன் மூலம் நம்முடைய சுதந்திரப் பாதையில் கிடந்த கடைசித் தடை மதிலை நீக்கிவிட்டீர்கள். இத்தகைய மகோன்னதப் பணியில் முன்னேடிகளாக, முன்னணி யினராக இருப்பது குறித்து மகிழ்ச்சி அடையுங்கள், கர்வம் கொள்ளுங்கள்.

நீங்கள் இரண்டு பணிகளை நிறைவேற்ற வேண்டி யிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆயுத பலத்தின் மூலமும் உங்கள் இரத்தத்தைக் கொடுத்தும் நீங்கள் சுதந்திரம் பெற்றுத் தரவேண்டும். அதன்பின், இந்தியா விடுதலை யடைந்தபின், சுதந்திர இந்தியாவின் நிரந்தர ராணுவத்தை நீங்கள் உருவாக்க வேண்டும்; நம்முடைய சுதந்திரத்தை நிரந்தரம் காப்பது அதன் பணியாக இருக்கும். நம்முடைய வரலாற்றிலேயே இன்னெருமுறை சுதந்திரத்தை இழக்காத வகையில், அசைக்க முடியாத அஸ்தி வாரத்தின்மீது நம்முடைய தேசிய ராணுவத்தை நிருமாணிக்க வேண்டும்.

ஜவான்கள் என்ற முறையில், விசுவாசம், கடமை, தியாகம் என்று மூன்று லட்சியங்களையும் நீங்கள் எப்போதும் போற்றிக் கடைப்பிடிக்க வேண்டும். தங்கள் நாட்டினிடம் எப்போதும் விசுவாசம் பூண்ட ஜவான்களை, உயிரைத் தியாகம் செய்ய எப்போதும் ஆயத்தமாக இருக்கும் ஜவான்களை, யாராலும் வெல்ல முடியாது. நீங்களும் வெல்ல முடியாத வீரர்களாக விளங்க விரும்பினுல் உங்கள் இதயத்தின் ஆழத்திலே

இந்த மூன்று லட்சியங்களையும் பதித்துக் கொள்ள வேண்டும்.

உண்மையான ஜவானுக்கு ராணுவப் பயிற்சி ஆன்மிகப் பயிற்சி என்ற இரண்டும் அவசியம். ஒவ்வொரு ஜவானும் அளவற்ற தன்னம்பிக்கை கொள்ளும் விதத்திலும், தான் எதிரியைவிட மிகமிக உயர்வாய் இருப்பதை உணரும் விதத்திலும், மரணத்தைத் துச்சமாக மதிக்கும் விதத்திலும், நெருக்கடி ஏற்படும்போது சமயோசிதமாய்ச் சுயமாகச் செயல்புரியும் விதத்திலும் நீங்கள் அனைவரும் பயிற்சி பெற வேண்டும்; உங்கள் சகாக்களையும் அவ்வாறே பயில்விக்க வேண்டும். தீரம் அஞ்சாமை, விறுவிறுப்பு, ஆகியவற்றுடன் விஞ்ஞான ரீதியான பயிற்சியையும் இணைத்தால் என்னவெல்லாம் சாதிக்க முடியும் என்பதை இப்போதைய யுத்தத்தில் நீங்களே கண் கூடாகப் பார்த்திருக்கிறீர்கள். இந்த உதாரணத்தில் படிப்பினையை நன்கு தெரிந்துகொண்டு, பாரத மாதாவுக்காக முதல்தரமான நவீன சைனியத்தை உருவாக்குங்கள்.

உங்களுக்குள் தலைமை அதிகாரிகளாக இருப்போரின் பொறுப்பு மிகப் பெரியது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைய உலகில், எந்த ராணுவத்திலும் உள்ள தலைமை அதிகாரியின் பொறுப்பு மிகப் பெரியதுதான் என்றாலும் உங்களுடைய பொறுப்பு அதைவிட மிகமிகப் பெரியது ஆகும். அரசியல் ரீதியில் நாம் அடிமைப்பட்டது காரணமாக நமக்கு ஆதரிசம் அளிப்பதற்கு முக்டன், போர்ட் ஆர்தர் அல்லது செடான் போன்ற யுத்தகள வெற்றி வளமுறை எதுவும் நம்மிடம் இல்லை. பிரிட்டிஷ் காரர்கள் நமக்குப் போதித்த விஷயங்கள் சிலவற்றை

நாம் மறக்க வேண்டும், அவர்கள் போதிக்காத பல விஷயங்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். எனினும் நீங்கள் சமயத்துக்கு ஏற்ற தீரத்துடன் செயல்புரிந்து, உங்கள் வீரத் தோள்களுக்கு உங்கள் நாட்டு மக்கள் பணித்துள்ள பணியைச் செய்து முடிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஒரு ராணுவம் சீர் பெறுவதும் சீர் குலைவதும் தலைமை அதிகாரிகளையே பொறுத்திருக்கிறது என்பதை எப்போதும் நினைவில் வைத்திருங்கள். உதவாக்கரைத் தலைமை அதிகாரிகள் காரணமாகவே பிரிட்டிஷ்க்காரர்கள் பலப்பல போர் முனைகளில் தோல்வி யடைந்துள்ளனர் என்பதையும் எப்போதும் நினைவில் வைத்திருங்கள். உங்களிடையே யிருந்துதான் சுதந்திர இந்திய ராணுவத்தின் வருங்காலப் பிரதம தலைமையதிகாரிகள் தோன்றுவர் என்பதையும்கூட ஞாபகத்தில் வையுங்கள்.

இந்த யுத்தத்தின் வாயிலாக நீங்கள் அனுபவமும் வெற்றியும் பெறவேண்டும்; இவை தாம் நம்முடைய ராணுவத்தின் தேசிய வளமுறையை உருவாக்க முடியும் என்பதை உங்கள் அனைவருக்கும் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். தீரம், அஞ்சாமை, தோல்வி அறியாமை என்ற வளமுறையைக் கொண்டிராத ராணுவம் எதுவும் போராட்டத்தில் வலிமை வாய்ந்த பகைவனை எதிர்த்து நிற்க முடியாது.

தோழர்களே, மனித மனம் உருவாக்கக் கூடிய வற்றுள் மகோன்னதமான ஒரு பணியை நீங்களாகவே ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். இத்தகைய பணியை நிறைவேற்றுவதற்காக எத்தகைய தியாகமும், உயிர்த் தியாகமும்கூட பெரிதல்ல. இந்திய தேசிய கௌரவத் தின் காப்பாளர்களாக, இந்தியாவின் நம்பிக்கைகள், ஆசைக்கனவுகள் ஆகியவற்றின் சின்னமாக இன்று நீங்கள் விளங்குகிறீர்கள்.

ஆகவே, உங்கள் நாட்டினர் உங்களை வாழ்த்தும் விதத்திலும், வருங்காலச் சந்ததிகள் உங்களைப்பற்றிப் பெருமைகொள்ளும் விதத்திலும் நடந்து கொள்ளுங்கள்.

என்னுடைய வாழ்க்கையிலேயே பெருமிதம் மிகுந்த நாள் இது என்று சொன்னேன். விடுதலைப் படையில் முதலாவது ஜவானாக நிற்பதைவிட மேலான பெருமையும் கௌரவமும் அடிமைப்பட்ட ஒரு மக்களினத்துக்கு வேறு இல்லை. ஆனால் இந்தப் பெருமைக்குச் சமமான பொறுப்பும் உண்டு, அதை நான் நன்கு உணர்கிறேன். இருளிலும் ஒளியிலும் சுகத்திலும் துக்கத்திலும், வேதனையிலும் வெற்றியிலும் நான் உங்களுடனேயே இருப்பேன் என்று வாக்களிக்கிறேன். பசி, தாகம், துன்பம், நிர்ப்பந்தப் பயணங்கள், மரணம் ஆகியவற்றைத் தவிர வேறு எதையும் இப்போது உங்களுக்கு நான் தருவதற்கில்லை. ஆனால் வாழ்விலும் சாவிலும் நீங்கள் சளைக்காமல் என்னைப் பின்பற்றி வந்தால்,—அவ்வாறு தொடர்ந்து வருவீர்கள் என்று நம்பிக்கை எனக்கு உண்டு—வெற்றிக்கும் சுதந்திரத்துக்கும் உங்களை அழைத்துச்செல்வேன். இந்தியா சுதந்திரம் பெறுவதைக் கண்ணால் காண நம்முள் யார் யார் எஞ்சியிருப்பர் என்பது முக்கியமல்ல; இந்தியா சுதந்திரம் பெற வேண்டும் என்பதும், அதைச் சுதந்திர நாடாக்குவதற்காக நாம் எல்லாவற்றையும் தியாகம் செய்வோம் எனபதுவுமே நமக்குப் போதும். நம்முடைய ராணுவத்தைக் கடவுள்ஆசீர்வதிக்கட்டும், வரப்போகும் போரில் நமக்குவெற்றி அளிக்கட்டும்.

இன்க்விலாப் ஜிந்தாபாத்! ஆஜாத் ஹிந்த் ஜிந்தாபாத்! (புரட்சி ஓங்குக! சுதந்திர இந்தியா ஓங்குக!)

முழு யுத்தத்துக்கு முழு ஆயத்தம்

நம்முடைய நாட்டை எவ்வாறு விடுதலை செய்ய உத்தேசித்துள்ளோம் என்பதை, நம்முடைய எதிரிகள் உட்பட உலகம் முழுவதற்கும் நான் பகிரங்கமாய் அறிவிக்கக்கூடிய வேளை வந்துவிட்டது. இந்தியாவுக்கு வெளியே வாழும் இந்தியர்கள், குறிப்பாக கிழக்கு ஆசிய இந்தியர்கள் போர்ப்படை ஒன்றை உருவாக்கப் போகிறார்கள்; இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் ராணுவத்தைத் தாக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்ததாக அது இருக்கும்; நாங்கள் அவ்வாறு தாக்கும்போது இந்தியாவில் உள்ள மக்களிடையே மாத்திரம் அன்றி, இப்போது பிரிட்டிஷ் கொடியின் கீழ் நிற்கும் இந்திய ராணுவத்திலும் ஒரு புரட்சி கிளம்பும். இவ்வாறு இரு புறங்களிலிருந்து—இந்தியாவுக்கு உள்ளேயும் வெளியேயுமிருந்து—பிரிட்டிஷ் சர்க்கார் தாக்கப்படும் போது அது சாய்ந்துவிடும்; இழந்த சுதந்திரத்தை இந்திய மக்கள் திரும்பப் பெறுவர்.

ஆகவே, என்னுடைய திட்டத்தின்படி இந்தியா பற்றிய அச்சு நாடுகளின் கொள்கை எப்படி இருக்கும் என்றுகூட நாம் கவலைப்பட வேண்டியதில்லை. இந்தியாவுக்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கும் இந்தியர்கள் தங்கள் கடமையைச் செய்துவிட்டால் போதும், பிரிட்டிஷ்காரரர்களை இந்தியாவிலிருந்து விரட்டி 38.8 கோடி இந்திய மக்களை விடுதலை செய்துவிடலாம்.

இந்தியாவில் உள்ள 38.8 கோடி ஜனங்களால் இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆதிக்கத்தை வெளியேற்ற முடியாமல் இருக்கும்போது, வெளி நாடுகளில் வாழும்

1943 ஜூலை 9-ந் தேதி சிங்கப்பூர் பெருங்கூட்டத்தில் கடல் கடந்த இந்தியர்களுக்கு நேத்தாஜி விடுத்த வேண்டுகோளின் ஒரு பகுதி.

30 லட்சம் இந்தியர்களால் அதை எவ்வாறு சாதிக்க முடியும் என்று சில வறட்டுத் தவளைகள் கேட்கக்கூடும். ஆனால், நண்பர்களே, அயர்லாந்தின் வரலாற்றைக் கவனியுங்கள். பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் ஒருவகை ராணுவச் சட்டத்தின் கீழ், வாழ்ந்த 30 லட்சம் அயர்லாந்தியர், ஆயுதமேந்திய ஐயாயிரம் 'ஸின் ஃபீன்' கட்சித் தொண்டர்களின் உதவியுடன், பிரிட்டிஷ் சர்க்காரை 1921–ல் மண்டியிடச் செய்தனர் அப்படி யென்றால், முப்பது லட்சம் இந்தியர்கள், தங்கள் நாட்டில் உள்ள சக்தி வாய்ந்த இயக்கத்தின் ஆதரவுடன், பிரிட்டிஷ்காரர்களை இந்தியாவிலிருந்து விரட்டுவது எவ்வாறு அசாத்தியமாகும்?

ஆயினும், வெளியில் வாழும், குறிப்பாக கிழக்கு ஆசியாவில் வாழும், இந்தியர்கள் உச்ச அளவுக்கு ஆயத்தம் செய்வது அவசியம்; அவ்வாறு விறுவிறுப்புடன் ஆயத்தம் செய்வதற்காக சுதந்திர இந்தியாவின் தற்காலிக சர்க்கார் ஒன்றை அமைக்க உத்தேசித்திருக்கிறேன். இந்திய மக்களின் ஆதார சாதனங்களை யெல்லாம் ஒன்றுதிரட்டி, இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் ராணுவத்துக்கு எதிரான போருக்குத் தலைமை தாங்கி நடத்துவது இந்த சர்க்காரின் பொறுப்பாக இருக்கும். அந்தப் போர் வெற்றிகரமாக முடிந்து இந்தியா விடுதலையாகிவிட்டால், பின்னர் தற்காலிக சர்க்கார் விலகி, சுதந்திர இந்தியாவின் நிரந்தர சர்க்கார் பதவிக்கு வரும்; இந்திய மக்களின் விருப்பப்படி அந்த சர்க்கார் அமைக்கப்படும்.

நண்பர்களே, கிழக்கு ஆசியாவில் உள்ள முப்பது லட்சம் இந்தியர்கள் பணம், ஆள்பலம் உட்பட தங்களிடம் உள்ள எல்லா வசதிகளையும் ஒன்றுதிரட்ட வேண்டிய தருணம் வந்துவிட்டது என்பதை இப்போது நீங்கள் உணர்வீர்கள்; அறைகுறை ஏற்பாடுகள்

போதா. 'முழு ஆயத்தம்' செய்ய வேண்டும், அதற்கு இம்மியும் குறையக்கூடாது. ஏனென்றால் இது 'முழு யுத்தம்' என்று நமது எதிரிகள்கூட அடிக்கடி சொல்லி யிருக்கிறார்கள்.

ஆஜாத் ஹிந்த் ஃபௌஜ் அல்லது இந்திய தேசிய ராணுவம் என்ற இந்திய விடுதலைப் போர்ப்படையின் ஒரு பகுதியை இன்று நீங்கள் கண்முன் பார்க்கிறீர்கள்.

அன்று நகரசபை மண்டபத்துக்கு எதிராக அவர்கள் கவாத்து நடத்தினர். பழம்பெரும் டில்லி நகரின் செங்கோட்டை முன்னால் வெற்றிக் கவாத்து நடத்தும்வரை ஓய்ந்திருப்பதில்லை என்று அவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். 'டில்லி சலோ' என்ற கோஷத்தை அவர்கள் கைக்கொண்டுள்ளனர். நண்பர்களே, ''முழு யுத்தத்துக்கு முழு ஆயத்தம்'' என்பது கிழக்கு ஆசியாவில் உள்ள முப்பது லட்சம் இந்தியர்களின் கோஷமாக இருக்கட்டும்.

இந்த முழு ஆயத்தத்தின் மூலமாக, குறைந்தது மூன்று லட்சம் ஜவான்களும் மூன்று கோடி வெள்ளியும் (டாலர்) திரள வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். தீரம் மிகுந்த இந்தியப் பெண்மணிகளின் பட்டாளம் ஒன்றையும் திரட்ட விரும்புகிறேன்; அவர்கள் சாவைத் துச்சமாக மதிப்பர்; 1857.ல் இந்தியாவின் முதலாவது சுதந்திர யுத்தத்தில் ஜான்சி ராணி வீசிய வாளை அவர்களும் வீசுவர்.

நண்பர்களே, ஐரோப்பாவில் நடக்கும் இரண்டாவது உலக யுத்தம் பற்றிய பலப்பல செய்திகளை நாம் வெகுகாலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் தாயகத்தில் உள்ள நம் சோதரர்கள் இப்போது கடுமையான நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி யிருக்கிறார்கள்; இரண்டாவது போர் முனை வேண்டும் என்று அவர்கள்

கோருகின்றனர். கிழக்கு ஆசியாவில் நீங்கள் 'முழு ஆயத்தம்' செய்தால் இந்தியாவின் போராட்டத்துக்கு இரண்டாவது போர்முனை ஒன்றை, உண்மையான இரண்டாவது போர்முனையை, தொடங்குவதாக நான் உங்களுக்கு வாக்களிக்கிறேன்.

இ.தே.ரா.வின் தலைமை ஏற்பு

இந்திய சுதந்திர இயக்கம், ஆஜாத் ஹிந்த் ஃபௌஜ் ஆகியவற்றின் நலனை உத்தேசித்து, நான் இன்று நம்முடைய ராணுவத்தின் நேரடித் தலைமையை மேற்கொண்டிருக்கிறேன்.

எனக்கு மகிழ்ச்சியும் பெருமிதமும் அளிக்கும் விஷயம் இது; ஏனெனில், இந்திய விடுதலைப் படையின் சேனாதிபதிப் பதவியைவிட மேலான கௌரவம் எதுவும் ஒரு இந்தியனுக்குக் கிடைக்க முடியாது. ஆனால், நான் மேற்கொண்டுள்ள பணி எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதை உணர்கிறேன். பொறுப்புணர்ச்சியின் பெரும்பளு என்னை அழுத்துகிறது. எவ்வளவு கஷ்டமான, சோதனை நிறைந்த சந்தர்ப்பங்களிலும் இந்திய மக்களுக்கு என் கடமையை ஆற்றுவதற்கு வேண்டிய வலிமையை அருளுமாறு கடவுளைப் பிரார்த்திக்கிறேன்'

பல்வேறு மதங்களைப் பின்பற்றும் 38 கோடிச் சோதர மக்களின் சேவகனாகவே என்னைக் கருதுகிறேன். இந்த 38 கோடி மக்களின் நலனைப் பாதுகாக்கும் விதத்திலும், ஒவ்வொரு இந்தியனும் என்னிடம் முழு நம்பிக்கை வைக்கும் விதத்திலும் என்னுடைய கடமைகளை நிறைவேற்ற உறுதி பூண்டிருக்கிறேன். கலப்பற்ற தேசியம், பூரண நீதி, பாரபட்சமின்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்திய விடுதலைப் படையை உருவாக்க முடியும்.

நம்முடைய தாய்நாட்டை விடுதலை செய்வதற்காக இனி மூளப்போகும் போராட்டத்திலும், 38 கோடி இந்திய மக்களின் நல்லெண்ணத்துடன் சுதந்திர இந்தியாவின் அரசாங்கத்தை நிறுவுவதிலும், இந்தியாவின் சுதந்திரத்துக்கு நிரந்தர உத்தரவாதம் அளிக்கும்

1943 ஆகஸ்ட் 26-ந் தேதி பிறப்பித்த கட்டளை.

நிரந்தர சைனியத்தை உருவாக்குவதிலும் 'ஆஜாத் ஹிந்த் ஃபௌஜ்' ஜீவாதாரமான பொறுப்பு வகிக்க வேண்டியிருக்கும். இந்தப் பொறுப்பை நிறைவேற்று வதற்காக நாம் ஒரு சிறந்த ராணுவமாக ஒன்றுசேர வேண்டும்; இந்திய மக்களின் விடுதலைதான் அந்த ராணுவத்தின் ஒரே குறியாக இருக்க வேண்டும்; இந்திய விடுதலையைச் சாதிப்பது அல்லது செத்து மடிவது என்பதுதான் அதன் ஒரே உறுதியாக இருக்க வேண்டும்; நிற்கும்போது ஆஜாத் ஹிந்த் ஃபௌஜ் ஒரு கற்சுவர்போல் நிற்க வேண்டும்: அணிவகுத்துச் செல்லும்போது ஆஜாத் ஹிந்த் ஃபௌஜ் ஒரு நீராவி இயந்திர உருளையைப்போல எதிரிகளை நசுக்கிக்கொண்டு முன்னேற வேண்டும்.

நம்முடைய பணி லகுவானது அல்ல; யுத்தம் கடுமையாக இருக்கும்; நீண்ட காலத்துக்கு நடக்கும். ஆனால் நம்முடைய லட்சியத்தின் நியாயத்திலும் வெற்றியிலும் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. மனித இனத்தில் சுமார் ஐந்தில் ஒரு பகுதியினராக உள்ள 38 கோடி மனிதர்களுக்குச் சுதந்திரமாக வாழும் உரிமை உண்டு; விடுதலைக்கு உரிய விலையைக் கொடுக்க அவர்கள் இப்போது தயாராக இருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய பிறப்புரிமையான சுதந்திரத்தை மறுக்கக் கூடிய நாடு எதுவும் இப்போது உலகில் இல்லை.

தோழர்களே, தலைமையதிகாரிகளே, ஜவான்களே! உங்களுடைய முழு ஆதரவினாலும், தளராத விசுவாசத்தினாலும் ஆஜாத் ஹிந்த் ஃபௌஜ் இந்தியாவை விடுதலை செய்யும் சாதனமாக விளங்கப் போகிறது. நிச்சயமாக இறுதி வெற்றி நமக்கே என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன்.

"சலோ டில்லி" என்ற கோஷத்தை நம் வாய் முழங்க நாம் போராடுவோம்; புது டில்லியில் வைசிராய் மாளிகையின்மீது நம்முடைய தேசியக் கொடியை ஏற்றும்வரை, இந்தியத் தலைநகரின் புராதனச் செங்கோட்டையின் உட்புறத்தில் ஆஜாத் ஹிந்த் பௌஜ் வெற்றிக் கவாத்து நடத்தும்வரை தொடர்ந்து போராடுவோம்.

பணக்காரர்களுக்கு ஒரு வார்த்தை

இந்திய தேசிய ராணுவத்தில் தம்மிச்சையாகச் சேர்ந்து, அதற்குரிய பயிற்சியினைப் பெற்றுவரும் வீரர்களைப் பாருங்கள்; இந்தியா விடுதலை அடைவதைக் கண்ணால் காண்பதற்குத் தம்முள் எத்தனைபேர் எஞ்சியிருப்பர் என்பது அவர்களுக்குத் தெரியாது. கடைசித் துளி இரத்தம்வரை சிந்தவேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் அவர்கள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர் ; சுதந்திர இந்தியாவுக்குச் செல்வதற்கு, அல்லது வழியில் இறந்துபடுவதற்கு, அவர்கள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர். பின்வாங்குவது என்ற திட்டமே அவர்களிடம் இல்லை.

வெற்றியை எட்டிப் பிடிக்க வேண்டும், அல்லது இடைவழியில் கடைசித் துளி இரத்தம்வரை சிந்த வேண்டும் என்ற எண்ணத்துடன் இ.தே.ரா.வினர் பயிற்சிபெற்று வரும்போது, 'முழு ஆயத்தம்' என்றால் தங்களுடைய செல்வத்தில் 10 சதவிகிதமா அல்லது 5 சதவிகிதமா என்று பணக்காராகள் என்னிடம் வினவிக் கொண்டிருக்கிறார்கள். போராடும்போது தங்கள் இரத்தத்தில் 10 சதவிகிதம் மாத்திரம் சிந்திவிட்டுப் பாக்கியை மிச்சம் பிடிக்கும்படி நம்முடைய ஜவான்களிடம் கூற முடியுமா என்று சதவிகிதக் கணக்குப் போடுவோரிடம் நான் கேட்கிறேன்......

தங்களிடம் உள்ளதையெல்லாம் அள்ளிக் கொடுப்பதற்கு ஏழை மக்கள் தாமாகவே. உற்சாகத்துடன் முன் வருகிறார்கள். வாயில்காவலர், சலவையாளர், முடிதிருத்துவோர், சிறுகடைக்காரர்கள், பால்காரர்கள் போன்ற ஏழை இந்தியர்கள் தங்களிடம் இருப்பதையெல்லாம் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள்; அத்துடன் தொண்டர் படையில் சேர்வதற்கும் அவர்களில் சிலர் முன் வந்திருக்கின்றனர்.

1943, அக்டோபர் 26-ந் தேதியன்று நிகழ்த்திய உரை

சில ஏழை மக்கள் என்னிடம் வந்து, தங்கள்கையில் இருந்த ரொக்கத்தை யெல்லாம் கொடுத்ததுடன், ஆயுள் முழுதும் தாங்கள் சேமித்த பணம் எல்லாம் அடங்கிய சேமிப்பு பாங்கிக் கணக்குப் புத்தகங்களையும் சமர்ப்பித்துவிட்டனர். அதே உணர்ச்சியுடன், ''இந்திய விடுதலை இயக்கத்துக்காக இதோ என்னுடைய பாங்கிக் கணக்குப் புத்தகம்'' என்று தரக்கூடிய பணக்காரர்கள் மலேயா இந்தியரிடையே இல்லையா?

பாரத சமுதாயம் முழுவதுமே தியாகம் என்ற லட்சியத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறது. ஹிந்துக்களுக்குச் சந்நியாசிகள் காட்டிய லட்சியம் இருக்கிறது, முஸ்லிம்களுக்குப் பக்கிரிகள் காட்டிய மார்க்கம் இருக்கிறது. 38 கோடி மனித ஆன்மாக்களை விடுதலை செய்வதைப் பார்க்கிலும் மகத்தான, உன்னதமான, புனிதமான லட்சியம் வேறு உண்டோ?

மலேயா 10 கோடி ரூபாய் தரவேண்டும் என்பது என் வேண்டுகோள், மலேயாவில் உள்ள இந்திய உடைமைகளில் சுமார் 10 சதவிகிதம்தான் இது.

தற்காலிக சர்க்கார் உதயம்

ஆஜாத் ஹிந்த் தற்காலிக சர்க்கார் அமைக்கப் பட்டிருப்பதன்மூலம் என்னுடைய அரசியல் வாழ்வின் இரண்டாவது கனவு நனவாகிவிட்டது. போர் நடத்தி நம் சுதந்திரத்தைக் கைப்பற்றுவது என்ற ஒரே ஒரு கனவுதான் இன்னும் பாக்கி யிருக்கிறது....

தேசபக்த இந்தியா நெடுங்காலமாக பிரிட்டனுடன் போர் புரிந்து வருகிறது என்பது உலகறிந்த உண்மை. ஆயினும், 'சுதந்திர இந்திய தற்காலிக சர்க்கார், இப்போதுதான் முதன் முறையாக அமைக்கப்பட்டிருப் பதால், பிரிட்டன், அமெரிக்கா ஆகியவை சம்பந்தமாக நம்முடைய கொள்கையைத் தெளிவு படுத்துவதற்காகப் போர்ப் பிரகடனம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது.........

இந்த யுத்தப் பிரகடனம் வெறும் பிரசாரவித்தை அல்ல. நாம் சொல்வதைச் சொயலில் நடத்திக் காட்டுவோம். இத்தகைய முடிவைச் செயல்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இல்லாவிடில் அதை வகுப்பதில் நான் பங்கு கொண்டிருக்கவே மாட்டேன்.

சுதந்திர இந்திய தற்காலிக சர்க்கார் அமைக்கப்பட்டதும், 1943 அக்டோபர் 28-ந் தேதி சிங்கப்பூரில் வெளியிட்ட அறிக்கை.

ஆஜாத் தற்காலீக சர்க்கார் எதற்காக?

சரித்திரத்தை, குறிப்பாக புரட்சிகளின் வரலாற்றை, கடந்த 22 வருஷப் பொது வாழ்விலே ஆராய்ந்து கற்றவன் என்ற முறையில், இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் இரு குறைபாடுகள் இருப்பதாக நான் எப்போதும் உணர்ந்திருந்தேன்—ஒரு தேசிய ராணுவமும், போராட்டத்தில் அந்த ராணுவத்துக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்ல ஒரு தேசிய சர்க்காரும் இல்லாமையே அக் குறைபாடுகள்.

ஒரு தேசிய ராணுவத்தை ஏற்படுத்தியதன் வாயிலாகக் கிழக்கு ஆசியாவில் சுதந்திர இயக்கத்தைப் பொருளுடையதாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் மாற்றியிருக்கிறோம். இந்த ராணுவத்தை அமைத்ததன் காரணமாக, ஆஜாத் ஹிந்த் (சுதந்திர இந்திய) தற்காலிக சர்க்கார் ஒன்றை அமைப்பது சாத்தியமும் அவசியமும் ஆயிற்று. விடுதலைச் சங்கத்திலிருந்து இந்தச் சர்க்கார் தோன்றியிருக்கிறது; இந்தியாவின் விடுதலைக்காக இறுதிப் போராட்டத்தைத் தொடங்கி நடத்துவது அதன் நோக்கம்.

இந்தத் தற்காலிக சர்க்காரை அமைத்திருப்பதன் வாயிலாக, இந்திய நிலைமையின் தேவைகளை நாம் பூர்த்தி செய்கிறோம்; அதோடு, வரலாற்றின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்கிறோம், சமீபகாலத்தில், 1916-ல், ஐரிஷ் மக்கள் தற்காலிக சர்க்கார் ஒன்றை அமைத்துக்கொண்டனர். சென்ற உலக யுத்தத்தின் போது செக் நாட்டினர் அவ்வாறே செய்தனர்; மற்றும், கடந்த யுத்தத்தின் பின்னர் முஸ்தஃபா கமால்

சுதந்திர இந்திய தற்காலிக சர்க்கார் அமைக்கப்பட்டதும், 1943 அக்டோபர் 28-ந் தேதி சிங்கப்பூரில் வெளியிட்ட அறிக்கை.

தலைமையில் துருக்கியர்கள் அனடோலியாவில் தங்கள் தற்காலிக சர்க்காரை ஏற்படுத்திக்கொண்டனர்.

நம்முடைய ஆஜாத் ஹிந்த் தற்காலிக சர்க்கார் ரானது சாதாரண சமாதானகாலச் சர்க்காராக இராது. அதன் அலுவல்களும் அமைப்பும் அலாதி யானவை. அது ஒரு போராட்ட ஸ்தாபனமாக இருக்கும். இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ்காரர்கள், அவர்களுடைய கூட்டாளிகள் ஆகியோருக்கு எதிராக இறுதி யுத்தத்தைத் தொடங்கி நடத்துவது அதன் பிராதன நோக்கமாகும். ஆகவே, சுதந்திரப் போராட்டத்தைத் தொடங்கி நடத்துவதற்கு வேண்டிய இலாக்காக்களையே அந்த சர்க்கார் கொண்டிருக்கும்.

சர்க்காரின் சிவில் இலாக்காக்களின் பிரதிநிதிகள் சிலரும், ஆயுதப்படைகளின் பிரதிநிதிகளும் மந்திரி சபையில் இருப்பர். சுதந்திரப் போராட்டம் நடத்துவதே சர்க்காரின் நோக்கமாதலால் மந்திரி சபையில் ஆயுதப் படைகளுக்கு அதிகமான பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

மந்திரி சபையின் சாதாரண உறுப்பினர்கள் தவிர, மந்திரி சபைக்குப் பல ஆலோசகர்களை நியமிக்கவும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. இதன் வாயிலாக, கிழக்கு ஆசியாவில் உள்ள இந்தியர் சமூகம் முழுவதனுடனும் தற்காலிக சர்க்கார் நெருக்கமான, இணைப்பான தொடர்புகொண்டு, வரப்போகும் போராட்டத்துக்கு அவர்களுடைய சாதனங்களையெல்லாம் ஒன்று திரட்டும்.

தற்காலிக சர்க்கார் இந்திய பூமிக்குச் செல்லும்போது, சகஜமான சர்க்காரின் அலுவல்களை அது மேற்கொண்டு தன்னுடைய சொந்தப் பிரதேசத்தை நிர்வகிக்கும். அப்போது பல புதிய இலாகாக்கள் ஆரம்பிக்கப்படும்.

ஆஜாத் ஹிந்த் தற்காலிக சர்க்கார் அமைக்கப் பட்டிருப்பதன் மூலம், வெற்றிக்கு வேண்டிய லட்சணங் களையெல்லாம் இந்திய சுதந்திர இயக்கம் பெற்று விட்டது. சுதந்திரத்துக்காக இறுதிப் போராட்டத்தைத் தொடங்குவதுதான் இப்போது பாக்கியிருக்கிறது. இந்திய தேசிய ராணுவம் இந்திய எல்லையைத் தாண்டி, டில்லியை நோக்கித் தன்னுடைய சரித்திரப் பிரசித்த மான முன்னேற்றத்தைத் தொடங்கும்போது அப் போராட்டம் ஆரம்பமாகும். ஆங்கிலோ—அமெரிக்கர் களை இந்தியாவிலிருந்து வெளியேற்றி, புது டில்லியில் உள்ள வைசிராய் மாளிகையில் இந்திய தேசியக் கொடியை ஏற்றும்பொழுதுதான் இந்த முன்னேற்றம் முற்றுப் பெறும்.

இந்திய மக்களின் மாதாவுக்கு அஞ்சலி

ஸ்ரீமதி கஸ்தூர்பா காந்தி காலமாகிவிட்டார். புனாவில், பிரிட்டிஷ் சிறையில் 74-வது வயதில் அவர் உயிர் நீத்தார். தாய்நாட்டில் உள்ள 38.80 கோடி சோதர மக்களுடனும், வெளிநாடுகளில் உள்ள என் தேசத்தினருடனும் நானும் சேர்ந்து கஸ்தூர்பாவின் மறைவினால் ஏற்பட்டுள்ள பெருந்துக்கத்தைப் பகிர்ந்து கொள்கிறேன். சோகமயமான சூழ்நிலையில் அவர் இறந்தார்; ஆனால் அடிமை நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு இதைவிடக் கௌரவமும் பெருமையும் வாய்ந்த முடிவு வேறு இருக்க முடியாது. இந்தியாவின் சொந்த நஷ்டம் இது. ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் மஹாத்மா காந்தி சிறை வைக்கப்பட்டபின், சிறையில் அவர் கண் முன்னாலேயே இறந்த இரண்டாவது சக கைதி கஸ்தூர்பா காந்தி. ஆயுள் முழுவதும் அவருடைய சக ஊழியராகவும் அந்தரங்கக் காரியதரிசியாகவும் இருந்த மகாதேவ தேசாய் முதலில் இறந்தார். இப்போதையச் சிறை வாழ்வில் மஹாத்மா காந்திக்கு ஏற்பட்டுள்ள இரண்டாவது சொந்தத் துஷ்டி இது.

இந்திய மக்களின் மாதாவாக விளங்கிய அந்த மாது சிரோமணிக்கு என்னுடைய பணிவார்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறேன்; துயரத்துக்கு உள்ளாகியிருக்கும் காந்திஜிக்கு என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீமதி கஸ்தூர்பாவை அடிக்கடி நேரில் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவன் நான். அவருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்தியப் பெண்மையின் இலக்கணமாக வலிமையும், பொறுமையும், மௌனமும், தன்னிறைவும் வாய்ந்தவராக—அவர் விளங்கினார். தம்முடைய தாய்நாட்டின் விடுதலைக்காக

அவர் போராடியபோது கோடிக்கணக்கான இந்தியப் புதல்விகளுடன் தொடர்புகொண்டு அவர்களிடையே சஞ்சரித்தார்; அவர்களுக்கு ஆதரிசம் அளித்தார். தென் ஆப்பிரிக்கச் சத்தியாக்கிரக காலத்திலிருந்து சுமார் முப்பது ஆண்டுகளாக அவர் தம்முடைய மகோன்னதக் கணவருடன் சோதனைகளையும் கஷ்டங்களையும் பகிர்ந்து அனுபவித்தார். பலமுறை சிறைவாசம் செய்ததால் அவருடைய உடல்நலம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. ஆனால் 74-வது வயதிலும் சிறை வாழ்வுக்கு அவர் அஞ்சவில்லை. மஹாத்மா காந்தி எப்போது சட்ட மறுப்பு இயக்கம் தொடங்கினாலும், போராட்டத்தின் முன்னணியில் அவரருகே நின்றார் கஸ்தூர்பா—இந்தியப் புதல்விகளுக்கு ஒரு தலைசிறந்த எடுத்துக் காட்டாகவும், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தங்கள் சகோதரிகளுக்குப் பின்னால் தங்கிவிடக்கூடாது என்று இந்தியப் புதல்வர்களுக்கு விடுக்கப்பட்ட ஒரு அறை கூவலாகவும் இது அமைந்தது.

வீரத் தியாகியாகக் கஸ்தூர்பா இறந்துவிட்டார். நான்கு மாதங்களுக்கு மேலாக அவர் இருதய நோயினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனால் வைத்திய காரணங்களுக்காகக் கஸ்தூர்பாவை விடுதலை செய்யும்படி பாரத சமுதாயம் விடுத்த மனிதாபிமான வேண்டுகோளுக்கு ஈவிரக்கமற்ற பிரிட்டிஷ் சர்க்கார் செவி சாய்க்கவில்லை. மஹாத்மா காந்தியைக் கொடிய வேதனைக்குள்ளாக்கி, அவருடைய ஆன்மாவை நசுக்கி, அவரை நிர்ப்பந்தமாய்ப் பணிய வைக்கலாம் என்று பிரிட்டிஷ் சர்க்கார் எதிர் பார்த்ததுபோலும். சுதந்திரம், நீதி, தர்மம் ஆகியவற்றுக்காகப் போராடுவதாய்க் கூறிக்கொண்டு, அதே சமயத்தில் இத்தகைய பச்சைக் கொலை நடத்தும் அந்த மிருகங்களை நான் துச்சமாக மதிக்கிறேன். இந்திய மக்களை அவர்கள்

புரிந்து கொள்ளவில்லை. மஹாத்மா காந்தியை அல்லது பாரத சமுதாயத்தை எவ்வளவு மனச் சித்திரவதைக்கும் உடல் வேதனைக்கும் பிரிட்டிஷ்காரர்கள் உட்படுத்தினுலும் அவர் தம்முடைய நிலையிலிருந்து ஒரு அங்குலம் கூடப் பிறழமாட்டார். பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்றும், நவீன யுத்தத்தின் பயங்கரங்களுக்கு இந்தியாவை உட்படுத்தக்கூடாது என்றும் மஹாத்மா காந்தி கோரினர். இதற்குப் பதிலளிக்கும் விதத்தில், திமிர்பிடித்த பிரிட்டிஷ்காரர்கள் அவரை ஒரு சாதாரணக் குற்றவாளியைப் போல சிறையில் தள்ளினர். அடிமை இந்தியாவில் விடுதலையாக இருப்பதைவிடச் சிறையில் இறப்பதே மேல் என்று அவரும் அவருடைய பத்தினிப் பெருமாட்டியும் தீர்மானித்தனர். தம்முடைய கணவரின் கண்ணெதிரிலேயே கஸ்தூர்பாவை இதய நோயினுல் சாகவைக்க வேண்டும் என்று பிரிட்டிஷ்காரர்கள் உறுதி பூண்டனர். அவர்களுடைய கொடிய ஆசை நிறைவேறி விட்டது; இது கொலையே தவிர வேறல்ல. ஆனுல் வெஞ்சிறையில் கஸ்தூர்பா பரிதாபமாய் இறந்தது தாயகத்திலும் வெளியிலும் உள்ள இந்தியர்களாகிய நமக்கு ஒரு பயங்கர உண்மையை ஞாபகப்படுத்துகிறது —பிரிட்டிஷ்காரர்கள் நெஞ்சில் ஈரமில்லாமல் நம்முடைய தலைவர்களை ஒருவர் ஒருவராக ஒழித்துக்கட்ட உறுதி பூண்டிருக்கிறுர்கள் என்பதே அது. இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்கள் நீடித்திருக்கும்வரை நம்முடைய சமுதாயத்துக்கு எதிரான இந்த அட்டூழியங்களை அடக்க முடியாது. ஸ்ரீமதி கஸ்தூர்பா காந்தியின் மரணத்துக்கு வஞ்சம் தீர்த்துக்கொள்ள இந்தியப் புதல்வர்களுக்கும் புதல்வியர்களுக்கும் ஒரே ஒரு மார்க்கம்தான் இருக்கிறது; இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பூண்டோடு ஒழிப்பதுதான் அந்த வழி.

இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கியுள்ள கிழக்கு ஆசிய இந்தியர்களுக்கு இவ் விஷயத்தில் விசேஷப் பொறுப்பு உண்டு. இங்குள்ள நம்முடைய சகோதரிகள் இந்தப் பொறுப்பில் பங்கு பற்றியுள்ளது குறிப்பிடத் தக்கது. இந்தியாவிலிருந்து கடைசி பிரிட்டிஷ்காரன் விரட்டப்படும்வரை ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவோம் என்ற புனிதப் பிரதிக்ஞையை, துக்கம் நிறைந்த இச் சந்தர்ப்பத்தில், நாம் உறுதி செய்ய வேண்டும்.

இரத்தம் கொடுத்தால் விடுதலை கிடைக்கும்

நண்பர்களே 'முழு ஆயத்தம், சர்வத்தியாகம் என்ற புதிய திட்டம் ஒன்றைப் பன்னிரண்டு மாதங்களுக்கு முன் கிழக்கு ஆசிய இந்தியர்களின் முன் வைத்தோம். கடந்த ஓராண்டுக்காலத்தில் நாங்கள் புரிந்துள்ள சாதனைகளையும், வருகிற ஆண்டிற்கான எங்கள் கோரிக்கைகளையும் இன்று உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். ஆனால் அவ்வாறு செய்யுமுன், நாம் சுதந்திரம் பெறுவதற்கு எத்தகைய பொன்னான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்பதை நீங்கள் மறுபடியும் உணர வேண்டும் என விரும்புகிறேன். உலக வியாபகமான போரில் பிரிட்டிஷ்காரர்கள் இப்போது ஈடுபட்டிருக்கிறார்கள்; இந்தப் போரிலே பலப்பல முனைகளில் அவர்கள் தோல்வியுற்று விட்டனர். இவ்வாறு எதிரி பெரிதும் பலவீன மடைந்திருப்பதால், நம்முடைய சுதந்திரப் போராட்டத்தை ஐந்தாண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட மிகவும் இலகுவாக நாம் நடத்தலாம். இத்தகைய அபூர்வமான, தெய்வாதீனமான வாய்ப்பு ஒரு நூற்றாண்டுக்கு ஒரு முறைதான் வரக்கூடியது. அதனால்தான், நம் தாய் நாட்டைப் பிரிட்டிஷ் விலங்கிலிருந்து விடுவிப்பதற்கு இந்தச் சந்தர்ப்பத்தை முழுக்க முழுக்கப் பயன்படுத்த நாம் சபதம் பூண்டிருக்கிறோம்.

'முழு ஆயத்தத்' திட்டத்தின் பிரகாரம் ஆள்பலம், பணம், பண்டங்கள் ஆகியவற்றை உங்களிடம் கோரினேன். ஆட்கள் போதிய அளவில் ஏற்கனவே சேர்ந்துவிட்டார்கள் என்பதை உங்களிடம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். சீனா, ஜப்பான், இந்தோ-சீனா, பிலிப்பீன்ஸ், ஜாவா, போர்னியோ,

---

* 1944 ஜூலை 4ந் தேதி நிகழ்த்திய உரை

செலிபீஸ், சுமத்ரா, மலேயா, தாய்லாந்து, பர்மா எனக் கிழக்காசியாவின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் நம் படைக்கு ஆட்கள் சேர்ந்திருக்கின்றனர். ஆனால் பர்மாவில் உள்ள இந்திய ஜனத்தொகையைக் கருதும் போது சேர்ந்திருக்கும் ஆட்கள் போதாது என்று ஒரு குறை மாத்திரம் எனக்கு உண்டு. ஆகவே இந்தப் பகுதியிலிருந்து மேலும் ஆட்களைத் திரட்டுவதற்கு நீங்கள் அதிகப்படியாக முயற்சி செய்ய வேண்டும்.

பணம் சம்பந்தப்பட்டவரை, கிழக்கு ஆசிய இந்தியர்கள் மூன்று கோடி தர வேண்டும் என்று நான் கோரியது உங்களுக்கு நினைவிருக்கலாம். ஆனால் நடைமுறையில் அதைவிட மிக அதிகமாகவே கிடைத்து விட்டது; தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதால் வருங்காலத்திலும் பணம் தட்டின்றிக் கிடைத்துவரும் என்று உறுதியாக நம்புகிறேன்.

மனமார்ந்த ஒத்துழைப்பு அளித்ததற்காக உங்களுக்கு நன்றி கூறுகிறேன். அதே சமயத்தில், நாம் இனிச் செய்ய வேண்டிய பணியையும் நீங்கள் கவனிக்க வேண்டுகிறேன்.

ஆள்பலம், பணம், பண்டங்கள் ஆகியவற்றை இன்னும் அதிக விறுவிறுப்புடனும் ஆற்றலுடனும் தொடர்ந்து திரட்ட வேண்டும். குறிப்பாக, சப்ளைகள், போக்குவரத்து வசதி சம்பந்தமான பிரச்சினையைத் திருப்திகரமாகத் தீர்க்க வேண்டும்.

இரண்டாவதாக, விடுதலை செய்யப்படும் பிர தேசங்களை நிர்வகிப்பதற்கும் புனரமைப்பதற்கும் பல வகைப்பட்ட ஆண்களும், பெண்களும் இப்போதைவிட அதிகமாகத் தேவைப்படுகின்றனர். எதிரி, பர்மாவில் செய்ய முயன்றதுபோல, ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தி லிருந்து பின்வாங்குமுன் அப்பிரதேசத்தை நிஷ்டூர

மாகச் சுட்டுப் பொசுக்கிவிட்டு, சிவிலியன் மக்களையும் நிர்ப்பந்தமாக வெளியேற்றுவான்; அத்தகைய நிலைமையைச் சமாளிக்க நாம் தயாராய் இருக்க வேண்டும்.

கடைசியாக நான் சொல்வது மற்ற எல்லாவற்றையும்விட முக்கியமானது—போர் முனைகளுக்கு உதவிப் படைகளையும் சப்ளைகளையும் அனுப்பும் பிரச்சினையே அது. அவைகளை அனுப்பாவிட்டால், போர் முனைகளில் கிடைக்கும் வெற்றிகளை நம்மால் காப்பாற்றிக்கொள்ள முடியாது; இந்தியாவுக்குள் ஊடுருவிப் பிரவேசிக்கவும் முடியாது;

உங்களுள் பின்னணியில் தங்கி வேலை செய்பவர்கள் ஒரு விஷயத்தை மறக்கக்கூடாது. அதாவது, கிழக்கு ஆசியாதான், குறிப்பாக பர்மாதான், நம்முடைய விடுதலை யுத்தத்தின் படைத்தளம். படைத்தளம் பலமாக இல்லாவிடில் நம்முடைய போர்ப்படைகள் ஒருக்காலும் வெற்றிபெற முடியாது. பின்னணியை நீங்கள் சரிவரக் கவனித்துக்கொள்ள வேண்டும் என்பதற்கு இன்னொரு காரணம் இருக்கிறது. அடுத்து வரும் மாதங்களில் நானும், 'மந்திரி சபையின் யுத்தக் கமிட்டி'யில் உள்ள என்னுடைய மற்றச் சகாக்களும் எங்கள் முழுக் கவனத்தையும் போர் முனையிலும், இந்தியாவில் புரட்சியை எழுப்புவதிலும் செலுத்த விரும்புகிறோம். ஆகவே, நாங்கள் இல்லாத நிலைமையிலும் படைத்தளத்தில் அலுவல்கள் சுமுகமாகவும் தடங்கலின்றியும் நடக்கும் என்ற முழுத் திருப்தி எங்களுக்குக் கிடைக்க வேண்டும்.

நண்பர்களே, ஓராண்டுக்கு முன்னால் உங்களிடம் நான் சில கோரிக்கைகளைத் தெரிவித்தபோது, நீங்கள் 'முழு ஆயத்தம்' செய்வதானால் நான் இரண்டாவது போர் முனையைத் தொடங்குவேன் என்று குறிப்

விட்டேன். அந்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டேன், நம்முடைய போரின் முதல் கட்டம் நிறைவேறிவிட்டது. ஜப்பானியத் துருப்புகளுடன் இணைந்து போராடும் நம்முடைய வெற்றிப்படையினர் எதிரியைப் பின்வாங்கச் செய்து, இப்போது நம்முடைய அருமைத் தாய் நாட்டின் புனித பூமியில் தீரமாகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

அடுத்த பணியை நிறைவேற்றக் கச்சை கட்டுங்கள். ஆள், பணம், பண்டங்கள், தருமாறு உங்களிடம் கேட்டேன்; நீங்களும் தாராளமாகக் கொடுத்தீர்கள். அவற்றை விடவும் மேலான ஒன்றைத் தருமாறு இப்போது கேட்கிறேன். ஆள்பலமும், பணமும், பண்டங்களும் மாத்திரம் வெற்றியையோ சுதந்திரத் தையோ பெற முடியாது; வீரதீரச் செயல்கள் புரிவதற்கு ஆதரிசம் அளிக்கக்கூடிய உத்வேகமும் நமக்கு வேண்டும்.

இப்போது வெற்றி நம் கைக்கு எட்டும் தூரத்தில் இருப்பதால், நாம் உயிருடனிருந்து இந்தியா சுதந்திரம் பெறுவதைப் பார்க்க வேண்டும் என்று நீங்கள் ஆசைப்பட்டால் அது மாபெறும் தவறு ஆகும். சுதந்திரத்தை அனுபவிப்பதற்காக உயிரைக் காத்துக் கொள்ள வேண்டும் என்று இங்குள்ளவர்களில் ஏவரும் ஆசைப்படக்கூடாது. இன்னும் ஒரு கடுமையான போராட்டம் காத்திருக்கிறது.

இந்தியா வாழ்வதற்காக நாம் சாக வேண்டும்; சுதந்திரப் பாதையில் உயிர்த் தியாகிகளின் ரத்தத்தைத் தெளிப்பதற்காக பிராணத் தியாகம் செய்வோம் என்ற ஒரே ஒரு ஆசைதான் இன்று நமக்கு இருக்க வேண்டும்

நண்பர்களே! விடுதலை யுத்தத் தோழர்களே! வேறு எதையும்விட முக்கியமான ஒரு பொருளை நான் உங்களிடம் கோருகிறேன்—நீங்கள் இரத்தம் கொடுக்க வேண்டும் என்று கோருகிறேன். எதிரி சிந்தியுள்ள நம்மவரின் இரத்தத்துக்குப் பழிவாங்க நாம் இரத்தம் கொடுக்க வேண்டும். விடுதலைக்கு உரிய விலையை இரத்த மாகக் கொடுக்க வேண்டும். என்னிடம் இரத்தம் கொடுங்கள், உங்களுக்குச் சுதந்திரம் பெற்றுத் தருவதாக வாக்களிக்கிறேன்.

டில்லிக்கு எத்தனையோ வழிகள்

நண்பர்களே நம் தாய் நாட்டின் விடுதலைக்காக போராட்டம் நடத்தி வருகையில் நாம் கனவிலும் எதிர் பார்த்திராத நெருக்கடி ஒன்று நமக்கு நேர்ந்திருக்கிறது. இந்தியாவை விடுதலை செய்வதற்கான உங்கள் புனித முயற்சி தோற்றுவிட்டதாக நீங்கள் நினைக்கக்கூடும். ஆனால் இது ஒரு தற்காலிகத் தோல்விதான் என்று நான் சொல்வேன். நீங்கள் இதுவரை புரிந்துள்ள பெரிய சாதனைகளை எந்தத் தோல்வியாலும் அழிக்க முடியாது. இந்தியா–பர்மா எல்லையிலும், இந்திய எல்லைக்குள்ளும் உங்களில் பலர் சகலவிதமான சோதனைகளையும் கஷ்டங் களையும் அனுபவித்திருக்கிறீர்கள். உங்கள் தோழர்களில் பலர் போர்க்களத்தில் உயிரைப் பலி கொடுத்து சுதந்திர இந்தியாவின் சிரஞ்சீவித் தியாகிகளாகி விட்டனர். இந்த மாபெரும் தியாகம் ஒருக்காலும் வீண்போகாது.

நண்பர்களே! இருள் சூழ்ந்த இந்த நேரத்திலே நீங்கள், ஒரு உண்மையான புரட்சி ராணுவத்தின் பெருமைக்கு ஏற்ப, கட்டுப்பாட்டுடனும் கண்ணியத் துடனும் வலிமையுடனும் நடந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். உங்கள் தீரத்தையும் தியாகத் தையும் ஏற்கனவே போர்க்களத்தில் நிரூபித்துக் காட்டி யிருக்கிறீர்கள். இப்போது, தற்காலிகத் தோல்வி நேர்ந்திருக்கும் இந்த வேளையில், அசையாத நம்பிக்கை யுடனும் மன உறுதியுடனும் இருப்பது உங்கள் கடமை யாகும். கைதாழ்ந்த இந் நிலைமையிலும், நீங்கள் தலை நிமிர்ந்து நிற்பீர்கள் என்பது, முழு நம்பிக்கையுடனும் உறுதியுடனும் எதிர்காலத்தை எதிர் நோக்குவீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

ஜப்பான் சரணாகதி செய்ததைத் தொடர்ந்து, இந்திய தேசிய ராணுவத்தினருக்கு 1945 ஆகஸ்ட் 17உ விடுத்த விசேஷக் கட்டளை.

நண்பர்களே ! நம் தாய் நாட்டில் வாழும் 38 கோடி மக்களும் இந்த நெருக்கடியான நேரத்தில் நம்மையே—இந்திய விடுதலைப் படையின் ஜவான்களாகிய நம்மையே,—நம்பி யிருக்கிறுர்கள் என்பதை நான் அறிவேன். ஆகவே இந்தியாவின்பால் விசுவாசமாக இருங்கள். இந்தியாவின் கதி மோட்சத்தில் உங்களுக்கு உள்ள நம்பிக்கை ஆட்டங் கொடுக்கக்கூடாது. டில்லி செல்ல எத்தனேயோ வழிகள் உண்டு. டில்லிதான் இன்னமும் நம்முடைய குறிக்கோள்; உங்கள் சிரஞ்சீவிச் சகாக்களும் நீங்களும் புரிந்துள்ள தியாகங்கள் நிச்சயமாக நமக்கு வெற்றி தேடித்தரப் போகின்றன. இந்தியாவை இன்னமும் அடிமையாக வைத்திருக்கக் கூடிய சக்தி எதுவும் இந்த உலகில் இல்லே. இந்தியா நிச்சயமாகச் சுதந்திரம் பெறும், அதுவும் விரைவிலேயே பெறும்,

ஜெய் ஹிந்த் !

பாகம் 4: புகழ் மாலைகள்

தேச பக்தியில் முதல்வர் நேத்தாஜி

இ. தே. ராவின் மந்திர சக்தி நம்மை யெல்லாம் மயக்கியுள்ளது, நேத்தாஜியின் நாமம் மிகுந்த சக்தி வாய்ந்தாக உள்ளது. தேச பக்தியில் அவர் முதன்மை வகிக்கிறார் (நான் வேண்டுமென்றே நிகழ்காலத்தை உபயோகிக்கிறேன்.) அவருடைய செயல்கள் எல்லா வற்றிலும் அவரது தீரம் சுடர்விடுகிறது. உன்னதமான குறிக்கோளை அவர் வரித்துக்கொண்டார், ஆனால் தோல்வியுற்றார். எனினும், எவர்தான் தோற்கவில்லை ? உன்னதமான குறிக்கோளை, சிறந்த குறிக்கோளை வரித்துக் கொள்வதுதான் நம் கடமை. வெற்றி பெறும் பாக்கியம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை.

நேத்தாஜி எனக்கு மகன்மாதிரி. காலஞ்சென்ற தேசபந்து தாஸின் துணைவராக, வருங்காலம்பற்றி மிகுந்த நம்பிக்கை அளிப்பவராக இவர் இருந்தபோது அவருடன் எனக்கு அறிமுகம் ஏற்பட்டது. இ. தே. ரா. வினர் அந்நிய பூமியிலிருந்தபோது ஆயுத மேந்திப் போரிட்டபோதிலும், இந்தியாவுக்குத் திரும் பியதும் அஹிம்ஸைப் போர் வீரர்களாக காங்கிரஸின் தலைமையில் நாட்டுப்பணி புரிய வேண்டும் என்று அவர்களுக்குக் கடைசியாக விடுத்த செய்தியில் அவர் குறிப்பிட்டார். தாவாக்களைத் தீர்ப்பதற்கு ஆயுதங்களை உபயோகிக்க வேண்டும் என்பதல்ல இந்தியாவுக்கு இ. தே. ரா. அளிக்கும் படிப்பினை—இந்த வழியைப் பரீட்சித்துப் பார்த்ததில் இதில் உள்ள குறைபாடு புலனாகி யிருக்கிறது.— அஹிம்ஸை, ஐக்கியம், இணைப்பு, ஸ்தாபன அமைப்பு ஆகியவற்றை வளர்க்க வேண்டும் என்பதுதான் அதன் படிப்பினை.

இ. தே. ரா. வினரின் உடனடியான குறிக்கோள் கைகூடாவிடினும், அவர்கள் புரிந்துள்ள சாதனைகள் கணிசமானவை, அவர்களுக்குப் பெருமிதம் அளிக்கக் கூடியவை. இந்தியாவின் சகல மதங்களையும் இனங் களையும் சேர்ந்த ஆட்களை ஒரு கொடியின் கீழ் ஒன்று சேர்த்து, அவர்களுக்கு ஒற்றுமை உணர்வையும் ஒருமை உணர்வையும் ஊட்டி, வகுப்புவாத அல்லது அரசியல் உணர்வுகளையெல்லாம் விலக்கியதுதான் அதன் மிகப் பெரிய சாதனை. நாம் எல்லோரும் பின்பற்ற வேண்டிய எடுத்துக்காட்டு அது.

—மஹாத்மா காந்தி.

தேச நாயகர் சுபாஷ் சந்திரர்

தங்கள் மக்கள் சார்பில் தங்கள் தேசிய வீரர்களுக்குப் புகழ்மாலை சூட்டுவது கீழை நாட்டுக் கவிஞர்களின் வழக்கம். இன்று நான், வங்கத்தின் கவிஞன் என்ற முறையில், உங்களை வங்க மக்களின் புங்கவத் தலைவர் என்று ஏற்றுக் கொள்கிறேன்..........

சுபாஷ் சந்திரா, உங்களுடைய அரசியல் யோக சாதனையின் அருணோதயத்தை நான் கவனித்தேன் அந்த மயக்கொளியில் என் இதயத்தில் சம்சயங்கள் இருந்தன; நீங்கள் இன்று இருப்பதைப்போல அன்று இருந்ததாக எண்ணி ஏற்றுக்கொள்ளத் தயங்கினேன். பலவீனம், தயக்கம் ஆகியவற்றின் ஓரிரு அறிகுறிகள் இடையிடையே உங்களிடம் தென்பட்டபோது வேதனையுற்றேன். இன்றோ, அச்சங்களால் அண்ட முடியாத நண்பகல் கதிரவனின் தூய ஒளியுடன் நீங்கள் காட்சி அளிக்கிறீர்கள்.

கடந்த ஆண்டுகளில் எத்தனையோ விதவிதமான அனுபவங்களை நீங்கள் கிரகித்துக் கொண்டீர்கள். இன்று நீங்கள் முதிர்ந்த உள்ளத்துடனும், அடக்க முடியாத உயிர்ச் சக்தியுடனும் உங்கள் பணியை மேற்கொள்ளுகிறீர்கள். சிறைவாசம், தேசப் பிரஷ்டம், நோய் ஆகியவை உங்கள் வலுவைப் பிய்த்துப் பிடுங்கின; ஆனால் இவை உங்களை ஊனப்படுத்துவதற்குப் பதில் உங்கள் அனுதாப சிரத்தைகளை விரிவுபடுத்தியுள்ளன; குறுகிய பிரதேச எல்லைகளைக் கடந்து சரித்திரம் என்ற விரிந்த காட்சி முழுதையும் தழுவி நிற்குமாறு உங்கள் பார்வையை அவை விசாலப்படுத்தியுள்ளன. தோல்வியாகத் தோன்றியதை இறுதியானதாக நீங்கள் எண்ணவில்லை; அதனால் சோதனைகளையே உங்கள் துணைகளாக மாற்றிக்கொண்டீர்கள்; உங்கள்

மன உறுதி, சொந்தத் தீரம் ஆகியவற்றின் பேராற்றலைப் பின்பற்றுவதுதான் இன்று வங்காளத்தின் தேவை, வேறு எதையும்விட இதுவே தேவை.......

இன்னமும் வெளிவராமல் இருந்த வங்காளத்தின் தலைவருக்கு, வெகுகாலத்துக்கு முன்னால் ஒரு கூட்டத்தில் எனது செய்தியை விடுத்தேன். எத்தனையோ ஆண்டுகள் கழிந்தபின், முழு அங்கீகார ஒளியில் நிற்கும் ஒரு தலைவருக்கு, இந்தக் கூட்டத்தில், இப்போது என் செய்தியை விடுக்கிறேன். என் வாழ்நாள் முடிந்து விட்டது. வரப்போகும் போராட்டத்தில் அவருடன் நான் சேர முடியாமற் போகலாம். தம் நாட்டின் துயரச் சுமையைத் தம்முடையதாக அவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதையும், அவருடைய நாட்டின் விடுதலை என்ற வடிவில் அவருக்கு இறுதிப் பரிசு விரைவில் கிடைக்கப் போகிறது என்பதையும், நான் உணர்ந்து அவருக்கு ஆசி கூறி விடைபெற்றுக் கொள்கிறேன்.

—ரவீந்திரநாத் டாகூர்

இந்தியாவின் வீரப் புதல்வர், புதல்வியர்

நாங்கள் ஆமதுநகர்ச் சிறைக் கோட்டத்தில் அடைபட்டிருந்தபோது, மலேயாவில் இந்திய தேசிய ராணுவம் ஒன்று அமைக்கப் பட்டிருந்ததுபற்றி இலேசாகக் கேள்விப்பட்டோம் அதைப்பற்றி எங்களுக்கு அதிகமாக எதுவும் தெரியாது. உண்மையில், அப்போது இந்தியாவில் மிகச் சிலருக்கே அதைப்பற்றி ஏகதேசம் தெரியும். 1945 ஜூன் மாதம் நாங்கள் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டபின், இந்த ராணுவத் திரட்டல்பற்றி மேற்கொண்டு சில தகவல்களையும் விவரங்களையும் தெரிந்துகொண்டேன். இதில் எனக்கு இயற்கையாகவே சிரத்தை ஏற்பட்டது. ஆனால் அப்போது ஜப்பானிய யுத்தம் நடந்து கொண்டிருந்தது; ஆகவே, நான் கேள்விப்பட்டதைப்பற்றி பகிரங்கமாக எதுவும் சொல்வது சரியல்ல என்று நினைத்தேன். ஜப்பானிய யுத்தம் முடிந்தவுடன் இந்த ராணுவம் பற்றிப் பகிரங்கமாகப் பிரஸ்தாபிப்பதற்கு ஏற்ற தருணம் வந்துவிட்டதாகக் கருதினேன்.

அப்போதுகூட அதிகமான தகவல்கள் என்னிடம் இல்லை. விரிவான காலதேசப் பகைப்புலன், உலக யுத்தத்தின் விளைவுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்த்தால், இந்த ராணுவத்தை அமைத்ததும், அதன் நடவடிக்கைகளும் எந்த அளவுக்குப் பொருத்தமானவை என்பது பற்றியும் என் மனத்தில் தெளிவு இல்லை. ஆனால் அப்போதுகூட, இரண்டு விஷயங்கள்பற்றி என் மனத்தில் எவ்விதச் சந்தேகமும் இல்லை—அதாவது, இந்தியாவின் விடுதலைக்கு உதவ வேண்டும் என்ற பேராவல் காரணமாகவே ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸின் தலைமையில் அந்த ஆடவர்களும் பெண்டிர்களும் செயலாற்றினர்கள்; ராணுவச் சட்டத்தின் நடைமுறை வியாக்கியானம் காரணமாக

அவர்களுள் பெருவாரியானவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டால் அது இந்தியாவுக்கு மிகுந்த துயரத்தை விளைவிக்கும் என்பவையே அவ் விஷயங்கள். இந்தியாவின் ஜீவாதாரமான, தீரப் புதல்வர்கள்—புதல்வியர்களான அவர்களுக்கு மரண தண்டனையோ நீண்டகாலச் சிறைவாசமோ விதிக்கப் படலாம் என்பதாலும், வெகுகாலத்துக்கு ஆற்ற முடியாத ஆழமான காயத்தை இந்தியாவின் உடலில் அது ஏற்படுத்தும் என்பதாலும், அவ்வாறு துயரம் ஏற்படும் என்று நினைத்தேன்......

ஆகவே, அரசியல் பகைப்புலன் ஒருபுறம் இருக்க, இந்த இளைஞர்களையும் யுவதிகளையும் காப்பாற்று வதற்குச் சகல முயற்சியும் செய்ய வேண்டும் என்று உறுதியாக நினைத்தேன். அவ்வாறு நான் தீர்மானித் தது சரியே; ஏனெனில் உடனடியாக நாடு முழு வதிலும் அற்புதமான எழுச்சி ஏற்பட்டது. மூலை முடுக்குகளிலுள்ள கிராமங்கள்கூட திடீரென இ.தே.ரா. வைப்பற்றி அறிந்துகொண்டன– விசாரணையில் இருந்த, அல்லது சிறை வைக்கப்பட்டிருந்த அந்த வீரர்கள் விடுதலையாவதற்கு உருப்படியாக உதவுவதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று எல்லோரும் ஆசைப் பட்டனர். தனி நபர்கள் என்ற முறையில் அவர்கள் எந்த நிலைமையில் உள்ளவர்களாயினும் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் சின்னங்களாக அவர்கள் விளங்கினர். அதனால் இந்திய மக்கள் அற்புத ஒருமைப் பாட்டுடன் இந்த சின்னங்களை ஆதரித்தனர், அவர்களைப் பாதுகாக்க முன் வந்தனர்.

—ஜவாஹர்லால் நேரு

பெருமைக்கு உகந்த
தேச பக்தர்கள்

இ.தே.ரா.வின் கதை இந்தியாவின் இதயத்தையும் கற்பனையையும் கவர்ந்துவிட்டது. அந்தக் கதை இப்போது படிப்படியாக புத்தி பூர்வமாக ஊர்ஜித மாகி வருகிறது. தீரம், கஷ்டங்களைச் சகிக்கும் தன்மை, கட்டுப்பாடு, ஒரு குறிக்கோளுக்காகச் ஸ்தாபனரீதியாக ஒன்றுபடும் பண்பு, அடிமைத் தளையிலிருந்து நம் நாட்டை விடுதலை செய்ய வேண்டும் என்ற ஒடுக்க முடியாத ஆர்வமும் பிரயாசையும், ஆகியவை நிறைந்த அந்த இதிகாசத்தை அறிந்து உள்ளம் உருகாத ஆண், பெண், ஒருவரேனும் உண்டோ? அவர்களுடைய (இ தே.ரா.வின்) தீரம் நிறைந்த தேசபக்தி குறித்தும், இந்தியாவின் சுதந் திரத்தை நிலைக்க வைப்பதற்காக உயிர்த் தியாகம் புரிவதற்கு முன் வந்த அவர்களுடைய மகோன்னதக் கடமை உணர்ச்சி குறித்தும் நாம் பெருமைகொள்வது நியாயமே.

—சரோஜினி நாயுடு

அதி தீவிர தேச பக்தர்

சுபாஷ் சந்திர போஸை முதன் முதலாக 1921–ல் கல்கத்தாவில் நான் சந்தித்தேன். அதன்பின் இருவரும் அவ்வப்போது சந்தித்திருக்கிறோம். 1941 ஜனவரியில் இந்தியாவிலிருந்து அவர் வெளியேறியதற்கு ஒரு வாரத்துக்கு முன்னால் கடைசி முறையாக அவரைப் பார்த்தேன்.

கல்கத்தா நகர சபையின் தலைமை ஆணையாளராக இருந்தபோது தம்முடைய நிர்வாகப் பேராற்றலை அவர் வெளிப்படுத்தினார். கல்கத்தா காங்கிரஸில் தொண்டர்படைத் தளபதி என்ற முறையில் அவருடைய ஆதரிசத் தலைமைப் பண்பு வெளிப்பட்டது.

சுதந்திர வேட்கை முடிவுற்றது. அதில் ஒருவர் அனவரதமும் விழிப்புடன் இருக்க வேண்டும். சுபாஷ் சந்திரபோஸின் வழிமுறைகளை நாம் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிடினும் அவருடைய தேசபக்தி அதி தீவிரமானது என்பதையும், அவருடைய நோக்கங்கள் புனிதமானவை என்பதையும் மறுக்கவே முடியாது. கடல்களையும் கண்டங்களையும் தாண்டிச் சென்று அவர் புரிந்த மாவீர சாகசத்தின் குறிக்கோளும், நாட்டுக்குத் தொண்டாற்றி விடுதலை கொண்டுவர வேண்டும் என்ற ஆர்வமும், தீரச் செயலிலும் வீரச் சாகசத்திலும் அவருக்கு இருந்த ஈடுபாடும், தம் தாய் நாட்டுக்காக அபாயங்களை ஏற்றுக்கொள்வதில் அவர் காட்டிய துணிவும் அபார தைரியமும், இந்தியாவின் வரலாற்றில் இடம் பெற்றுவிட்டன.

எஸ். ராதா கிருஷ்ணன்

தலைசிறந்த புரட்சித் தலைவர்

எவ்வளவு பிரமாதமான ஸ்தாபனம், எத்தகைய அமைப்புத்திறன், எப்பேர்ப்பட்ட தகுதியும் அறிவும்! தன் கையே தனக்குதவி என்று, தன்னந்தனியாக முனைந்து இவ்வளவு பிரம்மாண்டமான ஸ்தாபனத்தை உருவாக்கக்கூடிய மற்றொரு தலைவரைக் காண்பது அரிது. அவருடன் சேர்ந்து, சகலவிதக் கட்டுப்பாடு களுக்கும் தியாகங்களுக்கும் ஒழுங்கு முறைகளுக்கும் உட்பட்டு, அவரை இந்தியாவின் விடுதலை வீரராக ஏற்றுக்கொண்ட அந்த மக்களை எப்படிப் போற்றுவது! நேத்தாஜி புரிந்த தியாகத்துக்கும் தந்நல மறுப்புக்கும் ஈடு இணை இல்லை. நாட்டைவிட்டு வெளியேறுவதில் உள்ள பேரபாயத்தை அவர் பொருட்படுத்தவில்லை; தம் வாழ்க்கையில் அவர் தம்மைப்பற்றிச் சிந்தித்ததே யில்லை; தம்முடைய உயிரை அவர் பொருட்படுத்தியதே யில்லை. தேசியப் புரட்சி, தம் நாட்டின் விடுதலை என்ற ஒரே குறிக்கோள்தான் அவருக்கு. அவர் சென்ற இடங்களிலிருந்தெல்லாம் அவருடைய செய்தி நமக்கு இடையறாமல் வந்து கொண்டிருந்தது. அவருடைய வானொலி உரைகள் நமக்கு வந்து கொண்டிருந்தன, அவருடைய அர்ப்பண வாழ்க்கை இந் நாட்டுக்குப் புத்துயிரும் புதிய சக்தியும் அளித்தது. இ.தே.ரா. விசாரணைகள் நடந்து கொண்டிருந்தபோது, அடக்க முடியாத புரட்சிக் கடல் இந் நாட்டில் கொந்தளித்து எழுந்தது. நாடு முழுவதும் நேத்தாஜியைத் தலைவர் என்று ஏற்றுக்கொண்டது; இந் நாட்டின் தலைசிறந்த புரட்சித் தலைவர் அவர். இந்தியா விடுதலையடைவது உறுதி; அதை அடிமைத் தளையில் இனியும் பிணைத்து வைக்கக்கூடிய சக்தி உலகில் இல்லை என்று அப்போது அவர் விடுத்த செய்தியை நாடு முழுவதும் நம்பி

ஏற்றுக்கொண்டது. அந்த லட்சியத்துக்காக முழு வலிமையுடன் போராட்டத்தை நடத்த எல்லோரும் ஆயத்தமாயினர். இன்றுவரை நேத்தாஜியையே நம்முடைய தனிப் பெருந் தலைவராக மதிக்கிறோம்; மாபெருந் தலைவரும் புரட்சியாளருமான அவர் நமக்கு ஒரு எடுத்துக்காட்டு, மலை விளக்கு.

—லால் பஹாதூர்

தலைசிறந்த புரட்சித் தலைவர்

எவ்வளவு பிரமாதமான ஸ்தாபனம், எத்தகைய அமைப்புத்திறன், எப்பேர்ப்பட்ட தகுதியும் அறிவும்! தன் கையே தனக்குதவி என்று, தன்னந்தனியாக முனைந்து இவ்வளவு பிரம்மாண்டமான ஸ்தாபனத்தை உருவாக்கக்கூடிய மற்றொரு தலைவரைக் காண்பது அரிது. அவருடன் சேர்ந்து, சகலவிதக் கட்டுப்பாடுகளுக்கும் தியாகங்களுக்கும் ஒழுங்கு முறைகளுக்கும் உட்பட்டு, அவரை இந்தியாவின் விடுதலை வீரராக ஏற்றுக்கொண்ட அந்த மக்களை எப்படிப் போற்றுவது! நேத்தாஜி புரிந்த தியாகத்துக்கும் தந்நல மறுப்புக்கும் ஈடு இணை இல்லை. நாட்டைவிட்டு வெளியேறுவதில் உள்ள பேரபாயத்தை அவர் பொருட்படுத்தவில்லை; தம் வாழ்க்கையில் அவர் தம்மைப்பற்றிச் சிந்தித்ததேயில்லை; தம்முடைய உயிரை அவர் பொருட்படுத்தியதேயில்லை. தேசியப் புரட்சி, தம் நாட்டின் விடுதலை என்ற ஒரே குறிக்கோள்தான் அவருக்கு. அவர் சென்ற இடங்களிலிருந்தெல்லாம் அவருடைய செய்தி நமக்கு இடையறாமல் வந்து கொண்டிருந்தது. அவருடைய வானொலி உரைகள் நமக்கு வந்து கொண்டிருந்தன, அவருடைய அர்ப்பண வாழ்க்கை இந் நாட்டுக்குப் புத்துயிரும் புதிய சக்தியும் அளித்தது. இ.தே.ரா. விசாரணைகள் நடந்து கொண்டிருந்தபோது, அடக்க முடியாத புரட்சிக் கடல் இந் நாட்டில் கொந்தளித்து எழுந்தது. நாடு முழுவதும் நேத்தாஜியைத் தலைவர் என்று ஏற்றுக்கொண்டது; இந் நாட்டின் தலைசிறந்த புரட்சித் தலைவர் அவர். இந்தியா விடுதலையடைவது உறுதி; அதை அடிமைத் தளையில் இனியும் பிணைத்து வைக்கக்கூடிய சக்தி உலகில் இல்லை என்று அப்போது அவர் விடுத்த செய்தியை நாடு முழுவதும் நம்பி

ஏற்றுக்கொண்டது. அந்த லட்சியத்துக்காக முழு வலிமையுடன் போராட்டத்தை நடத்த எல்லோரும் ஆயத்தமாயினர். இன்றுவரை நேத்தாஜியையே நம்முடைய தனிப் பெருந் தலைவராக மதிக்கிறோம்; மாபெருந் தலைவரும் புரட்சியாளருமான அவர் நமக்கு ஒரு எடுத்துக்காட்டு, மலை விளக்கு.

—லால் பஹாதூர்

விடுதலையை விரைவுபடுத்தினர்.

உயிரூட்டும் ஆதரிச உணர்வை நமக்குச் சாசுவதச் சொத்தாக நேத்தாஜி விட்டுச் சென்றிருக்கிருர் என்பதையும், இந்தியா சுயராஜ்யம் பெறுவதை குறைந்த பட்சம் பத்தாண்டுக் காலத்துக்காவது, அவர் முன்னுக்குத் தள்ளினுர் என்பதையும் மறக்கமுடியாது. நேத்தாஜியின் லட்சியங்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்த எவரும், அவருடைய அபிலாஷையுடன் அவருடைய சாதனையை ஒப்பிட்டுப் பாரபட்சமின்றி எடை போட்ட எவரும் இவ்வுண்மைகளை மறுக்க முடியாது. எந்தச் சகாப்தத்திலும், எந்தத் தேசத்திலும், லட்சிய வீரர்கள் பெருந்தொகையினராகப் பிறப்பதில்லை. அதிலும், அமளி துமளியும், பண ஆசையும், தந்நலப் பற்றும் நிறைந்த நம் கால உலகில், உயரிய லட்சியத்துக்காகவே உயிர் வாழ்கின்ற உயர் பிறப்பாளர்களைக் காண்பது அருமையினும் அருமை. ஜோதிச் சுடரொளியின் அழைப்புக்குக் கனல் நெஞ்சின் சுடரினுல் விடையளிக்கும் வழியை நமக்குக் காட்டுவதற்காக அவதரிக்கின்ற, ஜோதிப் போதையேறிய பேரொளி ஆன்மாக்களுள் ஒருவர் நேத்தாஜி,

திலீப்குமார் ராய்.

அனுபந்தம்.

அஜாத் ஹிந்த் தற்காலிக சர்க்காரின் பிரகடனம்.

1757–ல் வங்காளத்தில் பிரிட்டிஷ்காரர்களிடம் முதல் முதலாகத் தோல்வி அடைந்த இந்திய மக்கள், அதன்பின் நூறு ஆண்டுகளுக்கு மேலாக இடையருமல், கடுமையான, மூர்க்கமான போராட்டங்களை நடத்தி வந்தனர், இந்த காலகட்டத்தின் வரலாறு நெடுகிலும் ஈடு இணையற்ற வீரம், தந்நலத்தியாகம் ஆகியவற்றின் உதாரணங்கள் செறிந்து கிடக்கின்றன. அந்த வரலாற்றின் ஏடுகளிலே, வங்காளத்தின் ஸிராஜ்—உத்—தௌலா, மோஹன்லால் ; தென் இந்தியாவின் ஹைதர்அலி, திப்பு சுல்தான், வேலுத் தம்பி; மஹாராஷ்டிராவின் அப்பா சாஹிப் பான்ஸ்லே, பேஷ்வா பாஜிராவ் ; அயோத்தியின் ராணி ; பஞ்சாபின் சர்தார் ஷியாம் சிங் அத்தரிவாலா ; மற்றும் ஜான்ஸிராணி லக்ஷ்மிபாய், தாந்தியா தோப்பி, தும்ரானின் மகாராஜா குன்வர் சிங், நாஞ சாஹிப் முதலிய போர் வீரர்கள் அனைவரின் பெயர்களும் பொன் எழுத்துக்களில் நிரந்தரமாகப் பொறிக்கப்பட்டுள்ளன. நம்முடைய துரதிருஷ்டவசமாக, இந்தியா முழுதுக்கும் பிரிட்டிஷ் காரர்கள் ஆபத்தானவர்கள் என்பதை நமது முன்னேர்கள் முதலில் உணரவில்லை; அதனல் பகைவனுக்கு எதிராக அவர்கள் ஒரு ஐக்கிய முன்னணியை அமைத்துக்கொள்ளவில்லை. இறுதியில், எதார்த்த நிலைமையை இந்திய மக்கள் தெரிந்து கொண்டவுடன் அவர்கள் ஒருமுகமாக நடவடிக்கை எடுத்தனர்; 1857–ல் பகதூர்ஷாவின் கொடியின் கீழ், அவர்கள் சுதந்திர புருஷர்களாகத் தங்கள் கடைசி யுத்தத்தை நடத்தினர், அந்த யுத்தத்தின் ஆரம்ப கட்டங்களில் அவர்கள் பிரமாதமான பல வேற்றிகளைப் பெற்றனர் ; ஆயினும்

துரதிஷ்டம் காரணமாகவும் தலைமையின் குறைபாடு கள் காரணமாகவும் அவர்கள் படிப்படியாக வீழ்ச்சி யுற்று அடிமைத்தனத்துக்கு ஆட்பட்டனர் என்றுலும், ஜான்ஸி ராணி, தாந்தியா தோப்பி, குன்வர் சிங், நானு சாஹிப் போன்ற வீரர்கள் நாட்டு மக்களின் நினை விலே நிரந்தரத் தாரகைகளாக நிலைத்து நின்று, மூன்னி லும் மகத்தான தியாகங்களையும் தீரச் சாகசங்களையும் நாம் புரிவதற்கு ஆதரிசம் அளித்துக் கொண்டிருக் கின்றனர்.

1857-க்குப் பின்னர் நிர்ப்பந்தமாக நிராயுதபணிக ளாக்கப்பட்டு, பயங்கரத்துக்கும் மிருகத் தனத்துக்கும் உட்படுத்தப்பட்ட இந்திய மக்கள் சிறிதுகாலம் சோர்ந்து கிடந்தனர். ஆனுல் 1885–ல் இந்திய தேசிய காங்கிரஸ் பிறந்தபோது ஒரு புதிய விழிப்பு ஏற்பட்டது. 1885–ல் தொடங்கி முதலாவது உலக யுத்த முடிவு வரை, இந்திய மக்கள் தாங்கள் இழந்த சுதந்திரத்தை மீட்பதற்காகச் சாத்தியமான எல்லா வழிகளிலும்—கிளர்ச்சி, பிரசாரம், பிரிட்டிஷ் பண்டங்களின் பகிஷ் காரம், பயங்கரவாதம், நாசவேலை, இறுதியில் ஆயுத மேந்திப் புரட்சி என்ற வழிகளில்—முயன்று பார்த் தனர். ஆனுல் இந்த முயற்சிகள் எல்லாம் சிலகாலம் வரை தோல்வியுற்றன. தோல்வி யுணர்ச்சியால் அலைக் கழிக்கப்பட்ட இந்திய மக்கள் ஒரு புது வழியை நாடித் துழாவிக் கொண்டிருக்கையில், 1920–ல் மஹாத்மா காந்தி தோன்றினுர்; ஒத்துழையாமை, சட்ட மறுப்பு என்ற புதிய ஆயுதத்துடன் அவர் வந்தார்.

அதன் பின்னர் இருபது ஆண்டுக்காலமாக தீவிரத் தேசாபிமானச் செயல்களில் இந்திய மக்கள் ஈடுபட் டிருந்தனர். சுதந்திரம் என்ற கருத்து ஒவ்வொரு இந்திய இல்லத்தையும் எட்டியது. சுதந்திரத்துக்காகத் துன்பப் படவும், தியாகம் செய்யவும், உயிரைக் கொடுக்கவும்

தொண்டர்களின் உதாரணங்கள் வாயிலாக மக்களுக்குப் போதிக்கப்பட்டது. தலைமையிடத்திலிருந்து மூலை முடுக்குகளில் உள்ள கிராமங்கள்வரை, மக்கள் ஒரே அரசியல் ஸ்தாபனமாகப் பிணைக்கப்பட்டனர். இவ்வாறு, இந்திய மக்கள் அரசியல் உணர்வு பெற்றது மாத்திரம் அன்றி, ஒரு அரசியல் அமைப்பாகவும் மறுபடி ஒன்று சேர்ந்தனர். இப்போது அவர்கள் ஒரே குரலுடன் பேச முடிந்தது. ஒரு பொதுக் குறிக்கோளுக்காக ஒரே உள்ளத்துடன் உழைக்க முடிந்தது. தங்கள் விவகாரங்களை நிர்வகித்துக்கொள்ளத் தாங்கள் தயாராக யிருப்பதை, அதற்கான ஆற்றல் பெற்றிருப்பதை, 1937 முதல் 1939 வரை, எட்டு மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகளின் சாதனைமூலம் அவர்கள் நிரூபித்துக் காட்டினர்.

இவ்வாறு, இப்போதைய உலகயுத்தம் தொடங்குவதற்குச் சற்று முன்னால், இந்திய விடுதலைக்கான இறுதிப் போராட்டத்தைத் தொடங்குவதற்குக் களம் தயாராகிவிட்டது. இந்த யுத்தத்தில் ஐரோப்பாவில் நம்முடைய எதிரியை ஜெர்மனி தன்னுடைய நேச நாடுகளின் உதவியுடன் அடித்து நொறுக்கி நிலைகுலையச் செய்துவிட்டது; அதே சமயத்தில், கிழக்கு ஆசியாவில், நிப்பன் (ஜப்பான்) தன்னுடைய நேச நாடுகளின் உதவியுடன் நம்முடைய எதிரியை அடித்துக் கிடத்திவிட்டது. மிகமிக மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பச் சேர்க்கையின் ஆதரவு காரணமாக, இந்திய மக்கள் தங்கள் தேசிய விடுதலையைச் சாதிப்பதற்கு ஒரு அற்புதமான வாய்ப்பு இப்பொது கிடைத்திருக்கிறது.

சமீபகால வரலாற்றிலேயே முதன் முறையாக, வெளி நாடுகளில் வாழும் இந்தியர்களும் அரசியல் எழுச்சி பெற்று ஒரு ஸ்தாபனமாக ஒன்றுபட்டுள்ளனர்,

தாய் நாட்டில் உள்ள தம்மவர்களைப் போன்ற அதே சிந்தனையையும் உணர்ச்சியையும் அவர்கள் கொண்டிருப்பதுடன், சுதந்திரப் பாதையில் அவர்களுக்குச் சமமாக நடைபோட்டுச் செல்கின்றனர். குறிப்பாகக் கிழக்கு ஆசியாவில் இறுபது லட்சத்துக்கு மேற்பட்ட இந்தியர்கள், 'முழு ஆயத்தம்' என்ற கோஷத்துடன் உறுதியான படைவரிசையாக இப்போது இணைந்து நிற்கின்றனர். அவர்களுக்கு முன்னால் இந்திய விடுதலைப் படையின் வீரர்கள், '' டில்லி சலோ '' என்ற கோஷத்துடன் செறிந்து நிற்கின்றனர்.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தங்கள் அயோக்கியத் தனத்தினால் இந்தியர்களை விரக்தி நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறார்கள்; தங்கள் சுரண்டலாலும் கொள்ளையினாலும் அவர்களைப் பட்டினி, சாவு என்ற அவலங்களுக்கு உட்படுத்தி யுள்ளனர். இவை காரணமாக அவர்கள் இந்திய மக்களின் நல்லெண்ணத்தை அடியோடு இழந்து, இப்போது உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கின்றார்கள்: அந்தத் துன்ப ஆட்சியை அடியோடு அழிப்பதற்கு ஒரு தீச்சுடர் மாத்திரம் போதும். அந்தச் சுடரை ஏற்றி வைப்பதுதான் இந்திய விடுதலைப் படையின் பணி. இந்திய விடுதலைப்படை பிரதானமாகத் தன் பலத்தையே சார்ந்திருப்பதாலும், தாயகத்தில் உள்ள சிவில் மக்களின் அமோக ஆதரவும், பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தின் பல பிரிவுகளுடைய ஆதரவும் அதற்கு நிச்சயமாகக் கிடைக்கும் என்பதாலும், வெல்ல முடியாதவையும் தீரம் மிகுந்தவையுமான வெளி நேச நாடுகளின் பின்பலம் இருப்பதாலும், தன்னுடைய சரித்திர பூர்வமான கடமையை நிறைவேற்ற முடியும் என்று அந்தப்படை உறுதியுடன் நம்புகிறது.

சுதந்திர உதயம் நெருங்கிவிட்டதால், இப்போது தங்களுடைய சொந்த தற்காலிக சர்க்கார் ஒன்றை

அமைத்து, அந்த சர்க்காருடைய கொடியின் கீழ் கடைசிப் போராட்டத்தைத் தொடங்குவது இந்திய மக்களின் கடமையாகும். ஆனால் இந்தியத் தலைவர்கள் அனைவரும் சிறையில் இருப்பதாலும், தாயகத்தில் உள்ள மக்கள் முற்றிலும் நிராயுதபாணிகளாக இருப்பதாலும், இந்தியாவுக்குள் ஒரு தற்காலிக சர்க்காரை அமைப்பதோ அந்த சர்க்காரின் தலைமையில் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்குவதோ சாத்தியமல்ல. ஆகவே தாயகத்திலும் வெளி நாடுகளிலும் உள்ள தேச பக்த இந்தியர்கள் அனைவரது ஆதரவுடன் இந்தப் பணியை ஏற்பது கிழக்கு ஆசியாவில் உள்ள இந்திய விடுதலைச் சங்கத்தின் கடமையாகிறது—அதாவது, ஆஜாத் ஹிந்த் (சுதந்திர இந்தியா) தற்காலிக சர்க்கார் ஒன்றை அமைத்து, விடுதலைப் படையின் (அதாவது, ஆஜாத் ஹிந்த் ஃபௌஜ் அல்லது இந்திய தேசிய ராணுவம்) உதவியுடன் கடைசிப் போராட்டத்தை நடத்த அந்தச் சங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

கிழக்கு ஆசியாவில் உள்ள இந்தியச் சுதந்திரச் சங்கத்தினால் ஆஜாத் ஹிந்த் சர்க்காராக உருவாக்கப்பட்டுள்ள நாங்கள், எங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பை முற்றிலும் உணர்ந்து, எங்கள் கடமைகளைச் செய்யத் துவங்குகிறோம். எங்கள் பணியையும், நம் தாய் நாட்டை விடுதலை செய்வதற்கான எங்கள் போராட்டத்தையும் வாழ்த்தும்படி கடவுளைப் பிரார்த்திக்கிறோம். தாய் நாட்டின் விடுதலை, அதன் நல்வாழ்வு, வையத்து நாடுகளிடையே அதன் நிலையை உயர்த்துதல் என்ற லட்சியத்துக்காக எங்கள் உயிர்களையும், ஆயுத மேந்திய எங்கள் தோழர்களின் உயிர்களையும் இதன் மூலம் அர்ப்பணிக்கிறோம்.

பாரத பூமியிலிருந்து பிரிட்டிஷ்காரர்களையும் அவர்களுடைய கூட்டாளிகளையும் வெளியேற்றுவதற்காகப்

போராட்டத்தைத் தொடங்கி நடத்துவது தற்காலிக சர்க்காரின் பணியாக இருக்கும், பின்னர் இந்திய மக்களின் விருப்பத்துக்கும் நம்பிக்கைக்கும் உகந்த நிரந்தர ஆஜாத் ஹிந்த் தேசிய சர்க்காரை அமைப்பது தற்காலிக சர்க்காரின் அடுத்த பணியாகும். பிரிட்டிஷ்காரர்களும் அவர்களுடைய கூட்டாளிகளும் வெளியேற்றப் படும்வரையும், இந்திய மண்ணில் நிரந்தர ஆஜாத் ஹிந்த் தேசிய சர்க்கார் அமைக்கப்படும்வரையும், நாட்டின் விவகாரங்களை இந்திய மக்களின் தர்மகர்த்தாவாகத் தற்காலிக சர்க்கார் நிர்வகித்து வரும்.

ஒவ்வொரு இந்தியரின் விசுவாசத்தையும் பெறுவதற்குத் தற்காலிக சர்க்காருக்கு உரிமை உண்டு, அந்த உரிமையை அது இப்போது வகிக்கிறது. தன்னுடைய பிரஜைகள் அனைவருக்கும் மத சுதந்திரம், சம உரிமைகள், சம வாய்ப்புகள் ஆகியவற்றுக்கு அது உத்தரவாதம் அளிக்கிறது. தேசிய சமுதாயம் முழுவதன், மற்றும் அதன் சகல பாகங்களின் மகிழ்ச்சி, சுபிட்சம் ஆகியவற்றுக்குப் பாடுபடவும், தேசிய சமுதாயத்தின் சகல குழந்தைகளையும் பேணிப் பாதுகாக்கவும், கடந்தகாலத்தில் அந்நிய சர்க்கார் தந்திரமாக வளர்த்துவிட்ட எல்லா வேற்றுமைகளையும் புறக்கணிக்கவும உறுதியாகத் தீர்மானித்திருப்பதை அது பிரகடனம் செய்கிறது.

எங்கள் பதாகையின் கீழ் ஒன்றுதிரண்டு, இந்தியாவின் சுதந்திரத்துக்காகத் தாக்குதலில் இறங்குமாறு, கடவுளின் பெயராலும்; இந்திய மக்களை ஒரு தேசிய சமுதாயமாக இணைத்த மூதாதையர்களின் பெயராலும், வீரம், தந்நலத் தியாகம் என்ற வளமுறையை நமக்குப் பிதிரார்ஜிதமாக வழங்கியுள்ள காலஞ்சென்ற வீரர்களின் பெயராலும், இந்திய மக்களை அழைக்கிறோம். இந்திய மண்ணிலிருந்து பகைவனை வெளியேற்றி,

இந்திய மக்கள் மீண்டும் சுதந்திர நாட்டினராகும்வரை, இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ்காரர்கள், அவர்களுடைய கூட்டாளிகள் ஆகியோருக்கு எதிராக இறுதிப் போராட்டத்தைத் தொடங்கும்படியும், இறுதி வெற்றியில் முழு நம்பிக்கையோடு அந்தப் போராட்டத்தைத் தீரத்துடனும் விடா முயற்சியுடனும் நடத்தும்படியும் அவர்களை (இந்திய மக்களை) அழைக்கிறோம.

ஆஜாத் ஹிந்த் தற்காலிக சர்க்கார் சார்பில் ஒப்பமிட்டவர்கள் ;—

சுபாஷ் சந்திர போஸ் - (ராஜாங்க அதிபர், பிரதம மந்திரி, யுத்தம்—வெளி விவகார மந்திரி) ;

காப்டன் ஸ்ரீமதி லக்ஷ்மி—(பெண்கள் ஸ்தாபனம்) ;
எஸ். ஏ. ஐயர்—(விளம்பரம், பிரசாரம்) ;
லெப்—கர்னல்—ஏ. ஸி. சட்டர்ஜி—(நிதி) ;

லெப். கர்னல்—அஜீஸ் அஹமத்,
லெப். கர்னல்—என். எஸ் பகத்,
லெப். கர்னல்—ஜே. கே. பான்ஸ்லே,
லெப். கர்னல்—குல்ஜாரா சிங்,
லெப். கர்னல்—எம். இஜட். கியானி,
லெப். கர்னல்=ஏ. டி- லோகநாதன்,
லெப். கர்னல்=எஸான் காதிர்,
லெப். கர்னல்—ஷா நீவாஸ் கான்,
} ஆயுதப் படைகளின் பிரதிநிதிகள்.

ஏ. எம். சஹாய்=(காரியதரிசி—மந்திரி அந்தஸ்துடன்);
ராஷ் பிஹாரி போஸ்—(பிரதம ஆலோசகர்) ;

கரீம்கனி, தேவ்நாத் தாஸ்,
டி. எம், கான். ஏ. எல்லப்பா,
ஜே. திவி, சர்தார் ஈஷார்சிங்,
} (ஆலோசகர்கள்)

ஏ. என். சர்க்கார்—(சட்ட ஆலோசகர்).
சிங்கப்பூர், அக்ட், 21, 1943.

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்
தகவல் - ஒலிபரப்பு அமைச்சகம்
பட்டியாலா ஹவுஸ், புதுடில்லி-1
கிளை : சாஸ்திரி பவன், ஹேடோஸ்ரோட்,
நுங்கம்பாக்கம், சென்னை-6.